போர்நிறுத்தம் அல்லாத பிரதேசத்தில் தாக்குதல்
சிரியாவில் 28 பேர் சாவு
பக்.14 - 15

விலை ரூபா 20
பக்கங்கள் 28

# உதயன்

35c - 29c
தெளிவான வானிலை

சுடர் 31 | கதிர் 163 | வள்ளுவர் ஆண்டு 2047 | சித்திரை 24, சனிக்கிழமை 07.05.2016

# குடாநாட்டு மக்களின் வாழ்வியல் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றதா?

## சந்தேகம் வெளியிடுகின்றார் யாழ். ஆயர் ஜஸ்ரின் ஆண்டகை குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த அணி திரளுமாறும் அழைப்பு



யாழ்ப்பாணம், மே 7
யாழ்.குடாநாட்டில் அண்மைக் காலமாகக் குற்றச் செயல்கள் கட்டுக்கடங்காமல் அதிகரித்து வருகின்றன.குடாநாட்டு மக்களின்வாழ்வியல்திட்டமிட்டுஅழிக் கப்பட்டு வருகின்றதா? என்ற ஐயத்தை இந்தச் சம்பவங்கள் தோற்றுவித்துள்ளன.
இவ்வாறு யாழ். மறை மாவட்ட ஆயர்கலாநிதிஜஸ்ரின்பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தெரிவித்துள்ளார்.
எனவே இந்தச் சமுதாய அவல நிலை உடனடியாக நிறுத்தப் பக். 25

"குற்றச் செயல்களைத் தடுப்பது என்பது ஒட்டு மொத்த சமூகத்தின் விழிப்புணர்விலேயே தங்கியுள்ளது. அக்கம் பக்கத்தில் இடம்பெறும் போது வெறுமனே பார்த்துக் கொண்டிராது, இது தொடர்பில் தமது எதிர்ப்பை வெளிக்காட்ட வேண்டிய பொறுப்பு சமூகத்துக்கு உள்ளது."

## திடீர்க் கைதுகளைக் கண்டித்து கிழக்கில் நேற்றும் போராட்டம்




அம்பாறை, மே 7
முன்னாள் போராளிகள் கைது செய்யப்படுவதைக் கண்டித்தும், நல்லிணக்கத்தை முறியடிக்கும் வெள்ளை வான் கடத்தல்களை நிறுத்தக் கோரியும், கிழக்கு மாகாண காணாமற்போனோர் குடும்பங்களின் ஒன்றியத்தால் முன்னெடுக்கப்பட்டுவரும் கவன வீர்ப்புப் போராட்டம் நேற்று மட்டக் களப்பில் நடைபெற்றது.
நேற்றுமுன்தினம் அம்பாறையில் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெற்றிருந்த நிலையில், நேற்றுக் காலை மட்டக் களப்பில் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.
காந்தி பூங்காவில் ஆரம்பமான இந்தக் கவனவீர்ப் புப் போராட்டம் பக். 25

முச்சந்தி முரளி



அப்ப துப்பாக்கியுடனும் வெளிக் கிட்டினம்...

## வடக்கில் படையினர் வசமுள்ள காணிகள் தொடர்பில் ஆராய்வு

யாழ்ப்பாணம், மே 7
வடக்கு , கிழக்கு மாகாணங்களில் படையினர் வசம் உள்ள நிலங்களை விடுவிப்பது தொடர்பான கலந்துரையாடல் நேற்றையதினம் ஜனாதிபதியின் செயலாளர் அபயக்கோன் தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.
குறித்த கலந்துரையாடலில், தற்போது படையினரிடம் உள்ள பக். 25

## ஜோசப் இராணுவ முகாமுக்குள் சோதனை நடத்திய ஐ.நா.நிபுணர்

### சித்திரவதைக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில்

கொழும்பு, மே 7
இலங்கைக்கு வந்துள்ள ஐ.நா.வின் சிறப்பு அறிக்கையாளர் ஜுவான் மென்டஸ், வவுனியா ஜோசப் இராணுவ முகாமில் சோதனைகளை நடத்தியுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.
வன்னிப் படைகளின் தலைமையகமாக இயங்கும், ஜோசப் படை முகாமில், இரகசியமாகப் பலர் பக். 25

## மே 18 நினைவேந்தல் நிகழ்வு முள்ளிவாய்க்காலில் நடக்கும்

### ஏற்பாடு செய்கிறது வடக்கு அரசு

யாழ்ப்பாணம், மே 7
2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் இறுதிப் போரில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களுக்கான மே- 18 நினைவேந்தல் நிகழ்வு, வடக்கு மாகாண சபையினால் இம்முறையும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
முல்லைத்தீவு - முள்ளி வாய்க்கால் பக். 23

## 12 அகதிகளை திருப்பியனுப்பிய ஆஸ்திரேலியா

கொழும்பு, மே 7
கொக்கோஸ் தீவில் இருந்து, ஆஸ்திரேலிய அரசினால் இரவோடு இரவாகத் திருப்பி அனுப்பப்பட்ட 12 அகதிகளும் நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.
இவர்கள் கைது செய்யப்பட்டுக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.
இவ்வாறு கைது செய்யப்பட்ட 12 பேரில், பெண் ஒருவரும் இரண்டு சிறுவர்களும் அடங்கியுள்ளனர்.
இலங்கையிலிருந்து பக். 24

## பூநகரியில் மக்களின் காணிகள் ராணுவத்துக்குப் பறிக்க ஏற்பாடு

### நில அளவைப் பணிகள் திங்களன்று

கிளிநொச்சி,மே 7
பொதுமக்கள், அரசியல் தலைவர்களின் கடுமையான எதிர்ப்பையும் மீறி, பூநகரி-பரமன் கிராய் பகுதியில் உள்ள பொதுமக்களின் காணிகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை இராணுவத்தினருக்காகச் சுவீகரிக்கப்படவுள்ளன.
பரமன்கிராயில் உள்ள பொது மக்களின் 6 காணிகளே இவ்வாறு பக். 25

## வாக்கெடுப்புச் சர்ச்சை; சபையில் நேற்று அமளி

கொழும்பு, மே 7
55 மில்லியன் ரூபா பெறுமதியான குறை நிரப்புப் பிரேரணை மீதான வாக்கெடுப்பு உரிய முறையில் இடம்பெற்றதா? இல்லையா? பிரேரணை நிறைவேற்றப்பட்டதா? இல்லையா? என்பது தொடர்பில் ஆளும் மற்றும் எதிர்த்தரப்பினருக்கிடையே நேற்றுக் பக். 24

## வாக்கெடுப்பு மோசடி; ஆராய நால்வர் குழு

கொழும்பு, மே 7
இரண்டு மேலதிக வாக்குகளால் நேற்றுமுன்தினம் நிறைவேற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்ட குறைநிரப்புப்பிரேரணை மீதான வாக்கெடுப்பு உரிய முறையில் நடத்தப்பட்டதா? இல்லையா? அறிவிக்கப்பட்ட முடிவு சரியா? தவறா? என்பதை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க நால்வர் அடங்கிய குழுவை சபாநாயகர் நேற்று பக். 25

## புலனாய்வாளர்களென அச்சுறுத்தி துப்பாக்கி முனையில் கொள்ளை

### பரந்தனில் நேற்று அதிகாலை சம்பவம்

கிளிநொச்சி மே 7
அரச புலனாய்வாளர்கள் என்று தம்மை அடையாளப்படுத்திய 4 பேர் கொண்ட இனந்தெரியாத குழுவினர், துப்பாக்கி மற்றும் கூரிய ஆயுதங்களைக் காட்டி பணம், நகைகளைக் கொள்ளையடித்துள்ளனர்.
இந்தச் சம்பவம் கிளிநொச்சி- பெரியபரந்தன் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.
கரடிப்போக்குச் சந்தியில் இருந்து இரண்டரைக் கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள பெரிய பரந்தன் பகுதியில் உள்ள வீடு ஒன்றில், நேற்று அதிகாலை ஐந்து மணியளவில் துப்பாக்கி மற்றும் கூரிய ஆயுதங்களுடன் புகுந்த இனந்தெரியாத நபர்கள், வீட்டில் இரண்டு மகள்கள் மற்றும் பேர்த்தியுடன் இருந்த வயோதிபரை மிரட்டியுள்ளனர். பக். 24

## சோனியா, ராகுல் மன்மோகன் கைது

புதுடில்லி, மே 7
இந்திய மத்திய அரசுக்கு எதிராகப் பேரணியாகச் சென்று நாடாளுமன்றத்தை முற்றுகையிட முயன்ற காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, துணைத் தலைவர் ராகுல் காந்தி மற்றும் முன்னாள் பிரதமர் மன்மோகன்சிங் உள்ளிட்டோரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.
நேற்றுக் காலை புதுடில்லி, ஜந்தர் மந்தர் பகுதியில் பக். 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதுபானச் சாலைகள் இரு நாள்கள் பூட்டு

யாழ்ப்பாணம், மே 7

வெசாக் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 21 ஆம், 22 ஆம் திகதிகளில், அனைத்து மதுபானச் சாலைகள், இறைச்சிக் கடைகள் என்பனவற்றை மூடுமாறு அரசினால் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட செயலர் மற்றும் மாநகர சபை ஆணையாளர் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

'வெசாக்கின் புனிதத்தை மனதால் அனுபவிப்போம், மதுவைத் தவிர்ப்போம்' எனும் தொனிப் பொருளில் மே மாதம் 18 ஆம் திகதி முதல் மே 24 ஆம் திகதி வரை வெசாக் வாரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே 21 மற்றும் 22 ஆம் திகதிகளில் அனைத்து மதுபானச் சாலைகள், இறைச்சிக் கடைகள், இறைச்சி வெட்டும் நிலையங்கள், பந்தயம், கழகங்கள் மற்றும் சூதாட்ட நிலையங்கள், களியாட்ட நிலையங்கள் ஆகியவற்றை மூடவேண்டும்.

அத்துடன் சிறப்பு அங்காடிகளில் இறைச்சி வெட்டுதல் மற்றும் இறைச்சி விற்றல் என்பன தடை செய்யப்படவேண்டும் எனவும் யாழ். மாவட்ட செயலர் நா.வேதநாயகன் மற்றும் மாநகரசபை ஆணையாளர் பொ.வாகீசன் ஆகியோர் மேலும் தெரிவித்துள்ளனர். (த-ஐ-ரி)

## வாகனத்தில் மாடேற்றிய யாழ்.வாசிக்கு அபராதம்

அனுமதிப் பத்திரமின்றி வாகனத்தில் மாடு ஏற்றிச் சென்ற யாழ்ப்பாண வாசிக்குச் சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முன்தினம் 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இவர் தென்மராட்சி தெற்கு, மறவன்புலவுப் பகுதியில் மாடு கொள்வனவு செய்து வாகனத்தில் ஏற்றிவந்தபோது, அந்தப் பகுதியில் கடமையிலிருந்த சாவகச்சேரிப் பொலிஸாரிடம் வசமாக மாட்டிக் கொண்டார்.

அனுமதிப் பத்திரமின்றி வாகனத்தில் மாடு ஏற்றிச் சென்றார் என பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த நீதிவான் குறித்த நபருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து, மாட்டை அதன் உரிமையாளரிடம் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (த-ஐ-9)

# யாழ். பல்கலைக்கழக சுற்றாடலில் வன்முறைக் கும்பல் அட்டகாசம்

## வீதியால் சென்றவர்களை அச்சுறுத்தி பணம் மற்றும் கைபேசிகளும் பறிப்பு

யாழ்ப்பாணம், மே 7

யாழ்.பல்கலைக்கழக சுற்றாடலில் இலக்க தகடற்ற மோட்டார் சைக்கிளில் வன்முறைக் கும்பல் ஒன்று நேற்றுமுன்தினம் இரவு வர்த்தக நிலையப் பணியாளர்கள் மற்றும் வீதியால் சென்றவர்களை வாள் , கோடரி என்பனவற்றினால் அச்சுறுத்தி பணம் மற்றும் கைபேசி என்பனவற்றை அபகரித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் இரவு 10.45 மணியளவில் பல்சர் ரக மோட்டார் சைக்கிளில் முகத்தை கறுப்புத் துணியால் கட்டிக்கொண்டு வாள், கைகோடரி மற்றும் கம்பிகளுடன் வந்த 3 பேர், கலட்டி -இராமநாதன் வீதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் நின்றவர்களை அச்சுறுத்தியுள்ளனர்.

அத்துடன் குறித்த பகுதியிலிருந்த வங்கி ஒன்றின் தானியங்கி பணப்பரிமாற்றல் இயந்திரத்தில் பணம் எடுக்க வந்திருந்த பல்கலைக்கழக மாணவர்கள் இருவரை அச்சுறுத்தி, அவர்களின் பணம் மற்றும் கைபேசிகள் ஆகியவற்றைப் பறித்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக கோப்பாய் மற்றும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையங்களுக்கு பொதுமக்களால் அறிவிக்கப்' பட்டபோதும், காலதாமதமாகவே பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்துள்ளனர்.

இதனால் வன்முறையில் ஈடுபட்ட கும்பல் தப்பிச் சென்றுள்ளது.

இதேவேளை நேற்றைய தினம் மேற்படி இராமநாதன் வீதியில் உள்ள மோட்டார் சைக்கிள் திருத்தகம் ஒன்றில் இருந்தவர் மீதும் வாள்வெட்டு நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-வ-101)

# இணைந்த நேர அட்டவணை இல்லையெனில் போராட்டம்

## வட இலங்கைத் தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் 16 ஆம் திகதி வரை காலக்கெடு

யாழ்ப்பாணம், மே 7

வடக்கில் இணைந்த போக்குவரத்துச் சேவையை நடைமுறைப்படுத்துவதில் இன்னமும் இழுபறி நிலவுகிறது. எனவே எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் இணைந்த நேர அட்டவணை நடைமுறைக்கு வரத் தவறின், எதிர்வரும் 16 ஆம் திகதியிலிருந்து தொடர்ந்து பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

இது குறித்து விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அண்மைக் காலமாக இலங்கைப் போக்குவரத்துச் சபையின் அதிகரித்த போக்குவரத்துச் சேவையால் பாதிப்படைந்த தனியார் தூரசேவைப் பேருந்து உரிமையாளர்களின் முறைப்பாடு தொடர்பாக வடக்கு மாகாணப் போக்குவரத்து அமைச்சர் ஆராய்ந்திருந்தார்.

ஏற்கனவே நடைமுறையில் இருந்த தனியாருக்கு 60 வீதமும் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு 40 வீதமும் என்ற அடிப்படையில் இணைந்த நேர அட்டவணையை தயாரிப்பதற்காக வடக்கு மாகாணத்தின் 5 மாவட்ட செயலகக் கணக்காளர்கள், தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத் தலைவர்கள், வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்களின் சங்க நிர்வாகிகள், இலங்கைப் போக்குவரத்துச் சபையின் அதிகாரிகள் ஆகியோரை மிகவும் சிரமத்தின் மத்தியில் அழைத்து கிட்டத்தட்ட 30 இற்கும் மேற்பட்ட அமர்வுகள் இதுவரை நடத்தப்பட்டுள்ளன. அவர்களின் ஆலோசனையுடன் இணைந்த நேர அட்டவணை தயாரிக்கப்பட்டது.

இது தொடர்பில் கடந்த மாதம் 19 ஆம் திகதி நடைபெற்ற இறுதிக் கூட்டத்தில் நேர அட்டவணையில் சில திருத்தங்கள் செய்து இரு சாராரின் சம்மதத்துடன் கடந்த முதலாம் திகதி புதிய நேர அட்டவணை அடிப்படையில் சேவைகள் ஆரம்பிப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது. அந்த அறிக்கையில் பொதுமக்களின் பாதுகாப்பான பயணத்துக்கும், வீதி விபத்துக்களை எதிர்காலத்தில் ஏற்படாமல் தவிர்ப்பதற்கும், உயர் நீதிமன்றின் அறிவுறுத்தல்களை நடைமுறைப்படுத் துவதற்காகவும் வட இலங்கைத் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் முழுமையான சம்மதத்துடன் கையொப்பம் இட்டது.

இந்த நிலையில் கடந்த முதலாம் திகதி புதிய நேர அட்டவணையில் சேவைகளை ஆரம்பிப்பது தொடர்பாக சங்கம் போக்குவரத்து அமைச்சருடன் கடந்த முதலாம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொண்டபோது, இலங்கைப் போக்குவரத்துச் சபையினர் புதிய நேர அட்டவணையில் கையொப்பமிடப் பின்னடிக்கின்றார்கள் என்றும் எவ்வாறாயினும் கடந்த 4 ஆம் திகதி இணைந்த நேர அட்டவணையின் அடிப்படையில் சேவைகளை ஆரம்பிப்பதாகவும் சங்கத்துக்கு உறுதியளித்திருந்தார். ஆனால் இலங்கைப் போக்குவரத்துச் சபையினர் இணைந்த நேர அட்டவணையில் சேவையாற்ற முன்வரவில்லை. அவர்கள் அதிகரித்த சேவைகளை நடத்தித் தனியார் பேருந்து உரிமையாளர்களை பலிக்கடாக்களாக்க முயற்சிக்கின்றார்கள்.

எனவே தயாரிக்கப்பட்ட இணைந்த அட்டவணையில் இலங்கைப் போக்குவரத்துச் சபை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் சேவையாற்ற மறுக்கும் பட்சத்தில் வடக்கு மாகாணத்தில் தூர சேவைகளை மேற்கொள்ளும் 5 சங்கங்களின் அமைப்பான வட இலங்கைத் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் எதிர்வரும் 16 ஆம் திகதி தொடக்கம் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட தீர்மானித்துள்ளது. இந்தப் போராட்ட காலத்தில் தனியார் பேருந்து உரிமையாளர்களுக்குத் தொடர்பில்லாத வெளியில் உள்ள விசமிகள் சேவையில் ஈடுபடும் இலங்கைப் போக்குவரத்துச் சபைப் பேருந்துகளுக்கு ஏற்படுத்தும் பாதிப்புக்களைத் தவிர்ப்பதற்காக அவர்களின், போக்குவரத்து சேவைகளையும் தவிர்ப்பது தொடர்பாக ஆவன செய்யுமாறு வேண்டுகின்றோம்-என்றுள்ளது.

இதுதவிர, குறித்த பிரச்சினை தொடர்பில் இலங்கைப் போக்குவரத்துச்சபையின் வடக்குமாகாண அதிகாரி உட்பட யாழ்.சாலை முகாமையாளர் ஆகியோர் யாழ். மேல்நீதிமன்றுக்கு அழைக்கப்பட்டு கடுமையாக எச்சரிக்கப்பட்டதோடு போக்குவரத்தில் உள்ள சிக்கலைத் தீர்க்க உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-4)

# வடக்கு அரசின் தீர்வு வரைவு அடுத்த வாரம் சம்பந்தனிடம்

## கொழும்பில் வைத்து கையளிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 7

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும், தனக்கும் எந்த முரண்பாடும் கிடையாது என வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

வடக்கு மாகாண சபையின் பேரவைத் தலைவர், உறுப்பினர்கள் உள்ளிட்ட எல்லோரும் இணைந்து எமது தீர்வுத் திட்ட வரைவுடன் அடுத்த வாரம் கொழும்புக்கு செல்லவுள்ளோம். எல்லோரும் இணைந்து வடக்கு மாகாண சபையின் தீர்வுத் திட்டத்தை, எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனிடம் நேரில் சென்று கையளிக்கவுள்ளோம். எனது உடல்நிலை சீரின்மை காரணமாகவே, கடந்த இரண்டு தடவைகளும் தீர்வு யோசனை கையளிக்க முடியாமல் போனது. அதுவே உண்மையாகும். இதனால் தான் கையளிக்கும் முடிவுகள் தள்ளிப்போனதே தவிர, அவருக்கும் எனக்கும் எந்தவித முரண்பாடுகளோ, பிரச்சினைகளோ இல்லை - என்றார். (வ-101)

# பல்கலை. மாணவன் படுகாயம்

காங்கேசன்துறை தல்செவன விடுதிக்கு விருந்துக்காக சென்று ரயிலில் திரும்பிய யாழ்.பல்கலைக்கழக மாணவன் விபத்தில் சிக்கி, யாழ். போதனா வைத்திய சாலையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவத்தில் திருகோணமலையைச் சேர்ந்த 26 வயதுடைய மாணவனே படுகாயம் அடைந்தார். காங்கேசன்துறையில் உள்ள தல்செவன விருந்தினர் விடுதியில் விருந்து உபசாரத்தை முடித்து, ரயிலில் பயணம் செய்யும் போது, குறித்த மாணவன் ரயிலில் இருந்து வெளியே எட்டி பார்த்துள்ளார். இதனால் ரயில் பாதையோரம் இருந்த மின்கம்பத்துடன் மோதுண்டு முகத்தில் படுகாயமடைந்துள்ளார். இவ்வாறு படுகாயமடைந்து மயக்கமடைந்த குறித்த மாணவன் நேற்றுமுன்தினம் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (வ-4,101)

# குட்டை உடையுடன் வா! மாணவியிடம் பகிடிவதை

கொழும்பு, மே 7

பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான புகுமுக மாணவியிடம் குட்டை உடை அணிந்து வரும்படி பகிடிவதை மேற்கொண்ட 5 மாணவர்கள் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் களனி பல்கலைக் கழகத்தில் இடம்பெற்றுள்ளது.

'களனிப் பல்கலைக்கழகத்தில் புதிய மாணவிகள் ஒரு வருடம் முடிவடையும் வரை நீளக் காற்சட்டை அணியக் கூடாது. குட்டையாக உடையணிந்து வர வேண்டும். இவ்வாறு சட்டம் போடப்பட்டுள்ளதாகத் தெரிவித்து சிரேஷ்ட மாணவர்கள் நிர்ப்பந்திக்கின்றனர். இதனை மீறி நீளக் காற்சட்டையுடன் வரும் மாணவிகள், கடுமையான பேச்சுக்களுக்கு உள்ளாகப்படுகின்றனர். பலர் முன்னிலையில் அவமானப்படுத்தப்படுகின்றனர்.' இவ்வாறு கிரிபத்கொடை பொலிஸ் நிலையத்தில், புகுமுக மாணவி ஒருவர் முறைப்பாடு பதிவு செய்துள்ளார். இந்த முறைப்பாட்டுக்கு அமைய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். இதன் போது களனிப் பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட மாணவிகள் நான்கு பேரையும், சிரேஷ்ட மாணவன் ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். (த-ஐ-5)

# வடக்கு - கிழக்கு மாகாணங்களில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

யாழ்ப்பாணம், மே 7

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாள் நிகழ்வுகள் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் அனுஷ்டிக்கப்படவுள்ளதாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தக் கட்சியின் பொதுச் செயலாளரால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ் மக்கள் மீது இலங்கை அரசு மேற்கொண்ட இனவழிப்பின் 7 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் வடக்கு - கிழக்கு தமிழர் தாயகப் பகுதியில் இரண்டு இடங்களில் மேற்கொள்ளப்படவுள்ளன.

வடக்கு மாகாணத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளிவாய்க்கால் பகுதியில் மாலை 4 மணிக்கும், கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு வாகரைப் பகுதியில் முற்பகல் 10 மணிக்கும் நினைவேந்தல் நிகழ்வுகள் எதிர்வரும் 18 ஆம் திகதி நடைபெறவுள்ளன.

இன அழிப்பு ஒன்றின் மூலம் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட நாளான மே 18 என்பது தமிழரது சரித்திரத்தில் மறக்க முடியாத கறைபடிந்த நாளாகும். அந்த நாள் தமிழினம் இன அழிப்புக்கு உள்ளாக்கப்பட்ட இனவழிப்பு தினமாகும்.

தாயக மண்ணில் கூட்டாகப் படுகொலை செய்யப்பட்ட எமது உறவுகளைக் கூட்டாக நினைவு கூருவதற்கான உரிமை எமக்குள்ளது.

இறந்தவர்களது ஆத்ம சாந்திக்காக முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்த எமது உறவுகளுக்கான நினைவேந்தல் நிகழ்வுகளை அமைதியான வழியில் அனைவரையும் கடைப்பிடிக்குமாறு கோருவதுடன், முள்ளிவாய்க்காலிலும், வாகரையிலும் இடம்பெறும் நினைவேந்தல் நிகழ்வுகளிலும் பங்குகொள்ளுமாறும் அழைக்கின்றோம் - என்றுள்ளது. (த-ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்ஷய திருதியை அழைப்பு

# உதயா ஜுவல்லர்ஸ்

தங்கப்பவுண் நகை
வியாபாரம்

அக்ஷய திருதியை
தினத்தன்று தங்கம்
வாங்கும்
வாடிக்கையாளர்களில்
குலுக்கல் முறையில்
05 அதிர்ஷ்டசாலிகளுக்கு
தங்கக்காசு பரிசாக வழங்கப்படும்



உதயாவின்
தங்கப் பவுண் நகைகள்
உங்கள் இளமைக்கு
மேலும் மெருகூட்டும்

அன்றைய தினம் தங்கம்
கொள்வனவு செய்யும்
எமது அனைத்து அன்பார்ந்த
வாடிக்கையாளர்களுக்கும்
பெறுமதியான பரிசில்கள்
காத்திருக்கின்றன

அனைத்துக் கொள்வனவிற்கும்
தரச்சான்றிதழ் வழங்கப்படும்.

தங்கத்தைக் கொள்வனவு செய்யும்
தொகைக்கு ஏற்ப பெறுமதி மிக்க
பரிசில்கள் வழங்கப்படும்.

81, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 4434
www.facebook.com/uthayaajewellery
uthayaajewellers4434@gmail.com

# அக்ஷய திருதியை அழைப்பு

VMK JEWELLERY

# வீ.எம்.கே. ஜுவல்லறி

## V.M.K. Jewellery

*Dealers in 22 Kt. Gold Jewellery*



எமது ஸ்தாபனத்தில் தங்க நகைகளை
பெற்று என்றுமே குறையாத
இன்பத்தைப் பெற்றிட அன்போடு
அழைக்கின்றோம்.
அன்றைய தினம்
நகை வாங்கும் அனைவருக்கும்
பெறுமதிவாய்ந்த அன்பளிப்புக்கள்
காத்திருக்கின்றன

அக்ஷய திருதியை நாளிலே தங்களது
நலன்கருதி நேரத்தினை மீதப்படுத்த உங்களுக்கு
விரும்பிய நகைகளை முன் கூட்டியே தெரிவு
செய்து அசௌகரியங்களைத் தவிர்த்துக்
கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

021 720 1117
021 222 2515

இல. 80/03, கஸ்தூரியார் வீதி,
(யாழ் மாநகரசபை புதிய கட்டடம்)
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்ஷய திருதியை அழைப்பிதழ்
09.05.2016



அழகிய நவீன சிங்கப்பூர் நகைகளுக்கு

# சிங்கப்பூர் ஜுவல்லறி

அட்ஷய திருதியையன்று
நகைகளை கொள்வனவு செய்யும்
அன்பான வாடிக்கையாளர்
அனைவருக்கும் அன்பளிப்புப்
பொருள்கள் வழங்கப்படும்.

# Sinkapoore Jewellery




குறையாத செல்வத்தை வளமாக அள்ளி வழங்கும்
பொன்னான திருநாள் அட்ஷய திருதியையன்று
சொந்தமாக்கிடுங்கள் சிங்கப்பூர் ஜுவல்லறியின் தங்க நகைகளை

இல.28, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

No.28, Kasthuriar Road,
Jaffna.

021 4590 260 / 021 222 3327

அக்ஷய திருதியை அழைப்பு
09.05.2016

# ஸ்ரீதேவி ஜுவலர்ஸ்



தங்கப்பவுண் நகை வியாபாரம்

பொன் சேரும் பொன்னான நன்நாளாம்
அக்ஷய திருதியை உங்கள்
எண்ணம் போல் தரம், நம்பிக்கை,
நவநாகரிகத்துக்கு ஏற்ப என்றும் மாறாத
ஸ்ரீதேவி யுவலேர்ஸ் உடன்
கொண்டாடி மகிழுங்கள்

பெற்றுக் கொள்ளும்
நகைகளுக்கு உரிய
தரச் சான்றிதழ்
வழங்கப்படும்.

ஓடர் நகைகள் 22 கரட்டில்
குறித்த தவணையில்
உத்தரவாதத்துடன்
செய்துகொடுக்கப்படும்.

இல. 80/7, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 720 1787, 077 104 2848

அக்ஷய திருதியை அழைப்பு 09-05-2016



# மைதிலி நகைமாடம்

# Maithily Jewellers

89V, Kasthuriyar Road, Jaffna. Tel: 021-222 7902



குறையாத செல்வத்தை வளமாக அள்ளித்தரும் அதிசய திருநாளாம் அட்சய திருதியை
எதிர்வரும் 09.05.2016 திங்கட்கிழமை அன்று வருகின்றது. இத்திருநாளில் உங்கள் வாழ்வில் சுபீட்சத்தை
உருவாக்கும் பெறுமதிமிக்க நகைகளை **கொழும்பில் யாழ்.மைதிலி ஜுவல்லறியிலும்**
**யாழ்ப்பாணத்தில் மைதிலி நகைமாடத்திலும்** வாங்கிக் கொள்ளுங்கள்

- அட்சய திருதியை முன்னிட்டு அதி நவீன டிசைன்களை அறிமுகம் செய்வதோடு அதற்கான விலையில் நம்பமுடியாத விலைக் கழிவுகளும் வழங்கப்படும்.
- பழைய நகைகளை கொடுத்து புதிய நகைகள் வாங்குவோருக்கு விசேட விலைக்கழிவுகள் உண்டு.
- பவுண் காசு மற்றும் லக்ஷ்மி காசுக்கு விலைக் கழிவு உண்டு.
- குறிப்பிட்ட சில நகைகள் தங்க விலைக்கே விற்கப்படும்.
- நகைகள் கொள்வனவு செய்யும் அனைவருக்கும் விசேட அன்பளிப்புகள் காத்திருக்கின்றன.



## வாடிக்கையாளர்களுக்கு ஒரு அரிய சந்தர்ப்பம்!

அட்சய திருதியையை முன்னிட்டு ஏப்பிரில் 15ஆம் திகதி தொடக்கம் மே 09ஆம் திகதி வரை
எம்மிடம் நகைகளை வாங்குபவருக்கு மைதிலி நகைமாடம் வழங்கும்
மூன்று சிறப்பு பரிசுகள் காத்திருக்கின்றன.




பரிசுபெற்றவர்களின் விவரம்
11.05.2016 ஆம் திகதி
உதயன் பத்திரிகையில்
வெளிவரும்

வாடிக்கையாளர்களின் கவனத்துக்கு:-
நீங்கள் இலகுவான முறையில் நகைகளை கொள்வனவு செய்ய விரும்பினால்
ஏப்பிரல் 15 தொடக்கம் மே 8 வரை பிடித்த டிசைன்களை தெரிவு செய்து கொள்ளுங்கள்

# Yarl Maithily Jewellers யாழ் மைதிலி ஜுவெலர்ஸ்

79 Z, Sea Street, Colombo-11. Tel: 2396239.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதியோரைப் பராமரிப்பதற்கு பெண் உதவியாளர் வெற்றிடம்

எமது முதியோர் இல்லத்தில் முதியோரைப் பராமரிப்பதற்கு 20 - 35 வயதுக்குட்பட்டவர்கள் தேவை. தகுதியானவர்கள் நற்சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும்.

நிர்வாக சபை
**சிவபூமி முதியோர் இல்லம்**
**தொல்புரம், சுழிபுரம்.**

## சைவ வித்தியா விருத்திச் சங்கம்
## சைவச் சிறுவர் இல்லம்
## பதவி வெற்றிடம்

1. **உபவிடுதிக் காப்பாளர் (ஆண், பெண்)**

**தகைமைகள்:**

★ க.பொ.த.சாதாரண தரத்திற்குக் குறையாத கல்வித் தகைமை
★ விடுதியில் தங்கியிருப்பது கட்டாயம், உணவும் தங்குமிட வசதியும் இலவசம்
★ விண்ணப்பதாரர் தேகாரோக்கியம் உடையவராகவும், இல்லப் பிள்ளைகளைப் பரிவோடு கவனிப்பதிலும், சைவாசாரம் பேணுவதிலும், வழிகாட்டுவதிலும் அர்ப்பணிப்போடு ஈடுபடுபவராகவும் இருத்தல் வேண்டும்.
★ வயதெல்லை: 30 - 50 வரை
★ ஊதியத்திட்டம் : ரூபா 8,400-6 X 225+ 15X225-13,375/-

2. **சமையலாளர் - பெண்**

அனுபவம் வாய்ந்த பெண் சமையலாளர் தேவை. இல்லத்தில் தங்கியிருப்பது விரும்பத்தக்கது. வயதெல்லை - 35-55 ஊதியம் பேசித் தீர்மானிக்கப்படும்.

3. **தையற் போதனாசிரியர்**

எமது இல்லப் பிள்ளைகளுக்குத் தையல் கற்பிப்பதற்குத் தகுதி வாய்ந்த ஆண், பெண் ஆகிய இருபாலாரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமை:** அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து தையற் பயிற்சி பெற்றதற்கான சான்றிதழ், பூவேலை, பின்னல் ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றிருத்தல் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.
வயதெல்லை - 25-50,ஊதியம்: ஒப்பந்த அடிப்படையில் பேசித் தீர்மானிக்கப்படும்.

4. **பெண் பாதுகாவலர் (பகல்)**

க.பொ.த. சாதாரண தரத்திற்குக் குறையாத கல்வித் தகைமை, வயதெல்லை: 25 - 50

மேற்படி பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களை 21.05.2016 இற்கு முன்னர் சைவ வித்தியா விருத்திச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**சைவ வித்தியா விருத்திச் சங்கம்,**
**கலாசாலை வீதி, திருநெல்வேலி.**

**தி.செல்வமனோகரன்**
**செயலாளர்.** (சி.21713) (13.18)


# Pedal Exerciser



வயோதிப காலத்தில்
போதிய அப்பியாசம்
இன்மையால் குருதி
ஓட்டம் குறைந்து,
மரத்து, நடக்கக்
கஷ்டமாக
இருக்கிறதா?



நீங்கள் பேப்பர் வாசித்துக் கொண்டிருந்தாலோ - TV பார்த்துக் கொண்டிருந்தாலோ- நண்பர்களுடன் பேசிக்கொண்டிருந்தாலோ எந்த நேரத்திலும் எவ்விடத்திலும் உங்களுக்கான அப்பியாசத்தைச் செய்து ஆரோக்கியத்துடன் வாழ PEDAL EXERCISER.

Vanikaa Surgicals
203,Hospital Road Jaffna.
சத்திரச் சந்திக்கு அருகாமையில்
021 222 0077, 077 442 2367



# அபி பஷன் வேல்ட்

ஒரு வருடகால பூர்த்தியை முன்னிட்டு மாபெரும் பரிசு மழையை வென்றிடுங்கள்

ரூபா 10,000/= மேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு



குலுக்கல் முறையில் பரிசில்கள் வழங்கப்படும்

முதலாம் பரிசு:
1 பவுண்
தங்க நாணயம்



இரண்டாம் பரிசு:
குளிர்சாதனப் பெட்டி

மேலும் பல பெறுமதிமிக்க ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படும்.

எனவே வாரீர் பரிசில்களை வென்றிடுங்கள்

மே 1 முதல் மே 22 வரை

மூன்றாம் பரிசு:
தொலைக்காட்சிப் பெட்டி



யாழ். மண்ணில் முற்றிலும் குளிரூட்டப்பட்ட அனைத்து ஆடைத்தெரிவுகளுடன் கூடிய மிகப்பெரிய ... புடைவை மாளிகை...

ABI Fashion World
No:112, K.K.S. Road, Jaffna, Sri Lanka.
Tel: 021 222 3738 / 077 324 6503


# தேசிய எழுச்சி மாநாடு

யாழ்ப்பாணம்,மே 7
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தேசிய எழுச்சி மாநாடு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-ஐ-5)

## Calling application for post of Information Technologist
## தகவல் தொழில்நுட்பவியலாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

நொதன் சென்றல் வைத்தியசாலைக்கு மேற்படி பதவிக்குக் கீழ்க் காணும் தகைமையுடையோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களை நேரிலோ தபால் மூலமோ எதிர் வரும் 14.05.2016 இற்கு முன்பு கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவும்.

**தகைமைகள்**
*தகவல் தொழில்நுட்ப பட்டதாரியாய் இருத்தல் வேண்டும்.
*வயது 18 - 45 வயதுக்கு உட்பட்டவராயிருத்தல்.
*முன் அனுபவம் விரும்பத்தக்கது.
*சம்பளம் மாதம் ரூபா.35,000/= இற்கு குறையாமல் வழங்கப்படும்.

மேலதிக விவரங்களுக்கு தொலைபேசி
**077 773 2892** உடன் தொடர்பு கொள்ளவும்.
பணிப்பாளர், மனிதவளம்.

## நீர்வேலி
## ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் கோயில் பரிபாலனசபை
## வருடாந்தப் பொதுக்கூட்டம்

**விநாயக அடியார்களே!**
நிகழும் துர்முகி வருடம் வைகாசித் திங்கள் 8ஆம் நாள் சனிக்கிழமை 21.05.2016 முற்பகல் 10 மணிக்கு மேற்படி சபையின் வருடாந்த பொதுக்கூட்டம் சபைத் தலைவர் திரு.க.கிருபாகரன் தலைமையில் கோயில் மண்டபத்தில் நடைபெறும். தயவு செய்து மகாசபை உறுப்பினரைக் கூட்டத்துக்கு தவறாது சமுகம் கொடுக்கும்படி வேண்டுகின்றோம்.

**நிகழ்ச்சிகள்**

01. இறைவணக்கம்
02. தலைவர் முன்னுரை
03. சென்ற வருட அறிக்கை வாசித்தல்
04. நிர்வாக ஆண்டறிக்கை வாசித்தல்
05. கடந்த கால கணக்கறிக்கை சமர்ப்பித்தல்
06. பிரேரணைகள்
07. புதிய விடயங்கள்
08. புதிய நிர்வாகசபை தெரிவு செய்தல்
09. நன்றியுரை

நீர்வேலி
05.05.2016

ச.சந்திரகூடி
செயலாளர்

முக்கிய குறிப்பு: பொதுக்கூட்டத்துக்கு ஏதும் பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்பும் உறுப்பினர்கள் 14.05.2016ஆம் திகதிக்கு முன்னர் தமது பிரேரணைகளை எழுத்து மூலம் செயலாளருக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**வாடகைக்கு**
கல்வி பயிலும் ஆண் மாணவர்களுக்கு (6பேர்) அறைகள் வாடகைக்கு உண்டு
**021 221 9078**

**வேலையாள்கள் தேவை**
பருத்தித்துறையில் இயங்கிக் கொண்டிருக்கும் பார்சல் நிறுவனத்துக்கு வேலையாள்கள் தேவை.
**021 492 3724**
குறிப்பு: பருத்தித்துறையில் உள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். ஆண்கள் மட்டும்.

**வீடும், காணியும் உடன் விற்பனைக்கு**
பாரதி வீதி, பத்தமேனி, அச்சுவேலியில் பிரதான வீதிக்கு அருகில் பழமரங்கள் நிறைந்ததும் வெட்டுக்கிணறும் குழாய்க்கிணறும், பெரிய தொட்டியும், பழைய வீடும் (பெறுமதியில் அற்றது) நாலுபக்க மதில் கொண்ட காணியும் (4 பரப்பு) உடன் விற்பனைக்கு உண்டு.தரகர்கள் தேவையில்லை.
**076 643 6909,077 835 8660**

**வேலைவாய்ப்பு**
இலங்கையில் பிரசித்திபெற்ற பிரபலமான ஐஸ்கிறீம், ஜாம், சொக்லேட், நூடில்ஸ், பால்மா, பிஸ்கட், டொபி இவ்வனைத்தும் உற்பத்தி செய்யும் இடங்களுக்கு வேலையாள்கள் தேவை. அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் இலவசம். ஒரு நாளைக்கு 1200/= கிழமை சம்பளம் 10,000/= மாத சம்பளம் - 35,000 விரும்பத்தக்கவர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளவும். வயது 18 முதல் 55 வரை வரும் நாளிலே வேலைக்குச் சேர்க்கப்படும். கீழ்க்காணும் இலக்கத்துக்குத் தொடர்பு கொள்ளவும்.
**071 147 5324, 077 494 3502**

எமது நாட்டின் தலைநகரான கொழும்பு கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கிளினிங், கேட்டரிங், லோன்றி, கிச்சின் போன்ற பகுதிகளுக்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை. முற்கொடுப்பனவு ரூபா 25,000 - 30,000 வரை. மூன்று மாத காலங்களின் பின்னர் நிரந்தரமாக்கப்படுவதுடன் 45,000 - 75,000 வரை சம்பளம் வழங்கப்படும். வயது 18 - 40.
**075 718 4659, 071 921 5892**

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 7
யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில், இந்த வருடம் க.பொ.த உயர்தரப் பிரிவில் விஞ்ஞானப் பிரிவில் பரீட்சைக்குத்தோற்றவுள்ளமாணவர்களின் பெற்றோர்களுக்கான கலந் துரையாடல் நாளை மறுதினம் திங்கட் கிழமை நடைபெறவுள்ளது.
பாடசாலை பிரதான மண்டபத்தில் அன்றைய தினம் நண்பகல் 12.30 மணிக்கு நடைபெறும் இந்தக் கலந்துரையாடலில், அந்தப் பிரிவு மாணவர்களையும், பெற்றோரையும் பங்குபற்றுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-ஐ-ரி)

# போட்டிப் பரீட்சையும் கலாசாரப் போட்டிகளும்

யாழ்ப்பாணம், மே 7
சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலய வருடாந்த திருவிழாவை முன்னிட்டு சுதுமலை அம்பாள் விளையாட்டுக் கழகதத்தால், சைவ சமய அறிவுப்போட்டிப் பரீட்சை, கலாசாரப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.
சைவ சமய அறிவுப்போட்டிப் பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை தரம் 8, 9, 10, 11 ஆம் வகுப்புக்களுக்கு காலை 8.30 மணிக்கும், தரம் 4, 5, 6, 7 ஆகிய வகுப்புக்களுக்கு நாளை முற்பகல் 10.30 மணிக்கும் நடைபெறும்.
அத்தோடு எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கோலம்போடுதல், மாலை கட்டுதல், பேச்சுப்போட்டி என்பன சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாகவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (த-ஐ-ரி)

# கும்பாபிசேகம்

சாவகச்சேரி,மே7
சாவகச்சேரி நுணாவில் மேற்கு, விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட நவக்கிரக தேவர் ஆலய பிரதிஷ்டை கும்பாபிசேகம் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.15 மணிக்கு இடம்பெறவுள்ளது.
கும்பாபிசேகக் கிரியைகள் இன்று சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு ஆரம்பமாகி, நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் அடியார்கள் எண்ணெய்க் காப்பு சாத்துதல் இடம் பெறும். (த-ஐ-9)

# வருடாந்த திருவிழா

சுழிபுரம், மே 7
சுழிபுரம் பறாளாய் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய வருடாந்தத் திருவிழா எதிர் வரும் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.
தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் இடம்பெறும் திருவிழாக்களில் எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (த-ஐ-28)

**விற்பனைக்கு**
Q1-XXXX இலக்கமுடைய ஆட்டோவும் 60- XXXX இலக்கமுடைய வானும் விற்பனைக்கு உண்டு.
**077 844 6089**

**வேலையாள்கள் தேவை**
யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் மென்பான உற்பத்தி நிறுவனத்துக்கு உற்பத்திப் பிரிவில் வேலை செய்வதற்கு பெண் ஊழியர்கள் தேவை
**021 221 3788**

**வேலையாள்கள் தேவை**
யாழ்.நகரில் இயங்கிக் கொண்டிருக்கும் பிரபல வர்த்தக நிறுவனத்துக்கு வாகனத்தில் பொருள்கள் வழங்குநர் தேவை.
**021 492 3724**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண ஆளுநரையும் வெளியேற்றவேண்டி ஏற்படும்

## எச்சரிக்கிறார் முன்னாள் தவிசாளர் பிரகாஷ்

வலி.வடக்கு,மே 7

வடக்கிலுள்ள இராணுவத்தினர் ஒற்றுமைக்கான தூதுவர்கள் என்று வடக்கு மாகாண ஆளுநர் குறிப்பிட்ட கருத்து கண்டிக்கத்தக்கது. அவரது இந்தக் கருத்து எமது தமிழ் மக்களைக் கேவலப்படுத்துகின்ற ஒரு செயற்பாடாகும். இவ்வாறு அவர் தொடர்ந்தும் கருத்துக்களை முன் வைப்பாராகில் எமது மாகாணத்தை விட்டு ஆளுநரை வெளியேற்றுவதற்கு மக்கள் போராட்டம் நடத்த வேண்டி ஏற்படும். இவ்வாறு தெரிவித்தார் வலி.தெற்கு பிரதேசசபை முன்னாள் தவிசாளர் தி.பிரகாஷ்.

இது தொடர்பில் அவரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

> இராணுவத்தை வெளியேற்றத் தேவையில்லை. அவர்கள் ஒற்றுமைக்கான தூதுவர்கள் என்று வடக்கு ஆளுநர் தெரிவித்த கருத்து எமது மக் களின் போராட்டத்தையும், தியாகங்களையும், உணர்வுகளையும் கொச்சைப்படுத்துவதாகும்.

தமிழ் மக்கள், வடக்கு ஆளுநராக ரெஜினோல்ட் கூரே பதவியேற்றபோது ஒரு தமிழ் தெரிந்த ஆளுநர் எமது பிரதேசத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளார் என்று மகிழ்ந்தார்கள். ஆனால், எமது மக்கள் போர் வலிகளால் பட்ட காயங்களை எவராலும் ஆற்ற முடியாது. இராணுவ அடக்குமுறையால் - அடாவடித்தனத்தால் - எமது மக்கள் பட்ட வேதனைகள் சொல்லில் அடங்கா.

இது இவ்வாறிருக்க, இராணுவத்தை வெளியேற்றத் தேவையில்லை. அவர்கள் ஒற்றுமைக்கான தூதுவர்கள் என்று வடக்கு ஆளுநர் தெரிவித்த கருத்து எமது மக்களின் போராட்டத்தையும், தியாகங்களையும், உணர்வுகளையும் கொச்சைப்படுத்துவதாகும்.

ஒற்றுமை, நல்லாட்சி என்றெல்லாம் பேசுகின்ற இந்த ஆளுநர் என்றாலும் சரி, அரசு என்றாலும் சரி ஒரு சிங்களப் பிரதேசத்துக்கு தமிழ் ஆளுநரை நியமிக்கட்டும். எமது மாகாண சபையின் செயற்பாடுகளை முடக்குவதற்காக மகிந்த அரசு இராணுவத் தளபதியை ஆளுநராக நியமித்தது. இராணுவத்துக்கு வக்காலத்து வாங்கும் ஒருவரை மைத்திரியின் நல்லாட்சி அரசு ஆளுநராக நியமித்துள்ளது. இரண்டும் ஒன்று தான். இவரது இந்தக் கருத்தை எமது மக்கள் ஒரு போதும் ஏற்க மாட்டார்கள்-என்றும் குறிப்பிட்டுள்ளார். (த-ஐ-25)

## இரு வாகனங்கள் மோதி விபத்து

வீதியின் மஞ்சள் கோட்டில் பாதசாரிகள் நடந்து சென்றதால், திடீரெனநிறுத்தியவாகனத்துடன் அதனைப்பின்தொடர்ந்து வந்த மோட்டார் சைக்கிள் மோதியது. இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் சாவகச்சேரி நகரப்பகுதியில் இடம்பெற்றது. நகரப் பகுதியில் வேகமாக வந்த வாகனத்தைப் பின் தொடர்ந்து வந்த மோட்டார் சைக்கிளே, வாகனம் திடீரென நிறுத்தப் பட்டதால் நிலைகுலைந்துவாகனத்துடன் மோதியது. இதனால் இரு வாகனங்களுக்கும் சேதங்கள் ஏற்பட்டன. (த-ஐ-9)

## ஆன்மிக சொற்பொழிவுகள்

வவுனியா பகவான் ஸ்ரீசத்யசாயி சேவா நிலையத்தால் வவுனியா மாவட்ட மாணவர்களுக்கான ஆன்மிக சொற்பொழிவுகள் பிரிவு பிரிவாக நடத்தப்பட்டுள்ளன.

பாடசாலை மாணவர்கள் மற்றும் கல்வியற் கல்லூரி மாணவர்களுக்கு ஒழுக்கமும் கல்வியும், ஒழுக்கமும் சுகாதாரமும் எனும் கருப்பொருளிலும், பல்கலைகழகத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு காலத்தின் தேவையைக் கருத்தில் கொண்டு அன்றாட வாழ்வுக்கு அவசியமான விடயம் எனும் தொனிப்பொருளிலுமான சொற்பொழிவுகள் இடம்பெற்றன.

இந்தச் சொற்பொழிவுகளை இந்தியாவின் ஆந்திரா மாநிலத்திலுள்ள புட்டபர்த்தியில் இருந்து வருகை தந்த தீபக் ஆனந் நிகழ்த்தியிருந்ததார். (த-ஐ-21)

## நினைவஞ்சலியும் பொதுக் கூட்டமும்

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவர் சிறீ சபாரத்தினம் மற்றும் போராளிகளின் 30 ஆம் ஆண்டு நினைவஞ்சலிப் பொதுக்கூட்ட நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் நல்லூர் சட்டநாதர் கோவில் அருகாமையில் அமைந்துள்ள இளங் கலைஞர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் இடம்பெறவுள்ள பொதுக் கூட்ட நிகழ்வில் பிரபல இந்தியப் பத்திரிகையாளர் ஆர்.பகவான்சிங் சிறப்பு உரையொன்றை ஆற்றவுள்ளார். (த-ஐ-ரி2)

## மீசாலை கிழக்குப் பகுதியில் இரு திருட்டுச் சம்பவங்கள்

சாவகச்சேரி,மே 7

மேய்ச்சலுக்குக் கட்டப்பட்டிருந்த 14 ஆயிரம் ரூபா பெறுமதியான மறி ஆடும், கிணற்றில் பொருத்தப்பட்டிருந்த 17 ஆயிரம் ரூபா பெறுமதியான நீரிறைக்கும் மோட்டரும் இனந்தெரியாதோரால் திருடப்பட்டுள்ளன.

இந்தத் திருட்டுச் சம்பவங்கள் மீசாலை கிழக்கில் வெவ்வேறு இடங்களில் இடம்பெற்றுள்ளன. இவை தொடர்பாக அவற்றின் உரிமையாளர்களால், சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்துள்ளனர். (த-ஐ-9)

## வலி.வடக்குப் பிரதேச சபைக்கு புதிய செயலாளராகப் பகீரதன்

வலி.வடக்கு, மே 7

வலி.வடக்குப் பிரதேச சபைக்கு புதிய செயலாளர் ஒருவர் நியமிக்கப்பட்டு, அவர் நேற்று முன் தினம் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

காரைநகர் பிரதேச சபையில் செயலாளராகக் கடமையாற்றிய இராமலிங்கம் பகீரதன் என்பவரே வலி.வடக்குப் பிரதேச சபைக்குச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

வலி.வடக்குப் பிரதேச சபையில் இதுவரை காலமும் செயலாளராக செயலாற்றி வந்த செல்வி த.திருக்குமாரி, தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு நிர்வாக உத்தியோகத்தராக மாற்றலாகிச் செல்லவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-ஐ-25)

## கூட்டுறவுப் பெரியார் நினைவாக விரைவில் புதிய தபால் முத்திரை

யாழ்ப்பாணம்,மே.7

கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கத்தின் நினைவாக தபால் முத்திரை ஒன்று விரைவில் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது. வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சர் பொ.ஐங்கரநேசன் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

இந்தப் புதிய தபால் முத்திரையை பெரும்பாலும் எதிர்வரும் ஜூன் மாத முற்பகுதியில் வெளியிட்டு வைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மத்திய தபால் வெளியீட்டுத் திணைக்களம், பெரியார் வீரசிங்கத்தின் இந்தநினைவுத்தபால் முத்திரையை வெளியிடுவதற்கு அனுமதியளித்துள்ளது.

வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சால் பெரியார் வீரசிங்கத்தின் நினைவாக இந்த முத்திரை விரைவில் மாவட்டக் கூட்டுறவுச்சபையில் வெளியிட்டுவைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-ஐ-17)

## திருவடிநிலை தீர்த்தக்கரையில் புதிய அன்னதான மண்டபம்

சுழிபுரம், மே 7

சுழிபுரம் திருவடிநிலை தீர்த்தக்கரையில் புதிதாக அன்னதானம் வழங்கும் மண்டபமொன்றை அமைப்பதற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதற்கான நிதியை உலக நாடுகளில் வாழும் சுழிபுரத்தைச் சேர்ந்தவர்கள் வழங்கி வருகின்றனர். சுழிபுரம் பறாளாய் ஈஸ்வர விநாயகர், பறாளாய் முருகன், பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் ஆலயங்களின் திரு விழாக்களின்போது இங்கு அன்னதானம் வழங்கப்படுவது வழக்கம்.

எனினும் நாட்டில் ஏற்பட்ட போரால், முன்னைய மண்டபம் பாவனைக்கு உதவாது போயுள்ளதாலேயே புதிய மண்டபம் தற்போது கட்டப்பட்டு வருகின்றது. (த-ஐ-28)

## மஞ்சள்கோட்டில் வீதி கடக்காத கொடிகாமம் வாசிக்கு அபராதம்

சாவகச்சேரி,மே7

வாகனப் போக்குவரத்து நெருக்கடியான நேரத்தில் வீதியில் மஞ்சள் கோடு இருந்தும், அதனைப் பயன்படுத்தாமல் வீதியைக் கடந்த கொடிகாமம் வாசிக்குக் கடந்த புதன்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் எச்சரிக்கை செய்யப்பட்டு ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த நீதிவான், குறித்த நபரை எச்சரிக்கை செய்து ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். (த-ஐ-9)

## கடையின் இரும்புக் கேற்றைச் சேதப்படுத்தினர் விசமிகள்

யாழ்ப்பாணம், மே 7

அச்சுவேலி, இராச வீதியில் உள்ள தையல் கடை ஒன்றின் இரும்புக் கேற்றை விசமிகள் வெட்டிச் சேதமாக்கியுள்ளனர் என்று முறைப்பாடு செய் யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

தங்களை இனங்காட்டிக் கொள்ளாதவாறு மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே, இந்தச் செயலில் ஈடுபட்டதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மோட்டார் சைக்கிள் இலக்கத்தை அடிப்படையாகக் கொண்டு விசாரணை மேற்கொள்ளப்படுவதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-ஐ-4-107)

## பிரதான வீதியில் கால்நடைகள் திடீர் விபத்துக்களால் சேதங்கள்

யாழ்ப்பாணம்,மே7

வலி.கிழக்குப் பிரதேசத்தில் கோப்பாய் மற்றும் நீர்வேலி போன்ற பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் தமது வளர்ப்புக் கால்நடைகள், பட்டி மாடுகள் போன்றவற்றை மேய்ச்சலுக்காகப் பருத்தித்துறை வீதியூடாக கொண்டு செல்வதால் திடீர் விபத்துக்கள் இடம்பெற்று வருகின்றன.

பட்டி மாடுகள் வீதிகளில் பிரதான வீதியைத் திடீரெனக் கடப்பதால் வீதியால் பயணிக்கும் வாகனங்கள் மாடுகளுடன் மோதி விபத்துக்கும் உள்ளாகின்றன.

இவ்வாறான விபத்துக்களால், வாகனங்கள் சேதப்படுவதோடு அதைச் செலுத்தி வருவோர் மற்றும் பட்டி மாடுகளும் காயப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

கடந்த வாரம் கோப்பாய் பூதர் மடம் பகுதியில் பிரதான வீதியைக் கடந்த பட்டி மாட்டுடன், மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் மோதிக் காயப்பட்டார். இதில் மோட்டார் சைக்கிள் பலத்த சேதப்பட்டதோடு, மாட்டின் கொம்பும் உடைந்து காயப்பட்டது. அதே சமயம் கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு அருகிலும், பிரதான வீதியைக் கடக்க முற்பட்ட பட்டி மாட்டுடன் மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் முட்டி மோதிக் காயங்களுக்கு இலக்கானார்.

கோப்பாய், நீர்வேலி தரவை வயல் நிலங்களில் இவ்வாறு பட்டி மாடுகளை மேய்ச்சலுக்காகக் கொண்டு செல்லும் விவசாயிகள் கால்நடைகளை ஒன்றுடன் ஒன்று பிணைத்துக் கட்டிச் செல்வதால் அவை பிரதான வீதியைக் கடப்பதில் சிரமப்படுகின்றன. எனவே இதனைத் தடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட வேண்டும் என சம்பந்தப் பட்டவர்களை மக்கள் கேட்டுள் ளனர். (த-ஐ-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ரெலோ போராளிகளுக்கு மன்னாரில் நேற்று அஞ்சலி

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) முன்னாள் தலைவர் சிறீ சபாரத்தினம் மற்றும் போராளிகளின் 30 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி மன்னாரில் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது. நேற்று வெள்ளிக்கிழமை காலை மன்னாரில் உள்ள தமிழீழ விடுதலை இயக்க (ரெலோ) அலுவலகத் தில் மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.பற்றிக் தலைமையில் இந்தநிகழ்வு இடம்பெற்றது. இதன்போது தமிழீழ விடுதலை இயக்க (ரெலோ) முன்னாள் தலைவர் சிறீ சபாரத்தினத்தின் உருவப் படத்துக்கு, மாலை அணிவித்து சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

இந்த நிகழ்வில் தமிழீழ விடுதலை இயக்க (ரெலோ) மாவட்ட துணைப் பொறுப்பாளர் ஏ.ரி.மோகன்ராஜ், ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் மாவட்ட பொறுப்பாளர் இரட்ணசிங்கம் குமரேஸ், மன்னார் நகர சபையின் முன்னாள் தலைவர் ஜேம்ஸ் ஜேசுதாஸ் மற்றும் தமிழீழ விடுதலை இயக்க (ரெலோ) முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர். (து-ஐ-56)

## கடலில் ஒளிபாய்ச்சி மீன்பிடி; வெளிமாவட்ட மீனவர் கைது

முல்லைத்தீவு,மே 7

நாயாறுக் கடற்பரப்பில் சட்ட விரோத மான முறையில் ஒளிபாய்ச்சி மீன் பிடித்தொழிலில் ஈடுபட்ட, வெளி மாவட்டத்தைச் சேர்ந்த இரு மீன வர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப் பட்டபோது, 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

நாயாறு கடற்பரப்பில் வெளி மாவட்டத் தைச் சேர்ந்த மீனவர்கள் சட்ட விரோத மான முறையில் ஒளிபாய்ச்சி மீன் பிடிப்பதாக முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் துறைத் திணைக்களத்துக்குத் தகவல் கிடைத்தது. இதனையடுத்து கடந்த செவ்வாய்க் கிழமை இரவு கடற்படையினரின் உத வியுடன் உதவிப் பணிப்பாளர் தலைமையில் அந்தப் பகுதிக்கு விரைந்து சென்ற அதிகாரிகள், தேடுதல் நடத் தியபோது தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இரு மீனவர்கள் அகப்பட்டுக் கொண்டனர்.

இவர்கள் தொழிலுக்குப் பயன்படுத் திய வள்ளம், வலை, ஜெனரேற்றர் ஆகியவற்றைக் கைப்பற்றி முல் லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் ஒப்படைத்த அதிகாரிகள், இரு மீன வர்களையும் கைதுசெய்து கடந்த புதன்கிழமை நீதிவானிடம் முன்னி லைப்படுத்தினர்.

இரு மீனவர்களும் குற்றத்தை ஏற் றுக் கொண்டமையைத் தொடர்ந்து இவர்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்த நீதிவான், வலை களையும் ஜெனரேற்றரையும் அரச உடைமையாக்குமாறு உத்தரவிட்டு, வள்ளம்சம்பந்தமான விசாரணையை ஒத்தி வைத்துள்ளார். (து-ஐ-115)

## சட்டவிரோத மணல் ஏற்றியவர் மறியலில்

சட்ட விரோதமாக இரண்டாவது தடவையாகவும் மணல் ஏற்றிச் சென்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட வாக னச் சாரதியை எதிர்வரும் 11 ஆம் திகதி வரையும் விளக்க மறியலில் வைக்குமாறு கிளிநொச்சி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்தச் சம்பவம் கிளிநொச்சி, பளையில் இடம்பெற்றது. சட்டவிரோதமான முறையில் உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிச் சென்றபோது சாரதி யையும், மணல் ஏற்றிய உழவு இயந்திரத்தையும் தாம் கைப்பற்றியதாகப் பளைப் பொலிஸார் தெரிவித்தனர். குறித்த சாரதி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது, இவர் ஏற்கனவே குறித்த குற்றச்சாட்டில் ஈடுபட்டு நீதிமன்றத் தால் தண்டிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டபோதும், மீளவும் அதே குற்றச்சாட்டில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (து-ஐ-4)



வவுனியாவில் திருநாவுக்கரசு நாயனார் குருபூசைத் தினம் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது நாட்டில் நிலவி வரும் கடும் வெப்பம் காரணமாக திருநாவுக்கரசு நாயனார் குருபூசையை முன்னிட்டு கடந்த திங்கட்கிழமை காலை முதல் பிற்பகல் வரை வவுனியா கோவில் குளம் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் ஆலய வாசலில் தாக சாந்தி நிலையம் அமைத்து அடியார் களுக்கு மோர், குளிர்பானம் மற்றும் தண்ணீர் என்பனவும் வழங்கப்பட்டன. (து-ஐ-21)

## சட்டவிரோத மீன்பிடி ஐவர் மடுவில் கைது

மன்னார்,மே.7

குளத்து நீரை வெளியேற் றிச் சட்ட விரோதமான முறையில் மீன்பிடியில் ஈடுபட்ட 5 பேர் கடந்த புதன் கிழமை கைது செய்யப்பட் டுள்ளதாக மடு பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

மடு பொலிஸ் பிரிவுக்குட் பட்ட முள்ளிக்குளம் காட் டுப் பகுதியில் உள்ள குளம் ஒன்றினுள், சட்டவிரோத மான முறையில் மீன்பிடி யில் ஈடுபட்ட 5 பேர் இவ் வாறு கைது செய்யப்பட் டுள்ளனர்.

குறித்த குளத்தில் உள்ள நீரை அப்பகுதியில் உள்ள காட்டு மிருகங்கள் மற்றும் பறவைகள் குடித்து வந்த நிலையில், அந்த நீரை வெளியேற்றி மீன் பிடியில் ஈடுபட்டார்கள் என்ற குற் றச்சாட்டின் பேரிலேயே இந்த 5 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள வர்கள் மடு பொலிஸ் நிலை யத்தில் தடுத்து வைக்கப் பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருவ தாகவும், விசாரணை களின் பின் மன்னார் நீதி மன்றத்தில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளதாகவும் மடுபொலிஸ்நிலையத்தின் பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார். (து-ஐ-56)


# ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்

அமரர்

## சீவரத்தினம் சீவறஞ்சன்

(றெஜி ரெஸ்ரோரன்ஸ் - உரிமையாளர்)

மண்ணில் 12.06.1973

விண்ணில் 17.05.2011

திதி: பிரதமை 07.05.2015



ஆண்டுகள் ஐந்து மறைந்துவிட்டது
அகலுமா உங்கள் பிரிவின் சோகம்
மறையுமா உங்கள் நினைவின் பாசம்
எம்மை நிர்க்கதியாய் அநாதையாய்ப் பரிதவிக்க
விட்டுவிட்டு எங்கு சென்றீர்கள்
காலங்கள் ஆயிரம் போனாலும்
மறக்கமுடியுமா உங்கள் நினைவுகளை
எங்கள் உயிர் உள்ளவரை உங்கள்
நினைவுகள் தொடரும்.....

றெஜி ரெஸ்ரோரன்ஸ்,
இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

என்றும் நினைவுகளுடன்
இந்திரா - மனைவி
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோரின் அன்பு கிடைக்காத மாணவரே குற்றம் புரிகின்றனர்

## வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு





யாழ்ப்பாணம், மே 7

பெற்றோரின் அன்பு, ஆதரவு கிடைக்கப்பெறாத மாணவ, மாணவியரே குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர். பிள்ளைகளுக்காக உழைக்கச் செல்லும் பெற்றோரே, உங்கள் பிள்ளைகள் மீது அன்பு காட்டுங்கள். அன்பு காட்ட நேரம் இல்லை என்று கூறாதீர்கள். அவ்வாறே ஆசிரியர்களும் மாணவர்கள் மீது அன்பு செலுத்த வேண்டும்.-இவ்வாறு வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணக் கல்வி வலயம் ஏற்பாடு செய்திருந்த ஆசிரியர் மாநாடு யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நேற்று ஆரம்பமானது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்: எமது இளைய சமுதாயத்தினர் இன்று, தான்தோன்றித்தனமாக நினைத்த மாத்திரத்தில் மிகப் பெரிய குற்றச் செயல்களில், பாலியல் சேஷ்டைகளில் ஈடுபடுகின்றார்கள். மிகப் புகழ் பூத்த பாடசாலைகளில் கல்வி கற்கின்ற திறமை மிக்க பல மாணவர்கள் கூட இன்று குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருவதை நாம் அறிகிறோம்.

பெற்றோர்களின் அன்பும், அரவணைப்பும் கிடைக்கப் பெறாத பல மாணவர்களே இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றார்கள் என்பது கருத்தாக உள்ளது.

பிள்ளைகளுக்கு உணவு, உடை, புத்தகம் ஆகிய அனைத்தையும் பெற்றோர்கள் வாங்கிக் கொடுக்கின்றனர். காலையில் அவசரமாக உணவைத் தயாரித்துப் பிள்ளைகளைப் பாடசாலைக்குத் தயாராக்கி பஸ்களிலோ, ஓட்டோக்களிலோ அனுப்பிவிட்டுத் தாய் தந்தையர் இருவரும் பெரும்பாலும் அரக்கப்பரக்க தமது அலுவலகங்களை நோக்கிச் சென்று விடுகின்றனர்.

ஆனால் அந்தப் பிள்ளைகளுக்கு மிகவும் அத்தியாவசியமாக தேவைப்படுகின்ற அன்பு, அரவணைப்பு போன்ற தேவைகளை வழங்க மறந்து விடுகின்றார்கள். அல்லது ஏதோ காரணங்களால் மறுத்து விடுகின்றார்கள்.

மாலை 5 மணிக்கு வீடு திரும்பியதும் பகல் முழுவதும் உழைத்துக் களைத்த, உடல் சோர்வுற்ற நிலையில் அவர்களுக்கும், ஓர் ஆறுதல் தேவைப்படுகின்றது. பின்னர் இரவு உணவு தயாரிப்பதிலும் மற்றும் வீட்டு வேலைகளிலும் மிகுதி நேரம் சரியாகப் போய் விடுகின்றது.

சீரியல் நாடகங்கள் இன்று குடும்பங்களுக்கு இடையில் மிகப் பெரிய தாக்கங்களை உருவாக்கிக் கொண்டிருக்கின்றன. எவ்வளவு தான் வேலை இருந்தாலும், பிள்ளைகள் படித்துக் கொண்டிருந்தாலும், அதைப்பற்றி எதுவித கவலையுமின்றி குறிப்பிட்ட நேரத்தில் நாடகங்களைப் பார்ப்பதற்கு அம்மாக்கள் தவறுவதில்லை.

பிள்ளைகள் பெற்றோரின் அன்புக்காக ஏங்குகின்றனர். அவர்களின் அரவணைப்பில் சற்று நேரம் இருக்க ஆசைப் படுகின்றனர். ஆனால் பெற்றோர்களுக்கோ அதற்கு நேரம் இல்லை. கேட்டால் பிள்ளைகளின் எதிர்கால சூபீட்சத்துக்காகவே நாம் ஓடி ஓடி உழைக்கின்றோம். பிள்ளைகளுடன் நேரத்தை செலவழிக்க எமக்கும் விருப்பம்தான். ஆனால் அவர்களுடன் கூடிய நேரத்தைச் செலவழித்தால் நாம் வேலையை இழக்க வேண்டி ஏற்படும் எனக் கூறுகின்றார்கள்.

இந்த விடயம் தொடர்பில் ஆசிரியர்களிடமும் பெரிய பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் அன்புத் தேடலை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றார்கள். அதனை மனதில் இருத்தி அவர்களை அன்புடன் அரவணைத்து, விசேடமாக ஆரம்ப வகுப்புப் பிள்ளைகளை உங்கள் பிள்ளைகள் போன்று அரவணைத்து, அவர்களுக்குத் தேவையான கல்வியைப் புகட்டுங்கள். அப்போதுதான் அப்பிள்ளைகள் உங்கள் மீது மதிப்பும், பாசமும் உடையவர் களாக விருப்புடன் கல்வி பயில்வர்.

மனித உரிமைகள் சட்டத்தின் கீழ் மாணவ மாண்வியர்களை ஆசிரியர்கள் தண்டிக்க முடியாதபடி வலுவான சட்டங்கள் இயற்றப்பட்டுள்ள போதிலும் இன்னொரு புறத்தில் சில வேளைகளில் அவை தீமையாகவும் அமைந்துவிடுகின்றன.

போருக்கு முன்னர் இலங்கையில் யாழ்ப்பாணக் கல்வி வலயம் கல்வியில் முதலிடம் வகித்தது. மீண்டும் 2009 இற்குப் பின்னர் படிப்படியாக வளர்ச்சியுற்று வருகின்ற போதும் இன்னமும் முழுமையான வளர்ச்சி நிலையை அடையவில்லை.

எம்மைச் சுற்றி ஒரு லட்சத்து 50 ஆயிரம் இராணுவ வீரர்கள், கடற்படை, விமானப்படை, பொலிஸாரும் உள்ளனர். அப்படியிருந்தும் பல்லாயிரம் கிலோக்கள் போதைப்பொருள்கள் தினமும் கடல் மூலமாக கடத்தி வரப்படுவதற்கு யார் காரணம்?

அதிபர்களே, ஆசிரியர்களே உங்கள் பாடசாலைகளில் கல்வி பயில்கின்ற ஒவ்வொரு மாணவ மாணவியரையும் நெருங்கி அவதானியுங்கள். அவர்களின் அன்றாடச் செயற்பாடுகளில் ஏதாவது மாற்றங்கள் தென்பட்டால் நடவடிக்கை எடுங்கள். உங்கள் அவதானிப்புக்களை பெற்றோர்களுக்கும் தெரியப்படுத்துங்கள் - எனவும் குறிப்பிட்டார். (த-ஜ-4)

## மக்கள் தெரிவித்த குறைபாடுகள் 4 மாதங்களின் பின்னர் ஆராய்வு

வவுனியா,மே 7

வவுனியா அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை நான்கு மாதங்கள் கடந்த நிலையில் நேரில் சென்று ஆராய்ந்தார் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப. சத்தியலிங்கம்.

குறித்த வீதிகளை விரைவில் புனரமைக்க நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் அங்கு தெரிவித்துள்ளார்.

வவுனியா ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின்போது தமது கிராம வீதிகளின் மோசமான நிலைமை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த பொதுமகன் ஒருவர், ஒருங்கிணைப்புக் குழுவால் கூட்டத்தில் இருந்து வெளியேற்றப்பட்டார்.

இவ்வாறு அனுப்பட்ட பொதுமகனின் கிராமம் உட்பட வீதிகள் மோசமான நிலையில் காணப்பட்ட நிலையில், அபிவிருத்திக் குழுக் கூட்டம் இடம்பெற்று, நான்கு மாதங்கள் கடந்து நேற்று முன்தினமே அமைச்சர் அங்கு நேரில் சென்று ஆராய்ந்துள்ளார்.

வவுனியா மாவட்டத்தில் நீண்ட நாள்களாக திருத்தப்படாது குண்டும் குழியுமாக உள்ள கணேசபுரம், மணிப்புரம், சமயபுரம் கிராமங்களின் உள்ளக வீதிகளின் நிலைமைகள் தொடர்பாகவே அமைச்சர் நேரில் பார்வையிட்டுள்ளார்.

அத்தோடு அங்குள்ள பொது அமைப்புகளின் பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இதன்போது நீண்ட நாள்களாக திருத்தப்படாதுள்ள வீதிகளில் பயணம் செய்யும்போது, எதிர் நோக்கும் சிரமங்கள் தொடர்பாக மக்கள் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

பொதுமக்களுடைய கருத்துக்களுக்குப் பதிலளித்த அமைச்சர், உள்ளூராட்சி மன்றங்களின் வீதிகளைப் புனரமைப்பதற்கான விசேட நிதி மாகாண சபையால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், முன்னுரிமை அடிப்படையில் இந்த வீதிகளைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்துள்ளார்.

(த-ஜ-21)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு எல்லைக் கிராமங்களில் 300 சிங்களக் குடும்பங்கள் குடியேற்றம்

## விகாரை ஒன்றும் அத்துமீறி அமைப்பு

கொழும்பு, மே 7
மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களில் 300 சிங்களக் குடும்பங்கள் அத்துமீறிக் குடியமர்ந்துள்ளன. அத்துடன் அங்கு விகாரை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இவற்றை மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் மற்றும் கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களாக மாதவணை மற்றும் மயிலத்தமடு பிரதேசங்கள் உள்ளன. இங்கு சிங்கள மக்கள் அத்துமீறிக் குடியமர்ந்து வருகின்றனர். விகாரைகள் அமைக்கப்படுகின்றன. இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் பொது அமைப்புக்கள் மற்றும் பொதுமக்களால் முன்வைக்கப்பட்டன.

> சிங்கள மக்கள் வாழ்ந்ததற்கான சட்ட ரீதியான ஆவணங்கள் இல்லை. குடியேற்றம் சட்ட விரோதமானது. இது தொடர்பில் கலந்துரையாடி முடிவெடுக்க 19 ஆம் திகதி கூட்டம் நடத்தவுள்ளோம் என்று கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் இதன் போது தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஆராய்வதற்காக, மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் மற்றும் கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கி.துரைராசசிங்கம் ஆகியோர் நேரில் சென்றனர்.

செங்கலடி மற்றும் கிரான் பிரதேச செயலாளர்கள் பிரிவுக்கு உட்பட்ட மேய்ச்சல் தரைப் பிரதேசமான மாதவணை மற்றும் மயிலத்தமடு பகுதிகளில் அத்து மீறிய சிங்களக் குடியேற்றங்கள் நடைபெற்றுள்ளன. அத்துடன் அங்கு பௌத்த விகாரைகளும் அமைக்கப்பட்டுள்ளன. இதனை நேரடியாக அரச அதிபர் மற்றும் விவசாய அமைச்சர் ஆகியோர் அவதானித்துள்ளனர்.

அங்கு குடியமர்ந்துள்ள சிங்கள மக்கள், தங்களுக்கான உதவிகளை மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி செய்து வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் அங்கு அமைக்கப்பட்டுள்ள விகாரையின் விகாராதிபதி கூறுகையில், 1967 ஆம் ஆண்டு இங்கு வாழ்ந்தோம். போர் காரணமாக இடம்பெயர்ந்தோம். தற்போது மீளக்குடியமர்ந்து வருகின்றோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

சிங்கள மக்கள் வாழ்ந்ததற்கான சட்ட ரீதியான ஆவணங்கள் எதுவும் இல்லை. குடியேற்றம் சட்ட விரோதமானது. இது தொடர்பில் கலந்துரையாடி முடிவெடுக்க 19 ஆம் திகதி கூட்டம் நடத்தவுள் ளோம் என்று கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் இதன் போது தெரிவித்துள்ளார். (த-ஐ-5)

## சுமித் மானவடு சாவு



கொழும்பு, மே 7
இராணுவத்தின் பீரங்கிப் படைப்பிரிவின் தளபதியான மேஜர் ஜெனரல் சுமித் மானவடு (வயது-55) கொழும்பு தேசிய மருத்துவமனையில் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.

கெஸ்பேவவில் கடந்த புதன்கிழமை காலையில், கட்டுமாணப் பணிநடந்துகொண்டிருந்த பகுதி ஒன்றைப் பார்வையிடச் சென்றிருந்தபோது, மரக்குற்றி ஒன்று தலையில் விழுந்து, மேஜர் ஜெனரல் சுமித் மானவடு படுகாயமடைந்தார்.

உடனடியாக இராணுவ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர், கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு, அங்கு அவருக்கு நரம்பியல் நிபுணரின் உதவியுடன் மூன்று மணிநேர சத்திர சிகிச்சை அளிக்கப்பட்டது.

எனினும், அவரது உடல்நிலை தேறாத நிலையில், நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜெயநாத் ஜெயவீர தெரிவித்தார். (த-ஐ-5)

# ஐ.நாவைத் திருப்திப்படுத்த பயங்கரவாதச் சட்டம் நீக்கம்

## கூறுகிறார் ஜி.எல்.பீரிஸ்

கொழும்பு,மே 7
ஐக்கிய நாடுகள் சபையைத் திருப்திப்படுத்தும் நோக்கில் பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படவுள்ளதாக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

விரைவில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அரசு ரத்துச் செய்யும். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையைத் திருப்திப்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

தேர்தல்களை ஒத்தி வைப்பது அரசின் கொள்கையாக மாற்றமடைந்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீள ஒருங்கிணையும் அபாயம் நிலவி வரும் நிலையில், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் பாதுகாப்பு நீக்கிக் கொள்ளப்பட்டமை ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதான இலக்கே மகிந்த ராஜபக்ச தான்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஊடகவியலாளர்களை அச்சுறுத்தி வருகின்றார். அவர்களுக்கு எதி ராக நடவடிக்கை எடுக்கப் போவதாக நாடாளுமன்றிலேயே அச்சுறுத்தி வருகின்றார் - எனவும் அவர் தெரி வித்தார். (த-ஐ-5)

இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி நடத்தும்
இயல், இசை நாடக அரங்கு - 2016
07.05.2016 நான்காம் நாள் சனிக்கிழமை
நேரம்:- பிற்பகல் - 4.30 மணி
தலைவர்
திரு.ந.ஐங்கரன்
(அபிவிருத்தி உத்தியோகத்தர் நீர்ப்பாசனத் திணைக்களம் - கிளிநொச்சி)
பிரதம விருந்தினர்
கலாநிதி சி.ஜெயசங்கர்
(பணிப்பாளர் - சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகம்)
» நாச்சிமார் கோயிலடி சிவதாஸ் பிரபாகரன் குழுவினர் வழங்கும் மங்கல இசை
• நாதஸ்வரம் :- ஈழ.நல்லூர் பி.எஸ்.ஜெயசங்கர், இணுவையூர் பி.எஸ்.கரிகரன்
• தவில் :- நாச்சிமார் கோயிலடி சிவதாஸ் பிரபாகரன், பதுளை பி.உதயசங்கர்
» மங்கல விளக்கேற்றல்
» திருமுறை :- செல்வி ச.சர்மிக (சாரங்கம் இசை மன்றம்)
» ஆசியுரை :- அருட்தந்தை வண A.அகஸ்ரீன் (இயக்குநர் மறைக்கல்வி நடுநிலையம் - யாழ்ப்பாணம்)
» வாழ்த்துரை :- திரு.பொ.வாகீஸ்வரன் (ஆணையாளர் - யாழ்.மாநகரசபை)
» தலைமையுரை :- தலைவர்
» சைவவித்தியா விருத்திச் சங்க 'கருணை இல்ல' மாணவிகள் வழங்கும் வரவேற்பு நடனம்.
• நட்டுவாங்கம் :- திருமதி யாழினி ரதீஸ்வரன்,
• பாட்டு :- செல்வி ரா.அறிவழகி, செல்வி சி.கோகிலமதி
• வயலின் :- திருமதி இந்துமதி தயாபரன்,
• மிருதங்கம் :- திரு.கே.சிவகுமார்.
» இசைக்கச்சேரி
• பாட்டு :- திரு.க.ரஜீவன்
• வயலின் :- பிறிசில்டா ஜோஜ்
• மிருதங்கம் :- க.கஜன்
• மோர்சிங் :- சி.செந்தூரன்
• கெஞ்சிரா :- சிவசுந்தர சர்மா
» சக்ஸபோன் பிறதேஸ்
நாதஸ்வர இசைக்கலைமணி வை.நவரூபன்
நுண்கலைமாணி வை.கானரூபன் வழங்கும் இசைச் சங்கமம்
» நிருத்தியமாலை
• நடனம் :- திரு.செ.ஸ்ரீகண்ணன், திரு.ம.தவேந்திரன் செல்வி. வானதி லிங்கநாதன்
• நட்டுவாங்கம் :- திருமதி பிரியதர்ஷினி வாகீசன்
• பாட்டு :- கலாநிதி ஸ்ரீ தர்ஷனன்
• மிருதங்கம் :- கலாநிதி சி.மகேந்திரன்
(முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர்- யாழ்.பல்கலைக்கழகம்)
• கீ - போட் :- திரு ந.செல்வச்சந்திரன்
» கலைஞர்கள் கௌரவிப்பு
» பிரதம விருந்தினர் உரை
» செம்முகம் ஆற்றுகைக் குழு வழங்கும் 'இப்பொருள் யாருக்கு'
எழுத்துரு நெறியாள்கை சீலன்
» நன்றி உரை
அனுசரணை: கிருபா லேணர்ஸ்

# சபைக்குள் ஏற்பட்ட குழப்பநிலை மே தினத் தோல்வியின் எதிரொலி

## அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவிப்பு

கொழும்பு,மே 7
மே தினத்தில் ஏற்பட்ட தோல்வியைச் சகித்துக் கொள்ளமுடியாததன் காரணமாகவே, கூட்டு எதிரணியினர் திட்டமிட்டு நாடாளுமன்றத்தில் பிரச்சினையை தோற்றுவித்தனர்.

இவ்வாறு ஊடக மற்றும் நாடாளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடாளுமன்றத்தில் மிகவும் மோசமான சம்பவம் ஒன்று இடம்பெற்றது. சபாநாயகருக்கு இடையூறு விளைவித்துக் கூட்டு எதிரணியினர் மோசமான நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர். மே தினத்தில் ஏற்பட்ட தோல்வியைச் சகித்துக்கொள்ள முடியாததன் காரணமாகவே திட்டமிட்டு இவ்வாறு அவர்கள் நடந்து கொண்டனர்.

சபாநாயகர் கேள்வி நேரத்துக்காகச் சந்தர்ப்பம் வழங்குவதாகக் கூறியும், பிரச்சினையை ஏற்படுத்தினர். தேசிய அரசின் கட்சிகள் மிகவும் வெற்றிகரமான மே தினக் கூட்டங்களை நடத்தின. தமது பக்கம் இருப்பதாகக் கூறிய மக்கள் வேறு பக்கம் இருந்ததைப் பொறுத்துக் கொள்ள முடியாததன் காரணமாகவே கூட்டு எதிரணியினர் நாடாளுமன்றத்தில் இவ்வாறு நடந்து கொண்டனர்.

நாடாளுமன்றத்தில் தொடர்ந்து இவ்வாறு நடந்துகொள்ள முடியாது. சபாநாயகர் இது தொடர்பில் கடும் நடவடிக்கை எடுப்பதாகக் கூறியுள்ளார். நாடாளுமன்றக் காணொலிகள் உள்ளன. என்ன நடந்தது என்று எல்லோருக்கும் தெரியும். நாடாளுமன்ற ஒழுங்கு விதியை மீறி இவர்கள் இவ்வாறு செயற்பட்டுள்ளனர்.

பீல்ட் மார்ஷல் ஒருவருக்கு, முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்புத் தொடர்பில் கருத்துக்கூற அனுமதியுண்டு-என்றார். (த-ஐ-5)

# ருவான் குணசேகர மீது ஒழுக்காற்று விசாரணை

கொழும்பு,மே 7
பொலிஸ் முன்னாள் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகரவுக்கு எதிராக, ஒழுக்காற்று விசாரணைகளை மேற்கொள்ளுமாறு, பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தரவுக்கு, சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க உத்தரவிட்டுள்ளார்.

மூன்று நாள்களுக்குள் இந்த விசாரணை அறிக்கையைத் தமக்குச் சமர்ப்பிக்குமாறும், அமைச்சர் சாகல ரத்நாயக்க அறிவித்துள்ளார்.

அத்துடன், முன்னாள் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகரவை ஊடகங்களுடன் தொடர்புடைய எந்தப் பணியிலும், நியமிக்கக் கூடாது என்றும் அமைச்சர் சாகல ரத்நாயக்க அறிவுறுத்தியுள்ளார்.

சாவகச்சேரி வெடிபொருள் மீட்புச்சம்பவம் தொடர்பாக ஊடகங்களுக்குத் தகவல் வெளியிட்டதையடுத்து, பொலிஸ் ஊடகப் பிரிவு முடக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (த-ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூடுபிடிக்கும் தாஜுதீன் படுகொலை விவகாரம்

## நீதிமன்ற விசாரணையில் திடுக்கிடும் தகவல்கள்

கொழும்பு, மே 7
ரகர் வீரர் தாஜுதீன் படுகொலைச் சம்பவத்தை, நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலைய முன்னாள் குற்றவியல் பொறுப்பதிகாரியான சுமித் சம்பிக்க பெரேரா முன்கூட்டியே அறிந்து வைத்திருந்தார். இவ்வாறு தாம் வலுவாக நம்புவதாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு மேலதிக நீதிவான் ஒகஸ்டா அத்தபத்து முன்னிலையில் நேற்று முன்தினம், வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. குற்றப் புலனாய்வுப் பிரிவின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் விக்கிரமசேகர மேற் படி விடயங்களை மன்றில் முன்வைத்தார்.

தாஜுதீன் வழக்கு, மேலதிக நீதிவான் நிசாந்த பீரிஸ் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு வருகின்றது. அவர் நேற்று முன்தினம் நீதிமன்றுக்கு வருகை தரவில்லை. இதனால் ஒகஸ்டா அத்தப்பத்து முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

தாஜுதீன் கொலையை மூடிமறைத்தமை, சாட்சிகளை அழித்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் கீழ், கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சுமித் சம்பிக்க பெரேரா மன்றில் முற்படுத்தப்பட்டார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் விக்கிரமசேகர விசாரணை அறிக்கையை மன்றில் சமர்ப்பித்தார். படுகொலை குறித்த நியாயமான சந்தேகத்தின் அடிப்படையில் பொலிஸ் பரிசோதகர் சுமித் சம்பிக்க பெரேராவைக் கைது செய்துள்ளோம். இவர் எமக்கு வாக்குமூலங்கள் வழங்கியுள்ளார். அதன் உண்மைத் தன்மையை உறுதி செய்யும் விசாரணை நடைபெறுகின்றது.


**தகவல் வழங்கியது யார் ?**

சந்தேக நபரான சுமித், தாஜுதீன் விவகாரத்தைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியே தனக்கு முதலில் தொலைபேசியில் அறிவித்தாகக் குறிப்பிட்டார். அதனையடுத்தே சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணை செய்ததாகவும் தெரிவித்தார். சுமித் இவ்வாறு குறிப்பிட்ட காலப் பகுதியினுள், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடமிருந்து அவருக்கு எந்தவொரு தொலைபேசி அழைப்பும் செல்லவில்லை. சுமித்தின் கைத்தொலைபேசி மற்றும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் கைத்தொலைபேசியை நாம் ஆய்வு செய்தோம். இதன்போது சுமித்தின் கூற்றுக்கான எந்தச் சான்றும் அதில் இல்லை.

தாஜுதீன் சம்பவம் இடம்பெறும்போது, சுமித் விடுமுறையில் இருந்துள்ளார். இவ்வாறான நிலையில் சுமித்துக்கு யார் தகவல் சொன்னார்கள் என்பதில் சந்தேகம் ஏற்படுகின்றது. அத்துடன் சுமித்தே, விசாரணைக்கு முதலாவது நபராகச் சென்றுள்ளார். இது தாஜுதீன் படுகொலையை அவர் முன்கூட்டியே அறிந்துள்ளாரா என்ற சந்தேகத்தை வலுவடையச் செய்கின்றது.

**வலுக்கும் சந்தேகம்**

எனது 28 வருட காலப் பொலிஸ் சேவையில், விபத்து இடம்பெற்றால், அது தொடர்பில் பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்துப் பிரிவே விசாரணைகளை ஆரம்பிக்கும் என்பதை நான் அறிவேன். இந்தச் சம்பவத்தில் மட்டும் குற்றவியல் பிரிவு எப்படி முதலில் விசாரணை செய்தது. அதுவும் விடுமுறையில் இருந்த அதிகாரி வந்து விசாரணை செய்தது எப்படி? இவை எமது சந்தேகத்தை வலுப்படுத்தும் காரணிகளாகும்.



விபத்து என்றால், மோட்டார் வாகனத்திணைக்கள அதிகாரிகளைச் சம்பவ இடத்துக்கு அழைத்திருக்கவேண்டும். அதனைச் செய்யவில்லை. அரச இரசாயனப் பகுப்பாய்வாளர்கள், எரிந்த வாகனத்தை நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலையம் கொண்டு வருமாறு பணித்துள்ளனர். ஆனால் அதனைச் சுமித் செய்யவில்லை. இவையெல்லாம், சுமித் மீது நியாயமான சந்தேகங்களை ஏற்படுத்துகின்றன. எனவே அவருக்குப் பிணை வழங்குவதை நான் எதிர்க்கின்றேன் - என்றார் விக்கிரமசேகர.

> சந்தேக நபரான சுமித், தாஜுதீன் விவகாரத்தைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியே தனக்கு முதலில் தொலைபேசியில் அறிவித்தாகக் குறிப்பிட்டார். அத னையடுத்தே சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணை செய்ததாகவும் தெரிவித்தார். சுமித் இவ்வாறு குறிப்பிட்ட காலப் பகுதியினுள், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடமிருந்து அவருக்கு எந்தவொரு தொலைபேசி அழைப்பும் செல்லவில்லை.

சம்பவம் இடம்பெற்ற பின்னர் நாரஹேன்பிட்டி பொலிஸாரினால் மன்றுக்கு 2012 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட பீ அறிக்கை, 17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அறிவித்தல் அறிக்கை, சம்பவ இடத்தைப் பார்வையிட்ட நீதிவானின் குறிப்பு உள்ளிட்ட ஆவணங்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளைத் தமக்குக் கையளிக்குமாறு விக்கிரமசேகர நீதிவானைக் கோரினார். அதற்கு நீதிவான் அனுமதி வழங்கினார்.

இதன் பின்னர் சந்தேகநபரான பொலிஸ் பரிசோதகர் சுமித் சம்பிக்க பெரேரா சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி அஜித் பத்திரன தனது வாதங்களை முன்வைத்தார். கொலையுடன் தொடர்பில்லாத ஒருவரை, அந்தக் கொலை தொடர்பில் விசாரணை செய்தவரைக் கைது செய்தமை ஆச்சரியமளிக்கின்றது.

**முறைப்படியே செய்தார்**

சுமித் 18 வருடங்களாகப் பொலிஸ் பரிசோதகர் தரத்திலேயே இருக்கின்றார். குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சொல்வதைப் போன்று, எவரோ ஒருவரின் தேவைக்காக எனது சேவை பெறுநர் இந்தக் கொலையை மறைத்திருந்தால், அதற்குப் பிரதி உபகாரமாக அவர் பிரதிப் பொலிஸ்மா அதிபராக மாறியிருக்கவேண்டும். ஆனால் அவ்வாறு இடம்பெறவில்லை. அவர் இந்த விசாரணையின் பின்னர், பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்துக்கு இடமாற்றப்பட்டார். அண்மையிலேயே மீண்டும் கொழும்புக்கு அழைக்கப்பட்டார். குற்றப் புலனாய்வுப் பிரிவினர் எனது சேவை பெறுநரான சுமித் செய்யாத விடயங்களையே சுட்டிக் காட்டினர். ஆனால் தாஜுதீன் விவகாரத்தில் எனது சேவை பெறுநர் மேற்கொண்ட நடவடிக்கைகளை நான் முன்வைக்கின்றேன்.

சம்பவ இடத்துக்கு எனது சேவை பெறுநரான பொலிஸ் பரிசோதகர் சுமித் சென்றார். அங்கு பொலிஸ் தடயவியல் பிரிவினரை அழைத்தார். சட்ட வைத்திய அதிகாரிக்குத் தெரியப்படுத்தினார். நீதிவானுக்குத் தகவல் வழங்கினார்.

அங்கிருந்த தாஜுதீனின் உறவினர்களிடம் சாட்சியம் பதிவு செய்தார். தாஜுதீனுடன் இறுதியாகச் சென்றவர்களிடமும் சாட்சியம் பதிந்தார். அரச இரசாயன பகுப்பாய்வு அதிகாரிகளுக்குத் தகவல் வழங்கினார். விபத்தின் போது செய்ய வேண்டிய விடயங்களை சுமித் செய்தார். இதன் பின்னர் பொலிஸ் உயர் மட்டக் கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. விசாரணை செய்யும் பொறுப்பு சுமித்திடமிருந்து மீளப் பெறப்பட்டது. வேறு ஒருவருக்கு அது வழங்கப்பட்டது. சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆகியோர் இதனை முன்னெடுத்துள்ளனர்.

**விசாரணை பிடுங்கப்பட்டது**

இது விபத்து. நீர் விசாரணை மேற்கொண்டது போதும். மேலதிக விசாரணைகளை குற்றத் தடுப்புப் பிரிவுக்கு வழங்கலாம். இவ்வாறு தெரிவித்து, சுமித் சேகரித்த சாட்சியங்கள் உயர் அதிகாரிகளினால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. ஆரம்பக் கட்ட விசாரணைகளின் பின்னர் மேலதிக விசாரணைகளை மேற்கொள்வது யார் என்று தீர்மானிக்கும் அதிகாரம் சுமித்துக்கு இல்லை. அவரிடமிருந்து பிடுங்கப்பட்ட விசாரணைகளுக்கு அவர் பொறுப்புக் கூற முடியாது.

குற்றப் புலனாய்வுப் பிரிவினர், சுமித்தின் வாக்குமூலங்கள் ஒன்றுக்கொன்று முரணானது என்கின்றனர். அது என்ன என்பதை நான் கூறுகின்றேன்.

**முரண்பாடுகள் என்ன ?**

எனது சேவை பெறுநர் சுமித், தாஜுதீன் விசாரணைக்காகத் தான் வீட்டில் இருந்து சென்றதாக ஓரிடத்திலும், பொலிஸ் நிலையத்திலிருந்து சென்றதாக இன்னொரு இடத்திலும் வாக்குமூலம் வழங்கியுள்ளார். ஒருவேளை சாட்சிப் பதிவின்போது ஏற்பட்ட பிழையாகக் கூட இது இருக்கலாம். திடீர் இறப்பு விசாரணைக்காகப் பொலிஸ் கான்ஸ்டபிள் வீரக்கோனுடன் சென்றதாகக் கூறியுள்ளார். இன்னொரு சந்தர்ப்பத்தில் வீரக்கோனின் பெயரைக் குறிப்பிடவில்லை. இது வழமையாக எல்லாப் பொலிஸாரும் செய்யும் வேலையாகும். அவர்களுக்குக் குறிப்பிட்ட நியாயமான கால அவகாசம் வழங்கப்பட்டிருக்க வேண்டும். இதுதான் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் குறிப்பிடும் முரண்பாடுகள்.

ஆரம்ப விசாரணைகளின் பின்னர், தாஜுதீனுக்குச் சொந்தமான பணப் பொதி கிருலப்பனையில் மீட்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுர சேனநாயக்கவுக்கு தெரிய வந்துள்ளது. அது தொடர்பில் தகவல் கோரியுள்ளார் சுமித். இதன்போது அது தொடர்பில் எனக்குத் தெரியாது. கிருலப்பனை பொலிஸ் நிலையத்திலேயே உள்ளது என்று குறிப்பிட்டபோது, கிருலப்பனை பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு எதிராகக் குற்றப் பத்திரிகையை அனுர சேனநாயக்க அனுப்பியுள்ளார்.

இது தொடர்பில் நீங்கள் தேடிப்பாருங்கள். விசாரணையை மறைத்தது யார் என்று தெரியும். எனது சேவை பெறுநருக்கு விசாரணைகளுக்குச் சந்தர்ப்பமே வழங்கப்படவில்லை. இவ்வாறான நிலையில் அவரைக் கைது செய்துள்ளமை ஏற்றுக்கொள்ள முடியாதது - என்றார் அஜித்.

**பக்கச் சார்பாகச் செயற்படக் கூடாது**

இதன் பின்னர், குற்றப் புலனாய்வுப் பிரிவின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் விக்கிரமசேகர பதிலளித்தார். சந்தேக நபர் சுமித்துக்கு உயர் அதிகாரிகளால் பாதிப்பு ஏற்பட்டிருந்தால் அவர் அதனை எங்களிடம், விசாரணையின் ஆரம்பத்தில் தெரிவித்திருக்கலாம். அவரிடம் 6 முறை வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வாக்குமூலங்களைப் பதிவு செய்தோம். அவை ஒன்றுக்கொன்று முரணானவை - என்றார்.

இதன் பின்னர் நீதிவான் ஒகஸ்டா அத்தப்பத்து, குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இந்த விசாரணைகளில் பக்கம் சார்ந்து செயற்படக் கூடாது. சட்டத்தரணிகள் எழுப்பும் சந்தேகங்களுக்கு விடை காணும் விதமாக அதனையும் கருத்திற் கொண்டு விசாரணைகளை முன்னெடுக்கவேண்டும் - என்றார்.

தாஜுதீன் தரப்பு சட்டத்தரணி மிஸ்பாஹ் சத்தார், விசாரணைகள் தொடர்கின்றன. இந்த நிலையில் சந்தேகநபர் தொடர்பில் உறுதியான நிலைப்பாட்டுக்கு வர முடியாது என்று குறிப்பிட்டார்.

இதன் பின்னர் நீதிவான் ஒகஸ்டா அத்தப்பத்து, இந்த வழக்குத் தொடர்பில் ஊடகங்கள் ஊடாக அறிந்து கொண்ட தகவல்களே அதிகம். இது தொடர்பிலான உறுதியான நிலைப்பாட்டுக்கு வர முடியாது. இந்த வழக்குத் தொடர்பில் வழமையான விசாரணைகளை முன்னெடுக்கும் நீதிவானே, தீர்மானம் எடுக்கும் வகையில் விசாரணைகளைக் குறுகிய நாள்களுக்கு ஒத்திவைக்கின்றேன். வழக்கு 12 ஆம் திகதி எடுத்துக்கொள்ளப்படும் வரையில் சந்தேகநபரைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கவும் - என்றார். (த-ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பாட்டும் நானே, பாவமும் நானே போக்கில் நல்லாட்சி அரசு...!

முன்னாள் போராளிகளின் மீதான திடீர் கைது நடவடிக்கைகளைக் கண்டித்து, நேற்று முன்தினம் அம்பாறையில் முன்னெடுக்கப்பட்ட கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது--

பௌத்த பிக்கு ஒருவரது தலைமையில் கூடியவர்கள் தாக்குதல் நடத்த முயற்சித்தனர். பொலிஸார் முன்னிலையில் அந்த அராஜகம் நடைபெற்றது. அதனால் அங்கு பெரும் பதற்றமும் களேபரமும் நீண்ட நேரம் நிலவின.

சிங்கலே அமைப்பை சேர்ந்தவர்களே, அந்தச் சட்டவிரோதச் செயல்களில் ஈடுபட்டனர் என்று அறியப்படுகிறது.

ஜனநாயக நாட்டில், நல்லாட்சி நிலவும் தேசத்திலேயே, ஜனநாயக வழியிலான எதிர்ப்பைத் தெரிவிப்பவர்களுக்கு ஆபத்து வந்துவிட்டதையே, மேற்போந்த சம்பவம் முழு அளவில் தொட்டுக் காட்டுகிறது; நிரூபிக்கிறது என்று கொள்ளலாம்.

பொலிஸாரின் முன்னிலையிலேயே, இந்த அதர்மம் நடந்தேறி உள்ளது என்றால், நாட்டில் சட்டமும் ஒழுங்கும் கரைந்து விட்டன என்பதே, அதன் ஆழமான அர்த்தம்.

ஒட்டு மொத்தத்தில்-

ஜனநாயகம் ஆழ வேர் ஊன்றிய வேறு எந்த நாட்டிலும் இத்தகைய அதர்ம நிலை மேல் எழமாட்டாது!

ஜனநாயக நாடு என்று பீற்றிக் கொள்ளும் இங்கு, சிறுபான்மையினரைச் சகபாடிகளாகக் கருதி, அங்கீகரித்து அவர்களுக்கு உரித்தான உரிமைகளை வழங்குவதற்கு, அரசு தானாகவே நடுநிலைநின்று செயற்பட வேண்டும். ஆனால் இங்கு, அனைத்தும் தலைகீழாகத் தொங்கும் கேவலமே, உயர்ந்து வருகிறது!

நல்லாட்சி நிலவுவதாகப் பீற்றப்படும் இந்த நாட்டில், ஜனநாயக வழியில் மக்கள் (அவர்கள்) விரும்பும் வழி நின்று எதிர்ப்பைத் தெரிவிக்கும் உரிமைக்கு ஆபத்து வந்துள்ளதையே, அம்பாறைச் சம்பவம் முழு அளவில் பிரதிபலிக்கிறது.

நல்லாட்சிஅரசு, ஜனநாயக வழியிலான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நசுக்கி, அழிப்பதற்கு கங்கணம் கட்டி விட்டதா என்று வினாவுவதை விட, வேறு எந்த விதத்தில் கேள்வி எழுப்ப இயலும்...?

பாட்டும் நானே, பாவமும் நானே என்ற நிலை நின்று செயற்பட, நல்லாட்சி அரசு முனைவதை சுட்டிக் காட்டித்தான் ஆகவேண்டும்.

# இலங்கையில் தேடப்பட்டுவரும் நபருடன் தாய்லாந்தில் மகிந்த ராஜபக்ச குதூகலிப்பு

தமிழில்: கஜிவசி



அன்று ஞாயிற்றுக் கிழமை. கட்டுநாயக்கா வானூர்தி நிலையத்தில் இருந்து எயார் பஸ் ஏ 300#200 வானூர்தியைக் கப்டன் கோலித்த எக்கநாயக்க பாங்கொக் நோக்கிக் கிளப்பியபோது, வானூர்தியில் பயணம் செய்யும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மிகப் பெரும் சர்ச்சை ஒன்றுக்குள் சிக்கும் நிலையில் பயணப்பட்டுக் கொண்டிருக்கிறார் என்று அதிலிருந்த எவருமே எதிர்பார்த்திருக்கவில்லை.

### முன்வரிசையில் மகிந்த

வர்த்தக இருக்கைகள் பகுதியின் முதல் வரிசையில் அமர்ந்திருந்த மகிந்த, அந்த மூன்று மணி நேர வானூர்திப் பயணம் முழுவதிலும் முன்னால் இருந்த தொலைக் காட்சியைப் பார்த்துக்கொண்டும் தேநீரை உறிஞ்சிக் கொண்டும் நேரத்தைக் கடத்தினார். அவருக்கு அருகில் முன்னாள் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அமர்ந்திருந்தார். தனது கையில் வைத்திருந்த அன்றையதின 'லங்காதீப' பத்திரிகையைத் துருவித் துருவிப் படித்துக் கொண்டிருந்த அவர் விரைவிலேயே தலைதொங்கத் தூங்கிப் போனார்.

இவரைத் தவிர மகிந்தவுடன் பயணித்த மற்றுமொரு அரசியல்வாதி மேல் மாகாண சபை உறுப்பினர் உபாலி கொடிகார.

இதில் சுவாரசியம் என்னவென்றால், 2015 ஜனவரி மாதம் 9ஆம் திகதி ஜனாதிபதியாக மைத்திரிபாலசிறிசேன பதவியேற்றவுடன், ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி அரசில் தாமும் இணைந்து கொள்ள முடியுமா என்று அறிவதற்காக மைத்திரியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியவர்கள்தான் இந்த இருவரும். இவர்கள்தான் இப்போது மீண்டும் மகிந்த ராஜபக்சவின் நெருங்கிய அரசியல் சகாக்களாக மாறியிருக்கிறார்கள்.

சிறப்பான நாள்களுக்குரிய ஆடம்பர கோர்ட் சூட்டில் வானூர்தியின் மலிவு இருக்கைப் பகுதியில் பயணித்த கொடிகார, வானூர்தியின் வர்த்தக இருக்கைகளுக்கும் மலிவு இருக்கைகளுக்கும் இடையிலிருக்கும் துணியிலான திரை காலை உணவு நேரத்துக்காக இழுத்துவிடப்பட்டு இரு பகுதிகளும் பிரிக்கப்பட்டதும், கொடிகார அடிக்கொரு தடவை வர்த்தகப் பகுதியை நோக்கிச் சென்று மகிந்தவை எட்டிப் பார்த்து ஒரு கண் வைத்துக்கொண்டார். பின்னர் தனது இருக்கைக்கு அருகில் இருந்த மகிந்தவின் மெய்ப் பாதுகாவலர்கள் நால்வருக்கும் மகிந்தவின் நலன் குறித்துத் தகவல் சொல்லிக்கொண்டார்.

### ராஜபக்சவுக்கு நறுமணத் திரவப் போத்தல்

பயணம் மிக இயல்பானதாக இருந்தது. வானூர்தி தரையிறங்குவதற்காகத் தனது சில்லுகளைத் தொப்பென்று கீழே இறக்குவதை திரைகள் காட்டிக்கொண்டிருந்த போது ராஜபக்ச கழிப்பறை நோக்கி நடந்துகொண்டிருந்தார். விமானியின் பகுதிக்குச் சற்று முன்பாக அந்தக் கழிப்பறை இருந்தது. நடைபாதையில் நின்றபடி வானூர்தியின் சாரளக் கண்ணாடித் திரைகளை உயர்த்திவிடுவதில் பணிப்பெண்கள் மும்முரமாக ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். திடீரென மலிவு இருக்கைப் பகுதியிலிருந்து எழுந்து வந்த ராஜபக்சவின் பாதுகாவலர் ஒருவர் கழிப்பறை வாசலில் நின்று கொண்டார். ராஜபக்ச கழிப்பறையை அடைந்ததும் தனது காற்சட்டையின் பின்புறப் பையில் இருந்து நறுமணத் திரவப் போத்தல் ஒன்றை இழுத்தெடுத்து ராஜபக்சவின் கையில் கொடுத்தார். பின்னர் தனது அடுத்த பின்புறப் பையில் இருந்து ஒரு பற்தூரிகையை எடுத்தார். அவற்றைக்கொண்டு தன்னை அழகுபடுத்திக்கொண்ட ராஜபக்ச விமானப் பணிப்பெண்ணைப் போன்று அந்த இடத்தில் நின்று கொண்டிருந்தார், அதைக் கண்டதும் மலிவு இருக்கைப் பகுதியில் இருந்த சிலர், பயணிகள் அனைவரும் தமது இருக்கைப் பட்டிகளை இறுக்கிக்கொள்ளுங்கள் என்கிற விமானியின் அறிவுறுத்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையும் அசட்டைசெய்தபடி ராஜபக்சவுடன் சேர்ந்து ஒளிப்படம் எடுப்பதில் ஆர்வம் காட்டினர். சிலர் அவருடன் செல்பி எடுத்துக் கொண்டனர். ஜனாதிபதிப் பதவியில் இல்லாதபோதும் ராஜபக்சவின் மவுசு இன்னமும் குறையவில்லை என்பதையே அது எடுத்துக்காட்டியது. அவர் பயணத்துக்காக வருகை தந்தபோதும்கூட இத்தகைய காட்சிகள் நடந்தேறின.

பாங்கொக் வானூர்தி நிலையத்தில் விமானம் இறங்கியபோது சிறப்பு விருந்தினர் வாசல் ஊடாகவே ராஜபக்ச வெளியேறினார். அங்கே, தாய்லாந்து நாட்டுக்கான இலங்கைத் தூதுவர் சேனுக்கா செனிவிரட்ன அவரை வரவேற்று உபசரித்தார். ராஜபக்சவின் அரசில் அயலுறவுச் செயலராக இருந்தவர் அவர். ராஜபக்சவுக்குத் தேவையான நெறிமுறையான (புரட்டகோல்) உதவிகளை வழங்கும்படி கொழும்பிலுள்ள அயலுறவுத் துறை அமைச்சு அவருக்கு அறிவுறுத்தல்களை வழங்கியிருந்தது. பாங்கொக் பயணம் குறித்து ராஜபக்சவின் அலுவலகம் அயலுறவுத்துறை அமைச்சுக்கும் ஜனாதிபதியின் அலுவலகத்திற்கும் அறிவித்ததை அடுத்து இந்த நெறிமுறைக்குஅயலுறவுத்துறைஅமைச்சு ஏற்பாடு செய்திருந்தது. அதியுயர் பாதுகாப்புப் பகுதியான சிறப்பு விருந்தினர் பகுதிக்குள் அவர்கள் எப்படி நுழைந்தனர் என்பது தெரியாதபோதும், பாங்கொக்கில் வசிக்கும் இலங்கையர்கள் சிலரும் இந்த வரவேற்பில் கலந்துகொண்டிருந்தனர். மகிந்தவின் வெளியேற்றத்தின்போது இந்த விவகாரம் சிக்கலாக உருவெடுத்தது.

### உள்ளூர் வானூர்திப் பயணம்

ஒரு மணித்தியாலத்திற்கும் குறைவான நேரத்தில் ராஜபக்சவும் கூட வந்திருந்தவர்களும் மீண்டும் உள்ளூர் வானூர்தி ஒன்றில் உடோன் தானி என்ற இடத்திற்குப் புறப்பட்டார்கள். உடோன் தானி மாநிலத்தில் உள்ள சில இடங்கள் தென்கிழக்காசிய நாடானலாவோஸ், வடக்கு வியட்நாம் மற்றும் சீனா என்பவற்றின் வாசல்கதவுகள் என்று வர்ணிக்கப்படுபவை. தாய்லாந்தின் இந்தப் பகுதி ஏனைய நாடுகளில் இருந்து மிகொங் நதியால் பிரிக்கப்படுகிறது.

வியட்நாம் போரின்போது உடோன் தானி நகரத்தில் உள்ள வான்படை வானூர்தித் தளம் முக்கிய பங்கை வகித்திருந்தது. மாநிலத்திலுள்ள நோசும்ரன் என்ற கிராமத்தில் உள்ள விகாரைக்கு வருமாறு ராஜபக்சவுக்கு அதன் விகாராதிபதி அழைப்பு விடுத்திருந்தார். அதனை ஏற்று ராஜபக்ச அங்கு சென்றபோது, தாய்லாந்தில் வசிக்கும் இலங்கையர்கள் பலரும் அங்கு வந்திருந்தனர். அவர்களில் இருவர் ராஜபக்சவின் பாங்கொக் மற்றும் உடோன் தானி பயணத்தை ஏற்பாடு செய்தவர்கள் என்று கூறப்படுகிறார்கள். தாய்லாந்தில் உள்ள இலங்கையர்களுக்கு இந்தவாரம் அனுப்பப்பட்ட ஒரு பட்டியலில், தம்மால் தனித்து ராஜபக்சவின் பயணத்துக்கான சுமையைத் தாங்க முடியாது என் பதால் நிதி உதவிகளை எதிர்ப்பார்க் கிறார்கள் என்று அந்த இருவரும் தெரி வித்திருந்தார்கள்.

### தேடப்படுபவருடன் சந்திப்பு

ஆனால், உடோன் தானியில் ராஜபக்சவின் பயணம் ஒரு பெரும் திருப்பத்தை ஏற்படுத்தியது. அந்த மாகாணத்தின் பெருமைக்குரிய தலைவர்களை மட்டும் அவர் சந்திக்கவில்லை. மற்றொரு விருந்தினரும்கூட அங்கிருந்தார். அவர் இலங்கையில் தீவிரமாகத் தேடப்பட்டு வருபவர். மிக்-27 போர் வானூர்திகளை வாங்கிய விவகாரத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடிகள் தொடர்பில் விசாரணைக்காகத் தேடப்படும் நபர் அவர். ராஜபக்சவின் நெருங்கிய உறவினரான உதயங்க வீரதுங்கதான் அந்த நபர். ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் ரஷ்ய நாட்டுக்கான தூதராகப் பதவி வகித்தவர். அவர் அங்கே மிக இயல்பாக நடமாடிக் கொண்டிருந்தார். எவரும் அவரை அடையாளம் கண்டுகொள்ளவில்லை. பிக்குகளிடம் ஆசீர்வாதம் பெற்றதுடன் அங்கே கூடியிருந்த சிறிய எண்ணிக்கையிலான இலங்கையர்களுடனும் அளவளாவிக்கொண்டிருந்தார். அவர்களில் ஒருவரான, ராஜபக்சவின் பயணத்தை தாமே ஒழுங்கு செய்தவர்கள் என்று பெருமைகொண்டாடிய இருவரில் ஒருவர், முகப் புத்தகத்தில் ஒளிப்படம் ஒன்றைத் தரவேற்றியதுமே அதிலிருந்தவர் உதயங்க வீரதுங்கதான் என்பது அடையாளம் கண்டுகொள்ளப்பட்டது. மிக மிக வேகமாக (வைரலாக) அது பரவியது.

வீரதுங்க எப்படி தாய்லாந்துக்குள் நுழைந்தார்? அதிகாரம்மிக்க கொழும்பு அரச தரப்புத் தகவல்களின் அடிப்படையில் வீரதுங்க் தாய்லாந்துக்குள் நுழைந்தமைக்கான உள்நுழைவு ஆவணங்கள் எவையும் பாங்கொக்கில் இல்லை. கொழும்பு குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் வீரதுங்கவின் இராஜதந்திர கடவுச்சீட்டை முடக்கிவிட்டபோதும் அதனை அவர் தொடர்ந்தும் பயன்படுத்தி வருகிறார் என்று பொலிஸ் தகவல்கள் கூறுகின்றன.

> **வீரதுங்க எப்படி தாய்லாந்துக்குள் நுழைந்தார்? அதிகாரம்மிக்க கொழும்பு அரச தரப்புத் தகவல்களின் அடிப் படையில் வீரதுங்க தாய்லாந்துக்குள் நுழைந்தமைக்கான உள்நுழைவு ஆவணங்கள் எவையும் பாங்கொக்கில் இல்லை. கொழும்பு குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் வீரதுங்கவின் இராஜதந்திர கடவுச் சீட்டை முடக்கிவிட்ட போதும் அதனை அவர் தொடர்ந்தும் பயன்படுத்தி வருகிறார் என்று பொலிஸ் தகவல்கள் கூறுகின்றன.**

அவரது இராஜதந்திரக் கடவுச்சீட்டை நீக்கியமை தொடர்பான விவரங்கள் அனேகமான வெளிநாடுகளுக்குப் போய்ச் சேரவில்லை என்றும் அதிகாரிகள் கூறுகின்றார்கள். எப்படியிருந்தபோதும் நம்பகமான தகவல்களின் அடிப்படையில், தாய்லாந்து குடிவரவுத் திணைக்களம் வீரதுங்கவின் பெயரை கண்காணிக்க வேண்டியவர்கள் பட்டியலில் ஏற்கனவே சேர்த்துள்ளது என்றால், லவோஸ் அல்லது வியட்நாமுக்கு வேறு கடவுச்சீட்டு மூலம் வந்த வீரதுங்க சட்டத்திற்குப் புறம்பான முறையில் இரு நாடுகளையும் பிரிக்கும் மிகொங் நதியைத் தாண்டி தாய்லாந்துக்குள் ஊடுருவியிருக்கவேண்டும் என்பதை நிராகரிக்க முடியாது. இல்லையென்றால் இன்னமும்கூட அவர் தனது ராஜதந்திர கடவுச்சீட்டைப் பயன்படுத்திக் கொண்டிருக்கக்கூடும்.

தாய்லாந்து, லவோஸ் மற்றும் வியட்நாம் நாடுகளின் எல்லைகளை உள்ளடக்கிய கோல்டன் ட்ரைஆங்கில் (பொன் முத்தரப்பு) எனப்படும் மலைப் பகுதிக்குச் சுற்றுலா செல்லுபவர்கள் படகுகளில் மிகொங் ஆற்றைக் கடந்து அந்தப் பக்கமும் இந்தப் பக்கமும் செல்வது வழக்கமானதுதான். இந்தப் பயணத்துக்கு தாய்லாந்துப் பணத்தில் 150 பாத் (கிட்டத்தட்ட 600 ரூபா) செலவாகும். தாய்லாந்திலிருந்து ஆற்றைக் கடந்து லவோஸ் பகுதிக்குச் சென்றால் நாகபாம்பு இறைச்சியுடன் வைன் குடிவகை அங்கு பிரபலமானது. சீனாவில் இருந்து கடத்திவரப்பட்ட குடிவகைகள் மற்றும் கைவினைப் பொருள்களும் அங்கு தாராளமாகக் கிடைக்கும்.

### சிறிய உணவகத்தை நடத்திய வீரதுங்க

உக்ரைன் நாட்டுத் தலைநகர் கீவ்வில் கிளப் லங்கா என்ற சிறிய உணவகம் ஒன்றை நடத்தி வந்தவர் வீரதுங்க. மகிந்த ராஜபக்ச அவரை ரஷ்யாவுக்கான தூதராக நியமித்தார். புறுக் பொண்ட் நிறுவனத்தின் முன்னாள் தலைவரான நெவில் ரணசூரியவிடம் இருந்து வீரதுங்க பதவியைப் பொறுப்பேற்றார். புதிய சாதனையாக 9 வருடங்கள் தூதராகப் பணியாற்றிய வீரதுங்க, ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன தேர்தலில் வெற்றி பெற்றதன் பின்னர் பதவியிலிருந்து விலகும்படி நிர்ப்பந்திக்கப்பட்டார்.

இலங்கை வான்படைக்கென உக்ரைனில் மிக்-27 வானூர்திகளை வாங்கியதில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள் குறித்து விசாரிக்கும் நிதிக்குற்ற விசாரணைப் பிரிவு, உக்ரைன் தலைநகர் கீவ்விற்குச் சென்று விசாரணைகளை நடத்திக்கொண்டும் வீரதுங்கவைத் தேடிக்கொண்டும் இருக்கையில்தான் வீரதுங்க உடோன் தானியில் நடமாடிக் கொண்டிருந்தார்.

ஆரம்பத்தில், இலங்கையில் இருந்து ஒரு விசாரணைக் குழு தமது நாட்டுக்கு வருகைதருவது குறித்து உக்ரைன் அதிகாரிகள் அதிருப்தி கொண்டிருந்தார்கள். தீவிரமான இராஜதந்திர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கான சில உதவிகள் அமெரிக்காவின் மூலம் கிட்டின. அதன் பயனாக, பெருங் குற்றங்கள் மற்றும் குற்றவாளிகள் பரிமாற்றம் தொடர்பில் இரண்டு மாதங்களுக்கு முன்னர் இரு தரப்புகளுக்கும் இடையில் ஒரு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இந்தப் பின்னணியில் தான் நிதிக் குற்ற விசாரணைப் பிரிவு கீவ்விற்குச் சென்றிருந்தது. தன்னுடைய இராஜதந்திர மதிப்பை ஒரு கவசமாக வைத்துக்கொண்டு உக்ரைன் நாட்டு கிளர்ச்சியாளர்களுக்கு சட்டவிரோதமாக ஆயுதங்களை விற்பனை செய்தார் அல்லது அவற்றை பரிமாறுவதற்கு உதவினார் வீரதுங்க என்ற குற்றச்சாட்டுத் தொடர்பாகவும்கூட கீவ்வில் விசாரணை இடம்பெறுகிறது.

– சண்டேரைம்ஸ் அரசியல் கட்டுரையின் தமிழாக்கம்.

## வடக்கு மாணவர் விடயத்தில் ஆளுநர் முடிவு எடுப்பாரா?

அதிகரித்த கடும் வெப்பம் நீடிக்கின்றது.உயிரினங்கள் வாழமுடியாத அளவுக்கு காலநிலை மாறிவிட்டது.

துவிச்சக்கரவண்டிகளிலோ, வாகனங்களிலோ, மோட்டார் சைக்கிள்களிலோ செல்லமுடியாத அளவுக்கு வெப்பம் வாட்டி வதைக்கிறது.

வடக்கில் உள்ள பாடசாலைகளை நண்பகல் 12 மணியுடன் மூடி மாணவர்களுக்கு பாதுகாப்பு அளியுங்கள் என முதலில் தமிழ் ஆசிரியர் சங்கம் அறைகூவல் விடுத்துள்ளது.

தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சோ.சேனாதிராசா பகிரங்கமாக ஊடக அறிவித்தல் விடுத்து பாடசாலை மாணவர்களை காப்பாற்றுமாறு கோரியுள்ளார்.

மாணவர்களின் நலன்நாடிய கோரிக்கை" எனும் தலைப்பில் பல்வேறுபட்ட நியாயப்படுத்தல்கள் மாணவசெல்வங்களின் உயிரிழப்பு நிகழ்ந்த பின்னரான நியாயம் விளக்கும் உரிமையில்லை என்ற விடயங்களை பரந்தளவில் முன்னிறுத்தி ஆசிரியர் தலையங்கம் (04.05.2016) உதயனில் தீட்டப்பட்டுள்ளது.

ஏனைய மாகாணங்கள் மாணவர்களின் நன்மை கருதி பாடசாலைகளை ஏற்கனவே 12 மணியுடன் மூடி பிள்ளைகளின் உயிர் நலனை காப்பாற்றி வருகின்றன.

எனவே மாணவர்கள், ஆசிரியர்கள், அலுவலர்கள், உத்தியோகத்தர்கள் விடயத்தில் (உயிர்ப்பிரச்சினை) அக்கறை கொள்வோர் உடன் முடிவை எய்துங்கள். இல்லாதுவிடில் வடக்கில் மாணவர்கள் மற்றும் பலர் இறக்கும் நிலை தவிர்க்க முடியாதது ஆகிவிடும்.

என்வே வடக்கின் கௌரவ ஆளுநர் இந்த விடயத்தில் கூடுதல் கரிசனை கொண்டு, மாணவர்களைக் காப்பாற்றுமாறு வடக்கு மாணவர்களின் சார்பில் பணிவுடன் வேண்டி நிற்கிறோம்.

– ஆர்.ரிஷாந்

## சட்டவிரோதச் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு உதவலாமே

கிளிநொச்சியில் பாடசாலை ஒன்றைத்திறந்து வைத்துப் பேசிய வடக்கு ஆளுநர் வடக்கிலிருந்து இராணுவத்தை விலக்கமுடியாது. பதிலாக அவர்களது சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம் எனக்கூறியிருந்ததாக பத்திரிகைகளிலிருந்து அறியக்கூடியதாக இருந்தது.

தமிழர் பகுதிகளில் இராணுவம் நிலைகொண்டிருப்பதை அந்தப் பகுதி மக்கள் விரும்புகிறார்களா என்பதை முதலில் அறிந்து கொள்ள வேண்டும்.

அத்துடன் அவர்களை அழையா விருந்தாளிகளாகவே தமிழ் மக்கள் பார்க்கின்றனர் என்பதை முதலில் நல்லாட்சிக்காரர்களுக்கு கூறிவைக்க விரும்புகின்றோம்.

முடிந்தால் அவர்கள் வடக்கில் நடந்தேறிவரும் கஞ்சாக் கடத்தல், மரக்கடத்தல், மண்கடத்தல், இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் மற்றும் வாள்வெட்டுக்கள். களவுகள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தி தமது சேவைகளை ஆற்றட்டும்... அதைவிடுத்து தமிழர் நிலங்களை சூறையாடி அதில் விவசாயம் செய்வது பொது நிர்வாகங்களில் தலையீடுசெய்வது போன்ற வேலைகளில் ஈடுபடுவது அவ்வளவு நல்லது அல்ல. அவர்களது அவ்வாறான சேவைகள் தமிழ் மக்களுக்குத் தேவையுமில்லை.

அவ்வாறெனில் இங்கு கல்வி அமைச்சு எதற்கு? கச்சேரி எதற்கு? திணைக்களங்கள் எதற்கு?

முடியுமானால் மக்கள் குடியிருப்புக்களில் இருந்து படைகளை வெளியேற்றி முகாம்களில் அவலவாழ்வு வாழும் அந்தப் பகுதி மக்களை அங்கு குடியேற்ற ஆளுநர் ஆவனசெய்வது நல்லது.

'ஒக்டேஸ்'
யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கோழிப் பொரியல் சுவையில் நகப் பூச்சு

## உருவாக்கியது கே.எப்.சி.

ஹொங்கொங், மே 7
பிரபல உணவு நிறுவனமான கே.எப்.சி நகப்பூச்சு ஒன்றை உருவாக்கியுள்ளது. இது கே.எப்.சி.கோழிப் பொரியலின் சுவையிலும், மணத்திலும் உருவாக் கப்பட்டிருப்பது தான் புதுமை.
ஹொங்கொங்கில் இடம்பெற்ற வர்த்தகக் கண்காட்சி ஒன்றில் இந்த நகப் பூச்சு அறிமுகப்படுத்தப்பட்டது. இதனைப் பயன்படுத்திய பெண்ணொருவர் தெரிவிக்கையில், இதன் சுவையும், மணமும் கோழிப் பொரியலைப் போன்றே உள்ளது. இதனை எவ்வாறு உற்பத்தி செய்தார்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை எனத் தெரிவித்தார். இரு விதமான சுவைகளில் இது அறிமுகமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-ரி4)

# பசுபிக் கடலில் தொலைந்தவர் இரு மாதங்களின் பின்னர் மீட்பு



பொகோட்டா, மே 7
கொலம்பியாவைச் சேர்ந்த கடலோடி ஒருவர் 2 மாதங்களின் பின்னர் பசுபிக் கடலில் இருந்து மீட்கப்பட்டுள்ளார். 29 வயதான இளைஞரும் அவரது நண்பர்களும் கடற் பயணம் மேற்கொண்டபோது பாதை தவறியதால் பரந்த கடற் பிரதேசத்தில் தொலைந்தனர். இவரது 3 நண்பர்களும் உயிரிழந்துள்ளனர். இவர் நேற்று முன்தினம் ஹோனா - லூலு பகுதியில் மாலுமி ஒருவரின் உதவியுடன் பத்திரமாகக் கரையை வந்தடைந்தார்.
கொலம்பியாவின் பசுபிக் கடற்பிரதேசத்தில் இருந்து நானும் எனது நண்பர்களும் பயணித்தோம் எனப் பெயர் குறிப்பிடாத தப்பிவந்த அந்தப் பயணி தெரிவித்தார். 23 அடி நீளமான படகில் எமது பயணத்தை மேற்கொண்டோம். படகு பழுதடைந்ததன் காரணமாகக் கடலில் பாதை தவறித் தொலைந்து விட்டோம். கடலில் மீன்களைப் பிடித்து உணவாக உண்டோம். ஆனாலும் நண்பர்கள் மூவரும் உயிரிழந்து விட்டனர் என அவர் கூறியதாக மாலுமி தெரிவித்தார். (த-ரி4)

# ஆணாக மாறிய பெண்ணுக்குக் குழந்தை



ரெய்க்ஜவிக், மே 7
ஐஸ்லாந்தில் ஆணாக மாறிய பெண் ஒருவர் குழந்தை பெற்றுள்ளார்.
19 வயதான ஹென்றி ஸ்ரெயின், பால் மாற்றத்துக்காக உடலினுள் ஓமோனைச் செலுத்துவதற்கு முன்னர் அவருக்குக் குழந்தை உருவாகியுள்ளது. மேலும் ஓமோன் மாற்றம் நிகழ்ந்திருந்தால் குழந்தை உருவாவதற்கான சாத்தியம் குறைவு. எனவே ஓமோன் மாற்றங்களை ஏற்படுத்தாமல் ஆரோக்கியமான குழந்தையைப் பெற்றெடுக்கத் தயாரானதாக அவர் தெரிவித் தார். அத்துடன், எனது குழந்தையை நினைத்து மகிழ்கிறேன் என அவர் தெரிவித்தார். கடந்த மாதம் 13 ஆம் திகதி குழந்தையைப் பெற்றெடுத்ததுடன், குழந்தைக்குப் பாலூட்டவும் செய்தார். இவரது பாலின மாறுதலைத் தள்ளிப் போடுவது குறித்து மருத்துவர்கள் கலந்தாலோசிக்கத் தீர்மானித்துள்ளனர். ஆணாக மாறிய பெண் ஐஸ்லாந்தில் குழந்தை பெற்றமை இதுவே முதல்முறையாகும். (த-ரி4)

# போர்நிறுத்த பிரதேசத்தில்

## சிரியாவில் 28 பேர் சாவு

டமஸ்கஸ், மே 7
சிரியாவின் துருக்கிய எல்லையில் அகதி முகாம் மீது நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 28 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என மனித உரிமைகள் அவதானக் குழுவினர் தெரிவித்தனர். அலெப்போ நகரில் போர் நிறுத்தம் இரு நாள்களுக்குக் கடைப்பிடிக்கப்பட்டுள்ளவேளையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
இந்தத் தாக்குதல் சர்மாடா நகருக்கு அண்மையில் அமைந்துள்ள அகதிகள் முகாம் மீது நடத்தப்பட்டுள்ளது.
சம்பவப் புகைப்படக் காட்சிகளில், தற்காலிகக் குடியிருப்புக்கள் எரிவதையும், இரத்த வெள்ளத்தில் உடல்கள் இருப்பதையும் காணக்கூடியதாகவுள்ளது.
அலெப்போ மற்றும் பல்மைரா பிரதேச அகதிகள் குடியிருந்த முகாமில் இரு வான் வழித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என சமூக ஆர்வலர் ஒருவர் தெரிவித்தார். இதன்போது 50 தற்காலிக வீடுகளும், ஒரு பாடசாலையும் தீயில் கருகிச் சாம்பராகின எனவும் அவர் கூறினார்.
அப்பாவிப் பொதுமக்கள் தாக்கப்பட்டனர் என அமெரிக்க வெள்ளை மாளிகை அறிக்கை வெளியிட்டுள்ளது. அவர்கள் மீது தாக்குதல் நடத்தவதற்கான எந்தக் காரணமும் இல்லை எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
சிரிய அதிபர் பசார் அல் ஆசாத் போராளிக் குழுக்களைத் தோற்கடிக்கவேண்டும் என்ற நோக்குடன் செயற்பட்டு வருகிறார். இந்த முயற்சி அமெரிக்க - ரஷ்ய ஒப்பந்தத்தை மீறும் செயலாக அமைந்துள்ளது. இந்த நிலையில் ஒப்பந்தத்தை மீறும் வகையில் இஸ்லாமியப் போராளிகள் செயற்படுவதாகச் சிரிய இராணுவத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.


> அகதிகள் குடியிருந்த முகாமில் இரு வான் வழித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என சமூக ஆர்வலர் ஒருவர் தெரிவித்தார். இதன்போது 50 தற்காலிக வீடுகளும், ஒரு பாடசாலையும் தீயில் கருகிச் சாம்பராகின எனவும் அவர் கூறினார்.

அலெப்போ பகுதியில் போர்நிறுத்தம் நடைமுறைப்படுத்தப்பட்ட போதிலும் ஏனைய பகுதிகளில் தாக்குதல்களும் வன்முறைச் சம்பவங்களும் இடம்பெற்றன என அவதானக் குழுவினர்

## தெற்கு அலெப்போவில் 70 போராளிகள் வரை சாவு



டமஸ்கஸ், மே 7
சிரியாவின் அலெப்போ நகரின் தெற்குப் பகுதியில் நேற்றையதினம் அல் குவைதாவினருக்கும், சிரிய இராணுவத்துக்கும் இடையில் இடம்பெற்ற போரில் 70 அல் குவைதாப் போராளிகள் உயிரிழந்துள்ளனர் என அவதானிப்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர். கடந்த 24 மணிநேரமாக இடம்பெற்ற தாக்குதலில், அல் நூஸ்ரா, ஏனைய இஸ்லாமிய போராட்டக் குழுக்கள் கான்டுமான் பகுதியைக் கைப்பற்றியுள்ளன எனவும் மனித உரிமைகள் அமைப்பால் மேலும் தெரிவிக்கப்பட்டது.
அல் - நூஸ்ரா போராளிகள் குறைந்தது 43 பேரும், ஏனைய போராட்டக் குழுவினர் 30 பேரும் உயிரிழந்துள்ளனர் எனப் பிரிட்டனின் சிரியாவுக்கான மனித உரிமைக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (த-ரி4)



மொரிசியஸ் தீவில் சமரல் எனப்படும் பல வர்ணப் பாறைத் தொடர்கள் பார்ப்பவர்களின் மனதைக் கவர்ந்து வருகின்றன. எரிமலைக் குழம்பாலான பாறைத் தொடர்கள் வானவில்லிலுள்ள 7 வர்ணங்களையும் பிரதிபலிக்கின்றன. இந்தப் பாறைத் தொடர்களைப் பார்க்கும்போது வேற்றுக் கிரகத்துக்குச் சென்ற அனுபவத்தை ஏற்படுத்தும் என சுற்றுலாப் பயணிகள் தெரிவிக்கின்றனர். (த-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம் அல்லாத
# ல் தாக்குதல்



தெரிவித்தனர்.

இராணுவத் தரப்பினர் நிலப்பரப்புகளைத் தம் வசப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இந்தத் தாக்குதல்களில் 30 இஸ்லாமியப் போராளிகள் உயிரிழந்ததுடன், அவர்களது ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. ஷார் பகுதியைப் போராளிகளிடம் இருந்து இராணுவத்தினர் மீட்டுள்ளனர். சில நாள்களாக இடம்பெற்ற கடும் தாக்குதல்களில் இராணுவத்தினர் வெற்றியீட்டியுள்ளனர்.

தற்போது பேணப்படும் போர்நிறுத்தத்தால் கடைகள் திறக்கப்பட்டுள்ளன. அதனால் மக்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாகவுள்ளது என அங்கு வசிப்பவர்கள் தெரிவித்தனர்.

(த–ரி4)

# முகம் மறைக்கும் ஆடைக்கு டென்மார்க் பாடசாலை தடை



கோபன்கேஹறன், மே 7

டென்மார்க் பாடசாலை ஒன்று இஸ்லாமியப் பெண்கள் முகத்தை மறைத்துக் கொண்டு கல்வி கற்பதற்குத் தடை விதித்துள்ளது.

அத்துடன், மறைவை விலக்கினால் மாத்திரமே வகுப்புகளில் அனுமதிக்கப்படுவர் எனவும் பாடசாலையின் பேஸ்புக் பக்கத்தில் அறிவித்துள்ளது.

கற்பித்தலுக்கு அத்தியாவசியமானது மாணவர்களுடனான தொடர்பாடல். முகத்தை மறைப்பதனால் ஆசிரியர்களால் அவர்களைப் புரிந்துகொள்ள முடியவில்லை எனப் பாடசாலையின் தலைமை ஆசிரியர் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்தில் இருந்து குறித்த பாடசாலை மாணவர்கள் முகத்தை மறைப்பதற்குத் தடை எனப் பாடசாலைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட போதிலும் தற்போது இந்த விடயம் பேஸ்புக்கில் பகிரப்பட்டதால் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. பாடசாலையின் இந்த நடவடிக்கைக்கு அந்த நாட்டின் ஆளும் கட்சி தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் முகத்தை மறைக்கும் இஸ்லாமிய ஆடையை நாட்டிலிருந்து விலக்கவேண்டும் எனவும் விமர்சனங்கள் வலுத்துள்ளன. பிரான்ஸ், பெல்ஜியம் நாடுகளில் நாடு தழுவிய ரீதியில் அவ்வாறான ஆடைகளுக்கு முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது. சுவிட்சர்லாந்து மற்றும் இத்தாலியில் சில பகுதிகளில் இவ்வாறு முகம் மறைக்கும் ஆடைகளுக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

(த–ரி4)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நட்சத்திரப் பொதுப் பலன்கள்

## அச்சுவினி

அச்சுவினி நட்சத்திரத்தில் பிறந்த நீங்கள் மற்றவர்களால் மதிக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்துடன் கூடியவராய் இருப்பதுடன் அழகாகவும் பேசுவீர்கள். சிலசமயங்களில் உங்களுடைய சாதுர்ய மானபேச்சால் மற்றவர்களிடம் உங்களுக் கான மதிப்பைப் பெற்றிடுவீர்கள். பொருள் சேமிப்பை விரும்புவீர்கள். எதிர் காலத்துக்கான திட்டங்களில் தெளிவாக வரையறுத்துக் கொண்டிருப்பீர்கள். உங்களின் முயற்சி வெற்றியடைய கடுமையான உழைப்பை வெளிப்படுத்தத் தயங்கமாட்டீர்கள். உங்களிடம் ஒப்ப டைக்கப்படும் செயல்களை முழுமூச்சு டன் செயற்பட்டு செய்து முடிப்பீர்கள்.
செல்வந்தராகவும், புத்தி சாதுர்யம் கொண்டவர்களாகவும் இருப்பர். விவா தம் செய்வதிலும், ஆடம்பரத்திலும் நாட் டம் இருக்கும். மற்றவர்களை நன்கு புரிந்து கொண்டு அன்புடன் பழகுவர். ஆசிரியரைப்போல நல்ல விடயங்களைப் பிறருக்குப் போதிப்பர். தெய்வீக வழிபாடு, புராண, சோதிட சாஸ்திரங்களில் ஈடுபாட் டுடன் விளங்குவர். தைரியம் உடையவர், செய்யும் தொழிலைத் தவறு இல்லாமல் செய்பவர், பெண்கள் விரும்பத்தக்கவர். தருமம் செய்யும் பண்புடையவர், பொய் பேசமாட்டார். ஆடை அணிகலனில் விருப்பம் உடையவர். சிறு கோபத்தை உடையவர். மிகுந்த புகழை உடையவர். கெட்டிக்காரர். சிவந்த கண்களையும், அகன்ற மார்பையும் உடையவர். தூய் மையானவர். உயர்ந்த நெற்றி உடைய வர். சாத்வீக குணத்தை உடையவர்.
1.அச்சுவினி முதல்பாதத்தில் பிறந்தவர்கள், மனச்சஞ்சலம் உடையவர், பாவி, அழ கற்றவர், அந்நியரிடம் அன்பு காட்டு பவராக இருப்பார்.
2.அச்சுவினி இரண்டாம் பாதத்தில் பிறந்த வர்கள் பிறரின் மனோபாவங்களை அறியும் தன்மை படைத்தவர், அழகுள்ள வர், நன்மை செய்பவர், சாத்திரம் உணர் பவர், ஞானி போன்ற பண்புகளை உடைய வராக இருப்பார்.
3.அச்சுவினி மூன்றாம் பாதத்தில் பிறந்த வர்கள் கணிதக்கலையில் விருப்பம் உள்ளவர். நல்ல புத்திமதிநுட்பம் உடை யவர், மூல வியாதி உடையவர், நல்ல செயல்களையே நினைப்பவராக இருப் பார்.
4.அச்சுவினி நான்காம் பாதத்தில் பிறந்த வர்களது உடம்பு சிறிது கூனி இருக்கும். மிகுந்த அறிவுள்ளவர், சோதிடம் அறிந்த வர், இந்திரன் போன்றவர், சத்திரியர் போன்ற பண்புகளை உடையவர்.

## பரணி

பரணி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் அனைத்தையும் முழுமையாகப் முடிக் கப்பட வேண்டும் என்ற எண்ணத்தை வலு வாக கொண்டவராய் இருப்பீர்கள். உங் களிடம் ஒப்படைக்கப்படும் எந்தக் காரியத் தையும் முழுமையாக செய்து விடுவீர்கள். உடல் ஆரோக்கியத்தை மிகவும், ஆர்வமா கப் பேணிக்காப்பீர்கள். எந்தச் சூழ்நிலை யையும் சமாளிக்கக் கூடிய மனநிலையை வளர்த்துக் கொள்ள விரும்புவீர்கள்.
மற்றவர்களிடம் உண்மையான உழைப் பையும் நேர்மையான செயல்களையும் எதிர்ப்பார்ப்பீர்கள். உங்களது நேர்மை யான செயற்பாடுகளால் மற்றவர்களிடம் உங்களுக்கான மதிப்பை அதிகரித்துக் கொள்வீர்கள். நன்றி உணர்வு கொண்ட வர்களாகவும், எதிரிகளைச் சுலபத்தில் வெற்றி கொள்ளும் திறமை கொண்டவர் களாகவும் இருப்பர். தானதர்மங்களைச் செய்யும் இயல்பால் மற்றவர்கள் இவ ரைப் பாராட்டுவர். தன்னுடைய தேவை களைத் தானே சாதித்துக் கொள்ளும் சாமர்த்தியம் பெற்றிருப்பர். பெற்றோ ருக்கு இனியவர். சிறுநித்திரை உடைய வர். சிறுகோபி. தருமசிந்தனை உடைய வர். செல்வம் உடையவர். சாமர்த்தியம் உடையவர், பெண்களின் சொற்களில் பிரியம் உடையவர், சிறிய மோவாய்க் கட்டையை உடையவர்.

1. பரணி முதல்பாதத்தில் பிறந்தவர்கள் சிவப்புநிறம் உள்ளவர். வீரன், பலசாலி, நீதிமான், பகைவரை வெல்லுபவர், சிவந்த உரோமம் உடையவராகவும் இருப்பார்.
2. பரணி இரண்டாம் பாகத்தில் பிறந்தவர் ஞானி, நிபுணர், சோம்பல் உடையவர், தருவார், சாஸ்திரம் சொல்பவனாகவும் இருப்பார்.
3. பரணி மூன்றாம் பாதத்தில் பிறந்தவர் கோபம் உடையவர், உருளும் கண்களை உடையவர், நல்ல உயரமானவர்.
4. பரணி நாலாம் பாதத்தில் பிறந்தவர்கள் உடல் பருமனானவர், கோபம் உடைய வர், அரச, அரசியல் பணி செய்பவர், துர்க்குணம் உள்ளவராகவும் இருப்பர்.

(தொடரும்)

# இலங்கை அரசு எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிக்கான காரணம்

யாழ் ஆனந்தன்

இலங்கை அரசு மீளமுடியாத பொருளாதாரச் சுமைக்கு உட்பட்டுள்ளது. இதற்கு தற்போதைய அரசு கூறும் காரணம் மகிந்த அரசின் கணக்கு வழக்கு இல்லாத வெளிநாட்டுக் கடன்கள் என்பதாகும். இக்கடன்களை பொருளாதாரக் குண்டுகள் என்றும் பொருளாதாரக் கண்ணிவெடி என்றும் மகிந்த பெற்ற கடன்களுக்கு எதிரான போர் என்றும் விளம்பரப் படுத்தி ம க்களிடையே வரியை அதிகம் அறவிட உள்ளது. அதேவேளையில் சர்வதேச நாணய நிதியம் மற்றும் ரஷ்யா, சீனா, அமெரிக்கா, இந்தியா, ஜப் பான், பிரித்தானியா போன்ற நாடுகளில் இருந்து பெருமளவு பண உதவிகளைப் பெறுகின் றது.
உண்மையில் மகிந்த ராஜபக்ச இந்தப் பணத்தை வீட்டுக்கு எடுத்துச் செல்லவில்லை. தமிழருக்கு எதிரான போரில் பொஸ்பரஸ் குண்டுகள் உட்பட பல தடை செய்யப்பட்ட ஆயு தங்களையும் சீனா, பாகிஸ் தானில் இருந்து பெருமளவு வெடி மருந்துகளையும் கொள் வனவு செய்ய சர்வதேச சட்டங் களுக்கு மறைத்து கறுப்புச் சந்தைப் பணப் பரிவர்த்த னையை செய்தது. அதாவது சுமார் 150,000 தமிழ் மக்க ளது படுகொலைக்கான விலையும் தமிழ் பிரதேச அழிப்புக் கான விலையாகவுமே, தற்போதைய இலங்கை மீது கடன் நிலைமையை நோக்க வேண்டும். ஆயின் இந்தக் கடன் மீட்பு நடவடிக்கைகளுக்கு துணை போகும் சர்வதேச நிதி நிறுவனங் களும், சர்வதேச நாடுகளும் இனப்படு கொலைக்கு துணைபோகும் தன்மை யையே காட்டுகின்றன.
இந்த நிலையில் பாதிக்கப்பட்ட தமிழர் களிடம் வற் அறவீடு மற்றும் வரி களின் சுமை என்பவை எம்மினத்தைக் கொன்ற கடனை நாமே கொடுக்கும் நிலையாகவே உள்ளது. கொன்ற

**சுமார் 150,000 தமிழ் மக்க ளது படுகொலைக்கான விலையும் தமிழ் பிரதேச அழிப்புக்கான விலையாக வுமே, தற்போதைய இலங்கை மீது கடன் நிலை மையை நோக்க வேண்டும்.**



பாவம் தின்றால் இல்லை என்ற நிலையோ இது என பாதிக்கப்பட்ட வர்கள் ஏங்குகின்றனர். எனவே தமிழ் அரசியல்வாதிகள் தமிழ் மக்கள் மீது தமிழின அழிப்புப் போரின் சுமையை அரசு சுமத்துவதை தவிர்க்க முயற்சி செய்ய வேண்டும்.
போரின் சுவடுகளை நல்லிணக்க அரசு, உள்ளக விசாரணையே இன்றி அழித்து வரும் நிலையில் போருக்காக இலங்கை அரசு பெற்ற முறைசாரா மற் றும் முதலீட்டுக் கடன்கள், இலங்கை அரசால் தமிழ் மக்கள் மீது மேற்கொள் ளப்பட்ட அழிவுகளின் பரிமாணத்தைத் தாங்கி நிற்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதிக்கப்பட்டவர்களின் காவலனான செஞ்சிலுவைச் சங்கம்

## நாளை செஞ்சிலுவை தினம்

கு.பாலகிருஸ்ணன். தலைவர்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ்.கிளை


பிரான்ஸுக்கும் இத்தாலிக்கும் இடையில் உள்ள சொல்பரினா என்ற இடத்தில் நடந்த போரின்போது அந்த வழியாக போய்க் கொண்டிருந்த ஹென்றி டுனான்ற் அங்கு பாதிக்கப்பட்டு இரத்தம் வெளியேறியதால் உயிருக்காகப் போராடிக்கொண்டிருந்த போர்வீரர்களையும், பொதுமக்களையும் கண்டு, அவர்களின் உயிரைக் காப்பாற்று வதற்காக, தனது பயணத்தின் நோக்கத்தை கைவிட்டு தொண்டர்களையும், பொதுமக்களையும் இணைத்து அவர்களின் உயிரைக்காப் பாற்றுவதற்காக மருத்துவ உதவிகளையும், முதலுதவிகளையும் மேற்கொண்டு பல உயிர்களைக் காப்பாற்றினார். இத்தகைய சூழ்நிலையில் ஓர் அமைப்பை உருவாக்கி உயிர்ப்பாதுகாப்பை ஏற்படுத்த வேண்டும் என அவர் எண்ணினார். இந்தப் பெரிய தாக்கத்தினால் மனமுடைந்த ஹென்றி டுனாண்ட், 1962ல் சொல்பரினா நினைவுகள் என்ற புத்தகத்தை வெளியிட்டு, சர்வதேச ரீதியில் இத்தகைய ஓர் அமைப்பின் அவசியத்தை உணர்த்தி 1863 இல் நான்கு பெரியார்களை இணைத்து சர்வதேச செஞ்சிலுவைக் குழுவை உருவாக்கினார்.

தொண்டர்கள் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவில் இணைக்கப்பட வேண்டுமென்ற காரணத்தால் 1864 இல் பல்வேறு சங்கங்களையும், ராஜதந்திரத் தரப்புக்களையும் இணைத்து முதலாவது ஜெனீவா சாசனத்தை உருவாக்கினார். சர்வதேசத்தின் அங்கீகாரம் பெற்ற ஒரு அமைப்பாக இது உருவாகியது. செஞ்சிலுவைச் சங்க சின்னம் வெள்ளைப் பின்னணியில் சிவப்புச் சிலுவையாக உருவாக்கப் பட்டது. ஹென்றி டுனான்ட் பிறந்த நாட்டின் தேசியக்கொடியாகிய சிவப்பு பின்னணியைக் கொண்ட வெள்ளைச் சிலுவையை சின்னமாக அமைந்த சுவிஸ் நாட்டின் கொடியை மாற்றியமைத்து செஞ்சிலுவைச் சங்கக் கொடியை உருவாக்கினார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழு தனது செயற்பாடுகளை போர்ப் பிரதேசங்களிலும், இயற்கை அனர்த்தம் நடக்கும் பிரதேசங்களிலும், மேற்கொண்டு பெரும்பாலான நாடுகளில் செயற்பட்டு வருகின்றது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்க குழு ஆயுத மோதல்களினாலும், உள்நாட்டு கலவரங்களினாலும், பாதிக்கப்படும் மக்களுக்கு உதவவென சர்வதேச நாடுகளினால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட நடுநிலைமையான மனிதநேய அமைப்பாகும். இது போரினால் அல்லது இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்படும் மக்களுக்கு சர்வதேச உரிமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் மனிதநேய அமைப்பாகும். இவ்வமைப்பு போரினால் பாதிக்கப்படும் மக்களுக்கு சர்வதேச உரிமைச்சட்டத்தை நடைமுறைப் படுத்தும் ஓர் மனிதாபிமான அமைப்பாகும். மேலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதுடன் போர்க் காலங்களில் கடைப்பிடிக்க வேண்டிய சட்ட நியமங்களை வலியுறுத்தும் நிறுவனமுமாகும். இது மாறி வரும் போர் ஆயுதங்களின் பயன்பாட்டிற்கேற்ப தனது சட்டங்களையும், நியமங்களையும், சர்வதேச அங்கீகாரத்துடன் மாற்றி அமைத்துக் கொள்ளும். ஆயுதப் பயன்பாட்டில் ஏற்படும் மாற்றங்களினால் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்கியபோதிலும், தனது சேவையை செவ்வனே மேற்கொண்டு வருகின்றது.

இந்தக்குழு ஆரம்பத்தில் 15 நாடுகளில் தேசிய சங்கங்களை உருவாக்கியது. இன்று (2016) 192 நாடுகளில் தேசிய சங்கங்களை உருவாக்கி உள்ளதுடன் அந்தந்த நாடுகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சுகாதார சேவை, மருத்துவ சேவை முதலுதவிச் சேவை, அனர்த்த நிவாரணம், பல்வேறுபட்ட மனிதாபிமான சேவைகளை அந்தந்த நாட்டின் அரசுடன் இணைந்து அரசுக்குத் துணையாக மக்களுக்குச் சேவையாற்றி வருகின்றது. அத்துடன் மனிதாபிமானம், பாராபட்சமின்மை, சுயாதீனம், ஒருமைப்பாடு, நடுநிலை, தொண்டர் சேவை, சர்வதேசமயம் ஆகிய ஏழு கொள்கைகளை அந்தந்த நாடுகளில் விரிவுபடுத்தி வலைபின்னல் அமைப்பைக் கொண்ட மனிதாபிமான சேவைகளை மேற்கொண்டுவருகின்றது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க சம்மேளனம் (International Federation of Red Cross and Red Crescent Societies) 192 தேசிய சங்கங்கள் இணைந்து உருவாக்கப்பட்ட சம்மேளனமாகும். இது இன மத வேறுபாடின்றி பாதிக்கப்பட்ட மக்களுக்கும் அவர்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்கும், நிவா ரணப்பணி செய்து வருகின் றது. சர்வதேச செஞ்சிலு வைச் சங்கக்குழு போர்க் காலங்களில் போர் நடைபெறும் நாடுகளில் அல்லது அனர்த்தம் நடைபெறும் நாடுகளில் செயற்பட்டு வரும் ஒரு அமைப்பாகும். ஆனால் சர்வதேச செஞ்சிலுவைச் சம்மேளனம் போர் முடிந்த பின்பு போர் அனர்த்தத்தினாலோ, அல்லது வேறு அனர்த்தத்தினாலோ பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவர்களின் மீள் குடியேற்றம், புனர்வாழ்வு என்பவற்றை வழங்கி அவர்களுக்கு மீள்கட்டமைப்பை உருவாக்கும் ஒரு அமைப்பாகும். இது தனது அங்கத்துவ நாடுகளில் இருந்து வசதி குறைந்த அங்கத்துவ நாடுகளுக்கு பொருளாதர உதவிகளைப்பெற்று அந்த நாடுகளில் மீள்கட்டமைப்பை உருவாக்கும். இலங்கையில், உதாரணமாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் இந்திய உதவியுடன் வீடுகளை அமைத்துக் கொடுத்தது போல் தனது செயற்பாட்டை செய்து வருகின்ற ஒரு நிறுவனமாகும்.



தேசிய சங்கங்கள் உருவாகிய போது 1936 ஆம் ஆண்டு இலங்கையில், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் உருவாகியது. இச்சங்கம் ஏனைய தேசிய சங்கங்கள்போல் அனர்த்தங்களுக்கு முகம் கொடுப்பதுடன் அனர்த்தம் ஏற்படும்போது அதை எதிர்கொள்வதற்கு அனர்த்த முகாமைத்துவப் பயிற்சி, முதலுதவிப்பயிற்சி, அடிப்படைச் சுகாதார சேவை, இரத்ததானம், நடமாடும் மருத்துவ சிகிச்சை, நோய்களுக்கு விழிப்புணர்வு, (எயிட்ஸ், டெங்கு) பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீட்டுத்திட்டங்கள், வைத்தியசாலைப் புனரமைப்பு, மீளக்குடியமர்ந்த மக்களுக்கு நிவாரண உதவிகள், என்பனவற்றையும் செய்து வருகின்றது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ்.கிளை (Sri Lanka Red Cross Society, Jaffna Branch) இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளையாக இயங்கி வருகின்றது. போர்க் காலங்களில் பல்வேறுபட்ட பணிகளைச் செய்த இச்சங்கம் ஊரடங்கு நேரங்களில் 24 மணித்தியாலங்கள் அம்புலன்ஸ் சேவையை செய்து மக்களுடன் இணைந்து சிறப்பாக சேவையை செய்து வந்தது.

பாதிக்கப்பட்டிருந்த மக்களுக்கு நிவாரணங்கள், மருத்துவ வசதிகள் வழங்கப்பட்டன. வைத்தியசாலைகள் புனரமைத்து கொடுத்தல் என்பவற்றையும் செய்து வந்தது. போரின் பின்னர் மீள் குடியேறிய மக்களுக்கு வீடுகள் அமைத்து கொடுக்கப்பட்டு வருகின்றது.

உதாரணம் :- (இந்திய வீட்டுத்திட்டம்)

இயற்கை மற்றும் மனித செயற்கை அழிவுகளால் பாதிப்புறுவோரின் நலன்களைப் பேண மனிதாபிமான அடிப்படையில் சாதி, சமய, வர்க்க பால் இன மொழி பாகுபாடின்றி, 07 கொள்கைகளுக்கு அமைவாக செயற்படுவதே செஞ்சிலுவைச் சங்கங்களின் குறிக்கோளாகும். செஞ்சிலுவைச் சங்கங்;களின் பலம் அவற்றின் மிகப் பரந்த தொண்டர் சக்தியாகும்.

> **இயற்கை மற்றும் மனித செயற்கை அழிவுகளால் பாதிப்புறுவோரின் நலன்களைப்பேண மனிதாபிமான அடிப்படையில் சாதி, சமய, வர்க்க பால் இன மொழிபாகுபாடின்றி, 07 கொள்கைகளுக்கு அமைவாக செயற்படுவதே செஞ்சிலுவைச் சங்கங்களின் குறிக்கோளாகும். செஞ்சிலுவைச் சங்கங்களின் பலம் அவற்றின் மிகப் பரந்த தொண்டர் சக்தியாகும்.**

இதுவரை இச்சங்கம் ICRC வெளிநாட்டு தேசிய சங்கங்கள், ICRC போன்றவற்றின் உதவியுடன் செயற்பட்டன. (ICRC கொழும்பில் மட்டும் செயற்பட்டு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சேவைகளை எமது நாட்டுக்கு செய்து வருகின்றது) ஆனால் ஏனைய தொண்டு நிறுவனங்கள் நாட்டை விட்டு வெளியேறிவிட்டன. எனவே அந்நிறுவனங்களது உதவிகள் தற்போது கிடைப்பதில்லை. எனவே 2013 - 2015 காலகட்டத்துக்கான மீள் கட்டமைப்பு (BEYOND RE - ENGINEERING) என்ற கொள்கையை வகுத்து ஒவ்வொரு மாவட்ட கிளைக்கும் தானாகவே கிடைக்கக்கூடிய பொருளாதார பலத்தையும், ஏனைய தொழில்நுட்ப வளத்தையும், மனித வளத்தையும் கொண்டதாக அமைப்பதற்கு சொந்தமான ஓர் வருமான வழி உருவாக்கப்படல் வேண்டும் என்ற புதிய திட்டத்தை உருவாக்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புச் செல்வங்களுக்கு தாத்தாவின் அறிவுரைகள்



எனதருமைக் குட்டிச் செல்வங் களே! கடந்த முறை கல்வி தொடர்பாக இந்தத் தாத்தா வழங்கிய அறிவுரைகளை ஏற்று நடந்திருப்பீர் களென நம்புகின்றேன். இன்று ஒழுக்கம் பற்றிப் பார்ப்போம்

**ஒழுக்கம்**

மனிதர்களுக்கு ஒழுக்கம் மிகவும் முக்கியமானது. இது இளமைக் காலத்தில் இருந்தே கடைப் பிடிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். சிறுவர்களாகிய நீங்கள் நல்லொழுக்கத்தை எப்போதுமே கடைப்பிடிக்கப் பழகிக் கொள்ள வேண்டும். பெற்றோர், ஆசிரியர்கள், மூத்தவர்கள் அனைவரையும் மதித்து நடக்க வேண்டும். எப்போதும் உண்மையைப் பேசவேண்டும். பணிவுடன் நடக்க வேண்டும். தீய காரியங்கள் எதிலும் ஈடுபடக் கூடாது. அவ்விதம் வாழ்ந்து பழகினால் நீங்கள் பெரியவர்களாகிய பின்னரும் ஒழுக்கமுள்ளவர்களாக விளங்குவீர்கள்

*அன்புடன் சிவனடித் தாத்தா.*

# அம்மா சுட்ட தோசை



அம்மா சுட்ட தோசை
அரிசி மாவுத் தோசை
நெய்யை ஊற்றிச் செய்த
முறுகலான தோசை
வறுத்த கடலைச் சட்னி
நிறையத் தொட்டுத் தின்னுவேன்
வயிற்றுப் பசி தீர்ந்ததும்
தட்டைக் கழுவி வைத்திடுவேன்


# வரலாற்றில் இன்றைய தினம்



1274 - பிரான்சில் லியோன் இரண்டாவது சபை பாப்பரசர் தேர்வை ஒழுங்கமைப்பதற்காகத் தொடங்கப்பட்டது.
1832 - லண்டன் ஒப்பந்தத்தின் மூலமாக கிரேக்கத்தின் சுதந்திரம் அங்கீகரிக்கப்பட்டது.
1840 - மிஸிஸிப்பிப் பிராந்தியத்தில் பெரிய சூறாவளி தாக்கியதில் 317 பேர் சாவு.
1846 - அமெரிக்காவின் மிகப் பழமையான 'கேம்பிரிட்ஜ் குரோனிகல்' வாரப் புதினப் பத்திரிகை முதன் முதலாக மசூசெற் கேம்பிரிட்ஜ்ஜில் வெளியிடப்பட்டது.
1847 - அமெரிக்க மருத்துவர் சங்கம் தொடங்கப்பட்டது.
1915 - முதலாவது உலக மகாயுத்தம் ஜேர்மனியரின் நீர்மூழ்கிக் கப்பல் u-20ஆனது RMS லுசிரானியா கப்பலை மூழ்கடித்ததில் 128 அமெரிக்கர்கள் உட்பட 1198 பேர் சாவு. இதன் பிரதிபலிப்பாக முன்னைய ஜேர்மனிய அமெரிக்க ஆதரவாளர்கள் பலர் ஜேர்மனிய பேரரசுக்கு எதிரானவர்கள் ஆயினர்.
1920 - மொஸ்கோ ஒப்பந்தம் மூலம் ஜோர்ஜியா ஜனநாயக மக்கள் குடியரசுக்கு சுதந்திரத்தை வழங்கியது சோவியத் ரஷ்யா.
1946 - பின்னாளில் சோனி என மீள் பெயரிடப்பட்ட டோக்கியோ தொலைத்தொடர்பு என்ஜினியரிங் தொடங்கப்பட்டது.
1974 - மேற்கு ஜேர்மனி அதிபர் வில்லி பிராண்ட் பதவி விலகினார்.
1992 - மக்டொனால்ட்ஸ் உணவக ஊழியர் 3 பேர் கொடூரமான முறையில் சிட்னியில் படுகொலை செய்யப்பட்டனர்.
1999 - நேட்டோ படைகளால் விமானக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதில் யுகோஸ்லேவிய சமஷ்டிக் குடியரசில் சீன தூதராலயத்திலிருந்த 3சீன குடிமக்கள் சாவடைந்ததுடன் 20 பேர் காயம்.
2000 - ரஷ்ய ஜனாதிபதியானார் விளாடிமிர் புடின்.
2002 - வட சீன விமான சேவை விமானம் MD 82 மஞ்சள் கடலுள் வீழ்ந்ததில் 112 பேர் சாவு.
2004 - அமெரிக்க வர்த்தக நிக்பேர்க் தலை துண்டிக்கப்பட்டு இஸ்லாமியப் படைகளால் கொலை செய்யப்பட்ட வீடியோ இணையத் தளத்தில் வெளியிடப்பட்டது.
2013 - மெக்ஸிகோ நகருக்கு வெளியே எண்ணைத் தாங்கி ட்ரக் விபத்துக்குள்ளாகி வெடித்ததில் 27பேர் சாவு. 30 பேர் காயம்.
2003 - எதிரிகளை விரட்டியடிக்குமாறு ஈராக் நாட்டு மக்களுக்கு ஒலி நாடா மூலம் சதாம் ஹூசைன் வேண்டுகோள்.



# வர்ணம் தீட்டுவோம் வாங்க....



# அலெக்ஸாண்டரின் அன்பு

**தெல்லியூர்த் தேவி**

இந்த உலகையே வெல்ல வேண்டும் என்ற இலட்சியத்துடன் ஏனைய நாடுகள் மீது படை எடுத்துச் சென்றவர் அலெக் ஸாண்டர். அவர் பாரசீகத்தை வென்ற பின்னர் ஹிர்கேனியா நாட்டின் மீது படையெடுத்துச் சென்றார். காடு மலைகளையும் இடையிடையே நதிகளையும் கடந்து செல்ல வேண்டிய கடு மையான பயணம் அது.

வழியில் குறுக்கிட்ட நதியிலிருந்து வீரர்கள் தங்கள் தோள்ப் பைகளில் நீரை நிரப்பிக் கொண்டனர். அவர்கள் சென்ற காலம் கடுமையான கோடை காலமாகையால் வெப்பமும் வறட்சியும் அவர்களைச் சோர்வடையச் செய்தன.

ஒருநாள் அலெக்ஸாண்டருக்கு வெயில் கொடுமையால் நாவறட்சி ஏற்படவே அவரால் பேசவும் முடியவில்லை. அப்பொழுது குதிரை வீரர்களின் தோள்பட்டைத் பைகளில் ஒரு சொட்டுத் தண்ணீர்கூட இருக்கவில்லை. ஒரே ஒரு வீரனிடம் மட்டும் சிறிதளவு தண்ணீர் இருந்தது. அவன் அந்தத் தண்ணீரை தங்களது தலைவன் அலெக்ஸாண்டரிடம் கொடுத்தான். அதை வாங்கிக் கொண்ட அலெக்ஸாண்டர் தண்ணீர்த் தாகத்தால் தவிக்கும் மற்ற வீரர்களைப் பார்த்தார். அவர்களும் தாகத்துடன் அவரையே பார்த்தார்கள்.

எனது உயிரைவிட மேலான என் அன்புக்குரிய படைவீரர்களாகிய நீங்கள் எல்லோரும் தாகத்தால் வதங்கிக் கொண்டிருக்கும் வேளையில் எனக்கு மட்டும் எதற்குத் தண்ணீர்? என்றார் அலெக் ஸாண்டர்.

"எங்கள் பிள்ளைகளுக்காக என்றான் ஒருவீரன். என்ன உங்கள் பிள்ளைகளுக் காகவா?

ஆமாம் தண்ணீர்த் தாகத்தால் நாங்கள் நாவறண்டு இறந்து போனாலும்கூட நீங்கள் [illegible] பிள்ளைகளைக் காப்பாற்றிவிடுவீர்கள் அல்லவா? என்றான் இன்னொரு வீரன். எங்கள் பிள்ளைகள் இறந்துவிட்டால் கூட நாங்கள் வேறு பிள்ளைகளைப் பெற்றுக் கொள்வோம். ஆனால் எங்கள் அரசன் இறந்துவிட்டால்நாங்கள் அநாதைகளாகி விடுவோம் என்றான் மற்றொரு வீரன். இதனைக் கேட்ட அரசனது உளம் நெகிழ்ந்தது. வீரர்களே! உங்களுக்கு உங்களது அரசன் உயிர் முக்கியம் என்றால் எனக்கு என் வீரர் களாகிய உங்கள் உயிர்தான் முக்கியம், நான் மட்டும் எப்படி இந்தத் தண்ணீரைக் குடிக்க முடியும்? என்றார் அவர். அலெக்ஸாண்டரின் அன்பை உணர்ந்த படை வீரர்கள் உளம் நெகிழ்ந்தார்கள்.

தலைவரின் தகுதி, வெற்றியின் இரகசியம், தலைமைப்பண்பு இவையே வாழ்வின் முத்துக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரிதல் என்பது இயல்பாக வர வேண்டும்...!

அறிஞர் ஒருவர் ஆராய்ச்சி நூல் ஒன்றை எழுதுவதற்காக அமைதியான ஓர் இடத்தைத் தேடிக் கொண்டிருந்தார். அவர் தன்னை அறியாமலேயே அரக்கர்கள் குடி கொண்டிருந்த பள்ளத்தாக்கைத் தெரிவு செய்துவிட்டார். கோபமடைந்த அரக்கன் அறிஞரைப் பார்த்துக் யார் நீ..? இந்த அமைதியான பள்ளத்தாக்கைக் கெடுக்க வந்தாயா..? என்று கேட்டான். தயவு செய்து மன்னித்துவிடு. நான் ஒரு அறிஞன். அமைதியான ஓர் இடத்தைத் தேடிக்கொண்டிருந்தேன். அதனால் தான் இங்கு வந்தேன் என்றார் அந்த அறிஞர்.

அரக்கனோ அறிஞரை நோக்கி இதற்கென நீ ஒரு விலையைக் கொடுக்க வேண்டும் என்றான். அந்த விலை வேறொன்றுமல்ல, குரங்காக மாறுவதுதான், அதுதான் உனக்கான தண்டனையும் என்றான். அடுத்த கணம் குரங்காக மாறினார் அறிஞன். விம்மி விம்மி அழுதார். இருந்த போதிலும் தன் திறமையால் ஓர் அரசின் தலைமை ஆலோசகராக அவ் உருவிலேயே பணி செய்தார். சில காலம் சென்றதன் பின்னர், அந்தத் தன்மை மாற்றம் பெற்று மீண்டும் தன் உருவம் அடைந்தார் என்பது மீதிக் கதை. அறிவுடையோர் எவ்வுருவில் இருந்தாலும் அவர்கள் மதிக்கப்படுவர் என்பது இதன் மூலம் வெளிப்படுத்தப்படும் நீதி.

இந்தக் கதையைப் படிக்கும் போது, தமிழரின் தற்போதைய அரசியல் நகர்வினூடான பயணங்களின் தாற்பரியங்களோடு ஒத்துப் போகின்றது. இலங்கையின் அரசியல் வரலாற்றில் அவ்வப்போது அதிசயமான மாற்றங்களும், குழப்பங்களும் ஏற்படுகின்ற நிகழ் தகவின் அடிப்படையிலே கடந்த ஆண்டின் தொடக்கத்திலும் நல்லாட்சி என்பதான தோற்றம் உருப்பெற்றது. இனவாதம் என்கின்ற ஒரே சேர்மானங்களின் வழி வந்த கூர்ப்பின் வெளிப்பாடாகப் புது முகம் அரச் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டது. ஆனாலும் அதன் மந்திரி சபையும், கருத்துக்களை வார்த்தைகளில் குதறும் ஆலோசனைக் குழாமும் ஆரம்பம் போன்று இருந்தபடியே தான் இருந்து வருகின்றன.

இந்த நிலையிலே தமிழனத்திற்கு எதிரான இலங்கை அரசின் சர்வதேச வல்லாதிக்கங்களோடு கூட்டிணைந்ததான இன அழிப்பின் ஆறு ஆண்டுகளின் பின்பதான அமைதி, நல்லிணக்கம், சமத்துவம் என்ற குணங்குறிகளை வெளிப்பாடாக்கி தற்போதைய அரசு காலம் கடத்தி வருகின்றது. இந்தச் செயல் நிலைகளினுள் அழிவிலிருந்து மீள வேண்டிய இனமாக, உரிமைக்கான நீண்ட பயணங்களின் பின்னுரித்தாளராக தமிழினம் ஜனநாயக உரிமை கொண்டு பங்குதாரராகி விட்டது. நீண்ட நெடிய காலத்தின் பின்னர் தமிழர் தரப்பிலிருந்து இரண்டாமவராக ஒருவரை எதிர்க்கட்சித் தலைமைப் பதவியிலே அமர்த்தியும் விட்டது. இந்த ஆரம்பம் தொடக்க நிலையிலே நன் முறையான வரவேற்பைப் பெற்ற போதும், அண்மைய காலமாக பல எதிர்வினைகளையும் எதிர்ப்புக்களையும்தான் சிங்களத் தரப்பிடமிருந்து ஒவ்வாத குணமாக, மனமாக எதிர்கொண்டிருக்கிறது. வடமாகாண சபை சமஷ்டித் தீர்வை, தீர்மானத்தை நிறைவேற்றியிருந்தது. இந்தத் தீர்மானம் நாட்டில் பிரிவினையை ஏற்படுத்தப் போகின்றது, தமிழ் தேசியக் கூட்டமைப்பும் அவ்வாறான நிலைப்பாட்டில் தான் இருக்கிறது. நாடு துண்டாடப்பட முடியாது என்ற சலசலப்புக்களை சிங்களக் கட்சிகளிடையே ஏற்படுத்திவிட்டிருந்தது. இதனை எதிர்த்து எதிர்க் கட்சித் தலைவர் உடனடியாகப் பதவி விலக வேண்டும் எனக் கோரி அவரது அலுவலகம் முன்பாக ஏழு கட்சிகளின் தலைவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். போதாததற்கு வழக்கமான பாணியில் மகிந்த தரப்பும் ஏனைய இடதுசாரிகளும் தமது கொதிப்பை வெளிப்படுத்தியிருந்தன.

இந்தச் சூழ்நிலைகள் மேற்போந்த கதையின் ஓர் பாத்திரமாக சித்திரிக்கப்படும் அரக்கன், அறிஞரைப் பார்த்துக் கேட்டது போல யார் நீ..? இந்த அமைதியான நாட்டைத்துண்டாட வந்தாயா? என மீண்டும் அடிமைப்படுத்தும் நோக்கத்தோடு இடித்துரைத்தது போலத் தோன்றுகின்றன. உண்மையில் நியாயமான அரசியல் உரிமைகளை, உரித்துக்களை பெற்று எங்களை நாங்களே ஆட்கொண்டு வாழும் அமைதி என்ற தேசத்தின் கதையை எழுதும் நோக்கோடு தான் ஜனநாயக ரீதியில் வந்த உயர்வுகளை தியாகங்களின் அடுத்தபடி நிலையாக நம்பி அனுப்பி வைத்துள்ளோம்.




இருந்தும் அழிவைச் செய்தவர்களின் வழி வந்த அரக்கர்களின் பிடியினுள் தான் குந்தியிருக்கிறோம் என்பதனை மறுக்க முடியாது.

மாறாக அறிஞர் குரங்கின் உருவம் பெற்றதைப் போன்று நாங்கள் விலை மதிப்பற்ற உயிர்களை இழந்துவிட்டோம். இதற்கு மேலும் தீர்வுக்காக விலை கொடுக்க முடியாது. அந்த இனமாக மாறி விடவும் முடியாது. தமிழர் சார்பிலே அரசின் எதிர்க்கட்சித் தலைவர் பதவி என்ற ஆலோசகர் பதவி நின்று இராஜ தந்திர ரீதியில் தமிழர் தொடர்பில் அதிகம் பேச முடியுமே தவிர அரசின் அங்கமாகி அவர்களோடு ஒன்றிணைந்து அங்கேயே சாய்ந்து ஒரு போதும் தீர்வைப் பெற்றுவிட முடியாது. இவை அனுபவங்கள் தந்த பாடங்கள்.

இந்த சந்தர்ப்பத்திலே வடக்கில் எழும் சமஷ்டி தொடர்பிலான குரலுக்கு உரிய தீர்வை வழங்குவது கட்டாயம் என்பதான மைத்திரியின் பேச்சும், சமஷ்டி பற்றித் தெற்கு மக்களுக்குப் புரியும் படி விளக்குங்கள் என்பதான எதிர்ப்பை வெளியிட்ட கட்சிகளின் கோரிக்கையும் நன் முறையின் வெளிப்பாடுகள் போல் தோற்றம் தருகின்றன. விளைவுகள் தொடர்பில் வழக்கம் போல தமிழர் தரப்புப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டியிருக்கிறது.

ஆக, இத்தனைக்கும் அப்பால் நல்லிணக்கம் என்பதும் புரிதல் என்பதும் சொல்லிப் புரிய வைக்கக் கூடியவையல்ல, தானாக உணர்ந்து பெற வேண்டியவை. மனிதப் பண்பின் அடிப்படையிலே இயல்பாக வர வேண்டியவை. இதனைப் புரிந்து கொள்ள வேண்டும் அரசு...!



# குடியை மறக்கச் செய்யும் நெல்லிக்கனி

அ. அஜித்,

சாதாரண வயிற்று வலி முதல் தீவிரமான வயிற்று அழற்சிவரை குணமாக்கும் ஆற்றல் நெல்லிக்காய்க்கு உண்டு. நெல்லியின் இலை, பட்டை, பூ, காய், விதை ஆகிய எல்லாப் பாகங்களுக்குமே மருத்துவக் குணமுண்டு.

பூக்கள் குளிர்ச்சியானவை. பழங்களுக்குச் சிறுநீரைச் சுத்தப்படுத்தும் ஆற்றல் உண்டு. மலமிளக்கியாகவும் அவை செயற்படுகின்றன. இலைகளை நீர்க்கரைசலாகவும் பயன்படுத்தலாம். வெந்தயத்தோடு நெல்லி இலைகளை அரைத்து நாட்பட்ட வயிற்றுப் போக்குடையவர்களுக்குக் கொடுத்தால் வயிற்றுப் போக்குக் குணமாகும். நெல்லி விதையுடன் உலர் திராட்சையையும் சீனியையும் சேர்த்து வாய் கொப்பளிக்கச் செய்தால் காய்ச்சல் காரணமாக நாக்கு உலர்ந்து சுவை தெரியாமல் இருக்கும் நிலை மாறும்.


அக்குள் பகுதியில் நமைச்சல் ஏற்பட்டால் நெல்லிக் கனியை அரைத்துப் பூசி வந்தால் நமைச்சல் குணமாகும். நெல்லிக்காய்த் துவையல், சுவையின்மை, வாந்தியை அறவே போக்கும். குடிப்பழக்கம் இருந்தால் நெல்லிக்காயைத் தினமும் சாப்பிட்டு வந்தால் அந்தப் பழக்கம்- விருப்பம் முற்றாக நீங்கிவிடும்.

இரத்தத்தைத் தூய்மைப்படுத்துவதிலும் பித்தநோயைக் குணப்படுத்துவதிலும் நெல்லிக்காய் உதவுகின்றது. நெல்லிக்காயைத் தினமும் சாப்பிட்டால் மலச் சிக்கல் இருக்காது. உடல் உஷ்ணத்தைக் குறைக்கவும், ஜீரண சக்தியைக் கூட்டவும் நெல்லிக்காய்க்கு அதிக பலம் உண்டு

நெல்லி விதையைக் காயவைத்து கடுக்காய்த் தோல், வெண்மிளகு, மரமஞ்சள், கார்மோக அரிசி, பரங்கிப் பட்டை சம அளவு தூள் செய்து வைத்துக் கொண்டு தொடர்ந்து ஒரு வாரம் தலைக்குத் தண்ணீருடன் சேர்த்துக் தேய்க்க வேண்டும். மூன்று நிமிடங்கள் ஊறியவுடன் குளித்தால் பொடுகு நீங்கிவிடும். தலைமுடி உதிராது செழித்து வளரும்.

**நிரந்தரமாகக் குடிக்கு அடிமையானவர்களை அதில் இருந்து காப்பாற்றுவதற்கு**

பச்சை நெல்லிக்காயை உரலிற் போட்டு இடித்து கொட்டையை நீக்கிக் காய வைத்துக் கொள்ள வேண்டும். நெல்லிக்காய்ச் சதையை இடித்து, இரு மடங்கு நீருடன் காய்ச்சி, நன்றாகச் சுண்டும் வரை காய்ச்சியதும் இந்தச் சாற்றோடு சர்க்கரையைச் சேர்த்து, காலை, மதியம், மாலை என மூன்று வேளையும் சாப்பிட்டு வர, மதுபானம் குடிக்க வேண்டுமென்ற வேட்கை மறந்து போகும்.



தேவைப்பட்டால் சாற்றுடன் இலவங்கம், ஏலம், கற்கண்டு, திராட்சை ஆகியவற்றைச் சேர்த்து இரண்டு மணி நேரத்துக்கு ஒரு முறை வாயிற் போட்டு உமிழ்ந்து வர மது வாடை வெறுக்கும். குடிக்க வேண்டும் என்ற நிலை மறந்து போகும். சத்தியமாக இனிக் குடிக்க மாட்டேன் என்ற பாடல் ஒலிக்கும்.

இனியாவது அனைவரும் வீட்டில் ஒரு சர்வலோக நெல்லி மரத்தை நட்டு அதன் பயனால் ஆரோக்கியமாக வாழ உறுதி பூணுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா பொண்ணுங்களும், சூர்யா மாதிரி பையன் வேணும்னுதான் சுத்துவாங்க...



அப்புறம் கடைசியா ஏரியாவுல இருக்கிற எவனாவது தான் உஷார் பண்ணுவான் மச்சி...



எவன் ஒருவன் தான் அசிங்கப்பட்டதுக்கும் அவமானபட்டதுக்கும் துளி கூட கவலைபடாமல் சிரிக்கிறானோ அவனே ஒரு சிறந்த நடிகன்...!!!

பவர் ஸ்டார் சீனிவாசன்

நான் நடிகன் டா... ஆஸ்காஸ் எனக்கு தான்டா...

இது புது ஐடியா !!!



நீ என்னை love பண்ணாட்டியும் பரவாய் இல்லை. வேற பொண்ண set பண்ணி விடு இனிமே என்னால risk எடுக்க முடியாது

பிரபல மனோதத்துவ நிபுணர் ஒருவரைச் சந்தித்த அழகி ஒருத்தி, "சாதாரண மன நிலையில் உள்ள ஒருவர் உங்களிடம் வருவதாக வைத்துக் கொள்ளுங்கள்" அவருக்கு மூளைக் கோளாறு இருக்கிறதா என்பதை எப்படிக் கண்டு பிடிப்பீர்கள்? என்று கேட்டாள்.

இதில் எவ்வித சிரமமும் இல்லை. ரொம்ப சுலபம். சின்னக் கேள்வியொன்றைக் கேட்பேன். அதற்கு அவர்கள் எவ்வித தயக்கமும் இன்றி பதில் சொன்னால் போதும். கண்டு பிடித்துவிடலாம் என்றார் நிபுணர்.

என்ன கேள்வி?

கப்டன் குக் இந்த உலகத்தை மூன்று முறை சுற்றி வந்தார். எந்தச் சுற்றில் அவர் இறந்து போனார்?

அந்த அழகி சற்று நேரம் யோசித்தாள். பின்னர் சிரித்தபடியே கேட்டாள், "உங்களுக்கு வேறு கேள்வி கேட்க வேண்டுமென்று தோன்றவில்லையா? மன்னியுங்கள். நான் சரித்திரத்தில் ரொம்பவும் வீக்."





# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** திட்டமிட்ட பணிகள் எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். நிலுவைப் பணம் கிடைக்கும். கலையம்சம் நிறைந்த வீட்டு உபயோகப் பொருள் வாங்குவீர்கள்.

**இடபம்:** பிறரிடம் ரகசியம் பேச வேண்டாம். தொழிலில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும். பெண்கள் சிக்கனம் மூலம் சேமிக்க முயல்வர். உடல்நலனில் அக்கறை உண்டாகும்.

**மிதுனம்:** உங்கள் மீது பலரும் நல்லெண்ணம் கொள்வர். தொழில், வியாபாரத்தில் இருந்த குறுக்கீடு விலகும். ஆதாயம் மிதமாக இருக்கும். புத்திரர் விரும்பிக் கேட்ட பொருள் வாங்கித் தருவீர்கள்.

**கடகம்:** உலக நடப்பு அறிவதில் ஆர்வம் உண்டாகும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். பணியாளர்கள் சலுகை பெறுவர். குடும்பத்தினர் ஆதரவாக செயற்படுவர்.

**சிங்கம்:** நேர்மையான வழியில் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் போட்டி மறையும். வருமானம் படிப்படியாக உயரும். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள்.

**கன்னி:** சிறிய பணியை நிறைவேற்றவும் தாமதம் ஏற்படும். சக தொழில் சார்ந்தவரிடம் சச்சரவு ஏற்படலாம். இலாபம் சுமாராக இருக்கும். வாகனப் பயணத்தில் மிதவேகமாகச் செல்லவும்.

**துலாம்:** புதியவர்களின் அறிமுகமும் உதவியும் கிடைக்கும். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். உறவினர்களிடம் கேட்ட உதவி கிடைக்க வாய்ப்புண்டு.

**விருச்சிகம்:** சமயோசிதமாகச் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரம் செழிக்கும். வருமானம் பன்மடங்கு உயரும். மனைவியின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**தனுசு:** பயனற்ற பேச்சில் ஈடுபட வேண்டாம். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். உறவினர் வருகையால் குடும்பச் செலவு அதிகரிக்கும். நண்பர்களின் ஆலோசனை வளர்ச்சிக்கு வழிவகுக்கும்.

**மகரம்:** அவசரப் பணி உருவாகி சிரமத்தைச் சந்திக்கலாம். தொழில், வியாபாரத்தில் இருக்கும் அனுகூலத்தைப் பாதுகாப்பது நல்லது. இலாபம் சுமார். வீடு, வாகனத்தில் பராமரிப்புச் செலவு ஏற்படலாம்.

**கும்பம்:** நன்றி மறந்தவரையும் பொறுத்துக் கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்திப் பணி திருப்திகரமாகும். தாராள அளவில் வருமானம் கிடைக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**மீனம்:** எதிர்மறையாகச் செயற்படுபவரிடம் விலகவும். தொழில், வியாபாரத்தில் இலாபம் மிதமாக இருக்கும். பணியாளர்கள் பணிச் சுமையைச் சந்திப்பர். உடல் நலத்துக்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படும்.

# சென்னையில் தொடங்கியது கத்திச் சண்டை

"மருது"வைத் தொடர்ந்து "கத்திச் சண்டை" பட வேலைகளில் பிசியாகி விட்டார் விஷால்! "ரோமியோ ஜூலியட்" படத்தைத் தயாரித்த "மெட்ராஸ் என்டர்பிரைசஸ்" எஸ்.நந்தகோபால் தயாரிக்கும் இந்தப் படத்தை சுராஜ் இயக்குகிறார். படத்தில் விஷாலுடன் முதன் முதலாக ஜோடி சேருகிறார் தமன்னா. இந்தப் படத்தின் பூசை சென்னையில் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து "கத்திச் சண்டை" யின் படப்பிடிப்பு தொடர்ந்து நடை பெற்று வருகிறது. இந்தப் படத்தில் ஜெகபதி பாபு வில்லனாக நடிக்கிறார். காமெடிக்கு வடிவேலு, சூரி ஆகியோர் ஒப்பந்தமாகியுள்ளனர். "ஹிப்பாப் தமிழா" ஆதி இசை அமைக்கிறார். ரிச்சர்ட் எம். நாதன் ஒளிப்பதிவு செய்கிறார்.



யாருகிட்ட விட்டுக் கொடுத்துப் போனாலும், தன்னை ஒருத்தன் வெறுக்குறான்னு தெரிஞ்சப்புறம் அவனுட்ட மட்டும் அப்படி இருக்கக்கூடாது...

#நிதாசனம்

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 2 | | | | | | 8 | 4 |
| 4 | | | | 7 | 9 | 6 | | 2 |
| | | | | | | | | |
| 2 | | 8 | | | | | | |
| | | | 7 | 6 | 5 | | | |
| | | | | | | 4 | | 6 |
| | | | | | | | | |
| 7 | | 3 | 2 | 5 | | | | |
| 5 | 4 | | | | | | 7 | 8 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 1 | 5 | 4 | 7 | 9 | 3 | 6 | 8 |
| 4 | 3 | 6 | 2 | 8 | 1 | 7 | 5 | 9 |
| 9 | 7 | 8 | 6 | 3 | 5 | 2 | 4 | 1 |
| 6 | 8 | 4 | 9 | 5 | 7 | 1 | 3 | 2 |
| 3 | 5 | 9 | 8 | 1 | 2 | 4 | 7 | 6 |
| 7 | 2 | 1 | 3 | 6 | 4 | 9 | 8 | 5 |
| 1 | 6 | 7 | 5 | 2 | 3 | 8 | 9 | 4 |
| 5 | 4 | 3 | 1 | 9 | 8 | 6 | 2 | 7 |
| 8 | 9 | 2 | 7 | 4 | 6 | 5 | 1 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இதில் ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது.

2005 இல் இது உலக அளவில் பிரபல்ய மானது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | – | 80 | 80 | 40 | – | 40 | 80 |
| கத்தரி | 100 | 60 | 100 | 100 | 100 | 80 | 70 | 40 |
| கரட் | 80 | 80 | 80–200 | 100 | 80 | 100 | 70 | 120 |
| மரவள்ளி | 60 | 60 | 50 | 60 | 60 | 60 | 40 | 40 |
| பயிற்றை | 120 | 100 | 100 | 120 | 120 | 60 | 90 | 60 |
| பாகல் | 120 | 120 | 140 | 100 | 140 | 120 | 110 | 100 |
| கருணைக்கிழங்கு | 100 | – | 100 | – | 70 | – | 60 | 50 |
| பெ.வெங்காயம் | 80 | 80 | 80 | 80 | 90 | 90 | 70 | 60 |
| சி.வெங்காயம் | 80 | 100 | 100 | 120 | 80–100 | 140 | 100 | 70 |
| பூசணி | 40 | 30 | 40 | 40 | 30–40 | 40 | 15 | 20 |
| தக்காளி | 120 | 140 | 120 | 180 | 140–160 | 160 | 130 | 180 |
| வாழைக்காய் | 40 | 30 | 50 | 40 | 20–30 | 30 | 35 | 30 |
| கீரை | 20 | 30 | 40 | 15 | 20–30 | 30 | 25 | 40 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 30 | 20 | 30 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 80 | 90 | 80 | 80 | 100–120 | 100 | 60 | 60 |
| புடோல் | 60 | 50 | 80 | 60 | 60 | 100 | 30 | 60 |
| கோவா | 100 | 90 | 100 | 100 | 100 | 100 | 80 | 70 |
| வெண்டி | 80 | 60 | 80 | 120 | 100 | 80 | 50 | 80 |
| போஞ்சி | 160 | 180 | 200 | 200 | 160 | 240 | – | 180 |
| லீக்ஸ் | 200 | 120 | 120 | 140 | 100–140 | 120 | 100 | 90 |
| தேங்காய் | 40 | 25 | 50 | 40–50 | 35–40 | 30 | 15–30 | 30 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 80 | 80–120 | 90 | 120 | 100 |
| தேசிக்காய் | 500 | 360 | 400 | 350 | 160 | 600 | 350 | 300 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 20 | 10 | 12 |
| கறிமிளகாய் | 100 | 80 | 100 | 120 | 160 | 80 | 110 | 60 |
| இராசவள்ளி | 150 | 140 | 160 | 160 | 140 | – | 110 | 120 |
| முருங்கைக்காய் | 250 | 200 | 200 | 180 | 300–350 | 240 | 160 | 300 |




## எனாமல் காப்பு

எனாமல் காப்புகள் அறிமுகமாகியுள்ளன. பலவித கண்கவர் வர்ணங்கள், வடிவங்களில் எனாமல் வேலைப்பாட்டுடன் இந்தக் காப்புகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இவற்றின் விலை 350 ரூபா தொடக்கம் 650 ரூபா ஆகும்.



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 600 | 700 | 700 | 650 | 700 |
| நண்டு | 250 | 400 | 300 | 350 | 300 | 200 | – |
| கணவாய் | 600 | 600 | 500 | 500 | 600 | 650 | – |
| பாரை | 550 | 600 | 500 | 600 | 500 | 600 | 400 |
| சுறா | 500 | 700 | 600 | 800 | 800 | 500 | 500 |
| சீலா | 300 | 500 | 400 | 450 | 400 | 400 | – |
| விளை | 650 | 500 | 400 | 500 | 400 | 400 | 400 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 350 | 400 | 400 |
| கும்பிளா | 400 | 350 | 300 | 400 | 400 | 400 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | – | 600 | – | – |
| ஓரா | 400 | 400 | – | – | 450 | – | – |
| திரளி | 300 | 300 | 200 | 250 | 300 | 200 | 350 |
| நகரை | 250 | 250 | – | 250 | 250 | – | 300 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 100 | 100 | – |
| ஒட்டி | 300 | 250 | 150 | 250 | 300 | – | – |
| திருக்கை | 150 | 350 | 200 | 350 | 300 | 300 | 150 |
| மதனம் | 150 | 200 | 180 | 350 | 250 | – | 200 |
| கொய் | 100 | 200 | 60 | 100 | 100 | 100 | – |
| பாலை | 400 | 250 | 250 | 350 | 400 | 300 | – |
| வாழை | 100 | 150 | 200 | 400 | 300 | – | – |

## சுத்தத்தால் மற்றவர்களைக் கவர..



**நீரின் கறைகள்:**

கண்ணாடி ரம்ளர்களில் சுடுதண்ணீரை பயன்படுத்துவதன் மூலம் அதில் கறைகள் படியும். இதனைச் சுத்தம் செய்வதற்கு வினிகரை ஒரு துணியில் எடுத்து இந்தக் கண்ணாடி ரம்ளரை நன்றாகத் துடைத்துக் காயவைக்க வேண்டும்.

**மைக்ரோவேவ்:**

மைக்ரோவேவனை சுத்தம் செய்வதற்கு ஒரு சிறிய ரம்ளரில் தண்ணீர் விட்டு அதனுடன் எலுமிச்சம் பழத்தை துண்டாகி வெட்டி உள்ளே போட்டுவிடுங்கள். பின்னர் மைக்ரோவேவனை ஒன் செய்துவிட்டு சிறிது நேரம் பப்புல்ஸ் வரும் வரை விட்டுவிடுங்கள்.

பின்னர், அந்த எலுமிச்சை நீரின் ஆவி பரவியுள்ள இடங்களை ஒரு துணியால் சுத்தமாகத் துடைத்து எடுங்கள்.

**சலவை இயந்திரம்:**

சுடு தண்ணீரால் சலவை இயந்திரத்தை நிரப்பிவிட்டு அதனுடன் 3 அல்லது 4 கப் வெள்ளை வினிகரைச் சேர்த்துக் கலக்கவும்.

பின்னர் சில நிமிடங்கள் கழித்து பேக்கிங் சோடாவைப் போட்டு ஒரு 30 நிமிடங்கள் இயந்திரத்தை ஒன் செய்துவிடவும்.

பின்னர் பாருங்கள் உங்கள் சலவை இயந்திரம் எவ்வளவு சுத்தமாக இருக்கிறது என்று.

**ஆடைகளில் கறை:**

தண்ணீர் மற்றும் பேக்கிங் சோடா ஆகிய இரண்டும் இணைந்து உங்கள் ஆடைகளில் மாயங்களை நிகழ்த்தும்.

சுடுதண்ணீர் மற்றும் பேக்கிங் சோடாவை போட்டு வெறும் 30 நிமிடங்கள் ஊற வைத்தால், கறை போய்விடும்.

**தண்ணீர்க் குழாய்:**

தண்ணீர் குழாய்களில் படிந்துள்ள கறைகளைப் போக்குவதற்கு, ஒரு துண்டு எலுமிச்சம்பழத்தை கொண்டு குழாய்களை நன்றாகத் தேய்ப்பதால் அதில் படிந்துள்ள கறைகள் போய்விடும்.

## இறால் பஜ்ஜி

**தேவையானப் பொருள்கள்**

இறால் - 500 கிராம்
கடலை மா - 200 கிராம்
மிளகாய்த் தூள் - 1 தேக்கரண்டி
எண்ணெய் - தேவையான அளவு
உப்பு - தேவையான அளவு

**செய்முறை :**

இறாலை வேக வைத்து எடுத்துக் கொள்ளவும்.

கடலை மா, உப்பு, மிளகாய்த் தூள் சேர்த்து பஜ்ஜி மாவு போலக் கரைத்துக் கொள்ளவும்.

ஒவ்வொரு இறால்ாக இந்த மாவில் தோய்த்தெடுத்து, காய்ந்த எண்ணெயில் போட்டு சிவக்க வெந்ததும் எடுக்கவும். சத்துள்ள இறால் பஜ்ஜி தயார்.



**நாளை**
சித்திரை-25
ஞாயிற்றுக்கிழமை 08.05.2016
திதி: துதியை மு.இ.09.09 வரை
நட்சத்திரம்: ரோகிணி பி.இ.05.35 வரை
ராகுகாலம்: 04.25-05.55 வரை
சுபநேரம்: 08.55-10.25 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

### புகைப்பட மற்றும் இறுவெட்டின் பிரதிகளைப் பெற்றுக் கொள்ளல்

கடந்த ஜனவரி மாதம் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவின்போது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் பிரதிகளையும் இறுவெட்டின் பிரதிகளையும் இதுவரை பெற்றுக் கொள்ளாத பட்டதாரி மாணவர்கள் வார நாள்களில் யாழ். பல்கலைக்கழக கல்விக் கிளைக்கு கடமைநேரத்தில் வருகை தந்து பெற்றுக் கொள்ளலாம்.

**பதிவாளர்.**

## யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி பழைய மாணவர் சங்க பொதுக்கூட்ட மறு அறிவித்தல்

எதிர்வரும் **08.05.2016 ஞாயிற்றுக்கிழமை** நடைபெறவிருந்த சங்க பொதுக்கூட்டமானது தவிர்க்க முடியாத காரணமாக **22.05.2016 ஞாயிற்றுக்கிழமை** காலை 9.00 மணிக்கு பிற்போடப்பட்டுள்ளது என்பதனைத் தாழ்மையுடன் அறியத்தருக்கின்றேன்.

அங்கத்தவர்களுக்கு தனிப்பட்ட அழைப்பிதழ்கள் அனுப்பப்பட மாட்டாது என்பதனையும் தெரிவித்துக் கொள்ளும் இந்தவேளையில் அனைத்து அங்கத்தவர்களும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**இராசநாயகம் ஸ்ரீரங்கன்**
**செயலாளர்**

## கூட்டம்

யாழ்ப்பாணம், மே 7

இலங்கை அதிபர் சேவைக்கு புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான சேவை ஆரம்ப பயிற்சி நெறி தொடர்பான கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

(த-ஐ-ரி)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

அமரர்
**செல்லையா செல்வரத்தினம்**



மலர்வு
15.04.1942

உதிர்வு
07.04.2016

கடந்த 07.04.2016 சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (07.05.2016) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னார் காலமான செய்தி கேட்டு உடனடியாக வந்து கலந்துகொண்டவர்களுக்கும், பல வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் அவரின் இறுதிக்கிரியைகளில் பெருந்திரளாகக் கலந்துகொண்டவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும், தொடர்பு சாதனங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்துத் துயர் பகிர்ந்தவர்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இந்தத் தகவலை வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ் கிடைக்கத் தவறிய அனைவரையும் ஏற்று வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**

இல.47, சபாபதி வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
(பூநாறி மடம் செல்வமஹால் முன்வீதி)

**குடும்பத்தினர்.**

## ஒத்துமாறல்

தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இந்து நாகரிகம் சிறப்பு பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட மாணவர் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்கு ஒத்துமாற விரும்புகின்றார். விருப்பமுள்ளவர் தொடர்பு கொள்ளவும்.

**077 869 2191, 077 6764270**

## வேலையாள் தேவை

**மானிப்பாய் தனியார் மருத்துவ மனையில் சிகிச்சை பெறும் நோயாளியை பகலில் பராமரிப்பதற்கு ஆண் வேலையாள் தேவை.**

**077 036 6257**

## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் உள்ள எமது நிறுவனத்துக்கு கீழ்க் காணும் தகுதிகளுடன் கூடிய விற்பனை மேற்பார்வையாளர் (Supervisor) தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.

1. வயதெல்லை 21இற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்
2. பூரண கணினி அறிவு இருத்தல் வேண்டும்.
3. சிங்களம் அல்லது ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

G H A De Silva & Company
இல.96,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
077 296 0787

## அறை வாடகைக்குண்டு

யாழ்/ மருத்துவபீடத்துக்கு அண்மையில் படிக்கின்ற பெண் பிள்ளைகள் தங்கியிருக்கக் கூடிய சகல வசதிகளுடனும் கூடிய ஓர் அறை உண்டு.

**தொடர்பு: 077 606 0673**

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் சந்தி, பழனியாண்டவர் கோயிலுக்கு அருகில் பிரதான வீதியிலிருந்து 12 அடி பாதையுடனும் குழாய் கிணற்றுடனும் கூடியதுமான 5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**077 544 4837**

THE HALO TRUST

## கண்ணிவெடி அகற்றுனருக்கான பதவி வெற்றிடம்

ஹெலோ ரஸ்ட் ஆனது பிரித்தானியாவை தளமாகக் கொண்டு உலகளாவிய ரீதியில் 17நாடுகளில் இயங்கிக்கொண்டிருக்கிறது. இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் மிதிவெடிகள் மற் றும் வெடிக்கத்தக்க பொருள்களை அகற்றிக் கொண்டிருக்கின்றது.

ஹெலோ ரஸ்ட் இன் எதிர்கால வேலைக்கான மிதிவெடிப் பயிற்சிக்காக ஆண்,பெண் இருபாலாரின் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் விளங்கிக்கொள்ள வேண்டியது கண்ணிவெடியகற்றல் துப்பரவற்றதும். தேக வலுவை அதிகம் பிரயோகிப்பதுமான கடினமான வேலையாகும். எமது தரமான நடவடிக்கைகள் கண்ணிவெடி அகற்றுதலிலுள்ள அபாயத்தை இயலுமான அளவு குறைத்துக்கொள்வதுடன் முற்றாக நீக்கமுடியாது. எனவே கருத்தில் கொள்ளப்படும் விண்ணப்பதாரிகளிடமிருந்து பலமான அர்ப்பணிப்பு உணர்வு எதிர்பார்க்கப்படுகின்றது.

முகமாலை, பளை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆர்வமுள்ளவர்கள் உங்களுடைய சுயவிபரக் கோவை மற்றும் தொடர்புகொள்ள வேண்டிய விவரங்களை கீழ் உள்ள முகவரிக்கு எதிர்வரும் 2016 மே மாதம் 13ஆம் திகதி வெள்ளிக் கிழமைக்கு முன்னதாகச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**ஹெலோட்ரஸ்ட்**

**450, திருநகர் மேற்கு, கிளிநொச்சி.**

## மாவட்ட பொது வைத்தியசாலை முல்லைத்தீவு
### கேள்வி அறிவித்தல்
### மாவட்ட பொது வைத்தியசாலை முல்லைத்தீவு 2016/17 ம் ஆண்டிற்கு தேவையான வழங்கல்கள்/சேவைகள்

முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலைக்கு 2016/17ம் ஆண்டுக்கான பின்வரும் வழங்கல்கள் / சேவைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

அ. அழுக்குத்துணிகள் சலவை செய்தல்
ஆ. வாகன சுத்திகரிப்பு செய்தல்.

2016 ஆனி 01ம் திகதி முதல் 2017 வைகாசி 31ம் திகதிவரையான ஒருவருட காலப்பகுதிக்கு வழங்கல்கள், சேவைகளுக்காக இலங்கையர் அல்லது இலங்கை வியாபார நிறுவனங்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. கேள்வி ஆவணங்கள் 07.05.2016 தொடக்கம் 23.05.2016 ம் திகதி வரை காலை 9.30மணி முதல் பி.ப.3.30 மணிவரையும் முல்லைத்தீவில் இயங்கும் மாவட்ட பொது வைத்தியசாலையில் வழங்கப்படும்.

1. அரசாங்க ஒப்பந்தத்தை செய்யமுடியாதவாறு தடை செய்யப்பட்டவர்களுக்கோ அல்லது தடை செய்யப்பட்ட நிறுவனங்களுக்கோ கேள்விப்பத்திரங்கள் விநியோகிக்கப்படமாட்டாது.
2. விண்ணப்பிக்கத் தகுதியானோர் கீழ்க்குறிப்பிடப்படும் தொகையை செலுத்துவதுடன் வழங்கல்கள் சேவைகள் என்பவற்றுக்கான பெறுமதி ஆவணத்தையும் முல்லைத்தீவில் இயங்கும் மாவட்ட பொது வைத்தியசாலையில் சமர்ப்பித்து கேள்வி ஆவணத்தை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் 24.05.2016 திகதி மு.ப. 10.00 மணிக்குமுன் கிடைக்கூடியவாறு தலைவர், கேள்விச்சபை மாவட்ட பொது வைத்தியசாலை முல்லைத்தீவு எனும் முகவரிக்கு பதிவு தபாலிலோ அல்லது நேரடியாக அலுவலக கேள்வி பெட்டியிலோ இடமுடியும். கேள்விகள் யாவும் 24.05.2016 மு.ப. 10.00 மணிக்கு திறக்கப்படும்.
3. வைப்புத் தொகைகளும் ஆவணங்களும்

A) அழுக்குத் துணி சலவை செய்தல்

| வைத்தியசாலை | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை (ரூபா) | பெறுமதி ஆவணம் (ரூபா) |
|---|---|---|
| மாவட்ட பொது வைத்தியசாலை-முல்லைத்தீவு | 200.00 | 5,000.00 |

B) வாகன சுத்திகரிப்பு

| இடம் | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை (ரூபா) | பெறுமதி ஆவணம் (ரூபா) |
|---|---|---|
| மாவட்ட பொது வைத்தியசாலை, முல்லைத்தீவு. | 500.00 | 25,000.00 |

1. ஏற்கனவே சேவையை வழங்கிவரும் ஒப்பந்தகாரர் எதிர்வரும் காலங்களுக்கு புதியவர்களாகவே கருதியே தீர்மானம் எடுக்கப்படும்.
2. கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். விண்ணப்பதாரரோ அல்லது எழுத்துமூலம் நியமிக்கப்பட்ட பிரதிநிதியோ கேள்விகள் திறக்கும்போது சமுகமளிக்கலாம்.
3. கேள்வி தொடர்பான கேள்விச்சபையின் தீர்மானமே இறுதி தீர்மானமாகும்.
4. மேலதிக விபரங்களை எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் தொ.இல.021 206 1423

வைத்திய கலாநிதி திரு. .P.தயானந்தரூபன்,
தலைவர், பிராந்திய பெறுகைக் குழு
மாவட்ட பொது வைத்தியசாலை,
முல்லைத்தீவு.

## Machine Operator தேவை

Ryobi (றையோபி) Offset Printer இயக்குநர் தேவை. தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.

Cont: 071 415 0302

## சமையலாளர் தேவை

ஆண் அல்லது பெண் விண்ணப்பிக்கலாம்

con: 071 427 3035

## 2015/2016 பல்கலைக் கழக அனுமதிக்கான விண்ணப்ப படிவம் பூர்த்தி செய்தல்

2015/2016 ஆம் ஆண்டிற்குரிய பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்ப பத்திரம் பூர்த்திசெய்வது தொடர்பான விவரங்கள் நிபுணர் குழுவினால் Dan TV யில் சனி (07.05.2016) இரவு 10.00 மணிக்கு நேரடி ஒளிபரப்பப்படும்.

**திரு. இ. ரட்ணம்,**
**சந்தைப்படுத்தல் துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாடகைக்கு

அல்லிப்பளை பிரதான வீதியிலிருந்து 3Km உட் பாதையில் மின்வசதியும் உடைய 12ஏக்கர், தென்னைமரம், 25 மாமரம் உடைய தென்னந்தோட்டம் வாடகைக்கு உண்டு. ஆடு, மாடு, இஞ்சி, பப்பாசி, முருங்கை, கச்சான், மிளகாய் உட்பட உபபயிர்கள் பெரிய அளவில் செய்யக் கூடிய வசதியுண்டு. தண்ணீர் வசதியும் நாற்புறம் வேலி வசதியும் உண்டு. நிறுவனம் வறுமைக் கோட்டு குடும்பங்களுக்கு பராமரிப்பு அடிப்படையில் கொடுக்கப்படும்.

**தொடர்பு: 077 667 2713**


## மரண அறிவித்தல்கள்

### திருமதி மகேஸ்வரி தம்பிராசா



சங்குவேலியைப் பிறப்பிடமாகவும் நுணாவில் மத்தி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி தம்பிராசா 05.05.2016 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராசாவின் (ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - நல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான குலசேகரம், முத்துறதி மற்றும் அன்னலெச்சுமி, அல்லிராணி, சிரோன்மணி ஆகியோரின் சகோதரியும், தவமலர் (ஜேர்மனி), வனிதாமலர் (இந்தியா), சறோஜினி (ஓய்வுபெற்ற பதவி நிலை உத்தியோகத்தர் நூலக சேவை, சித்த மருத்துவத்துறை - கைதடி), ரஞ்சினி (லண்டன்),குமுதினி (பிரான்ஸ்) ஆகியோ ரின் பாசமிகு தாயாரும், திலகரெட்ணம் (ஜேர்மனி), ரவீந்திரன் (இந்தியா), ஜெயபாலசுந்தரம் (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் பிரதேசசபை - சாவகச்சேரி), குமாரலிங்கம் (லண்டன்), கோணேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும், சர்மிளா, பிரியந்தன், சுபத்திரியா, சுபப்பிரதா, சுஜீவன், நிருபன், கஜானன் (இலங்கை வங்கி - சாவகச்சேரி), பிரியாங்கி, மதுராங்கி, மாலன், நிதர்ஷினி, யதுஷன், தாரிணி ஆகியோரின் அன்புப் பேர்த்தி யும், அனிஷா, ஷர்மிதா, சிறிதர்ஷன், டினேஸ்வரன், அஷ்விகா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.05.2016) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நுணாவில் மத்தி,**
**சாவகச்சேரி.**
(C/21702)
(11,17,18)
தகவல்:
**குடும்பத்தினர்.**

### திருமதி நாகம்மா (மம்மி) பொன்னுத்துரை



வட்டுக்கோட்டை மேற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வட்டுத்தெற்கு மூளாய் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா பொன்னுத்துரை நேற்று (06.05.2016) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற பொன்னுத்துரையின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி (முன்னாள் CTB ), நடராசா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சுபத்திராவின் (நோனா) அன்புத் தாயாரும், காலஞ்சென்ற தணிகாசலம் (முன்னாள் தபாலதிபர்) மற்றும் ராதாகிருஷ்ணன், ரமணா நிதி, காலஞ்சென்ற பிறேமாநிதி மற்றும் ரஞ்சன், மோகனதாஸ், விஜய தாஸ், சற்குணராசா, செல்வமலர் ஆகியோரின் பாசமிகு மாமி யாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.05.2016) சனிக்கிழமை காலை 7.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மூளாய் வீதி,**
**(விளாத்தித் தோட்டவீதி)**
**வட்டுக்கோட்டை**
(C/21714)
(11,17,18)
தகவல்:
**த.சுபத்திரா**
**(நோனா-மகள்)**

## அமரர் நாகலிங்கம் கிருஷ்ணபாலா அவர்களின்

## நீங்காத நினைவு நாள்கள்

மண வாழ்வில்
50 ஆண்டுகளும்



மண் நீங்கி
60 நாள்களும்

அன்பின் அப்பா!

நீங்கள் எங்கள் இல்லம் விட்டுப்பிரிந்து நாள்கள் வளர்கின்றன. அன்று வேராய் இருந்து விழுதுகளைக் காத்தீர்கள். இன்று உங்களது 50 ஆவது மண நாளைப் பிள்ளைகள் ஆகிய நாம் கொண்டாட எண்ணியிருந்தோம். ஆனால் காலனவன் உங்களைக் காவுகொண்டு போய்விட டான் எங்கள் குடும்பத்தலைவனாய், நண் பனாய், மந்திரியாய் நல்லாசிரியருமாய், பண்பிலே தெய்வமாய்ப் பாசத்துடன் வழி நடத்தினீர்கள் அப்பா! உங்கள் புனிதமான உயிர் பரந்தாமனின் பாதக்கமலங்களில் சங்கமமாகி அமைதிபெற அனுதினமும் ஆராதிக்கிறோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**வைமன் வீதி,**
**நல்லூர்.**

**ரூபா (மனைவி),**
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(S3869)(45,6,3)

### மே 18

போரில் 2009ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட மக்களுக்கான நினைவேந்தல் கடந்த வருடம் மே 18 ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் நடைபெற்றது. இந்த நிலையில் இவ்வருடமும் மே 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் கிழக்கு பகுதியில் நினைவேந்தல் நிகழ்வை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான ஒழுங்கமைப்புக்கள் மாகாணசபையின் முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(த-வ - 101)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
23.04.1946

மறைவு
08.04.2016

### அமரர் எலியாஸ் வஸ்தியாம்பிள்ளை (ராசா)

[ஓய்வு பெற்ற தபால் ஊழியர்]


சீவியத்தில் என்னை நேசித்தவர்களே
மரணத்திலும் என்னை மறவாதீர்கள்
அன்னாரின் இறுதி நிகழ்வுக்கு
சமுகமளித்தவர்களுக்கும்
ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றிகள்.

**அளம்பில் தெற்கு,**
**முல்லைத்தீவு.**

தங்கள் பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி குணரத்தினம்



யாழ். சண்டிலிப்பாய் மேற்கைப் பிறப்பிடமாகவும் கனடா (Scarborough) ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி குணரத்தினம் 02.05.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 08.05.2016 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் (Markham) நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உற்வினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

(ஜே.1017)
(13,18,17)

**தொடர்பு:**
சண்டிலிப்பாய் - 024 791 1004
குமரன் - 001 647 2314259 (கனடா)
கண்ணன் - 001 416 5585 492 (கனடா)

தகவல்:
**இந்துமதி**
(சாந்தி -மகள்)

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
22 . 11 . 1947



மறைவு
14 . 05 . 2010

### அமரர் சங்கரப்பிள்ளை கந்தசாமி

(முன்னாள் முகாமையாளர் எரிபொருள் நிரப்பு நிலையம் கைதடி சந்தி)

**திதி: பூர்வபக்க பிரதமை (07.05.2016)**

பண்பான கணவராக பாசமிகு அப்பாவாக
அன்போடு எமை வளர்த்து ஆளாக்கிய எம் அன்பு அப்பாவே!
அவனியில் நாம் உயர்நிலைபெற நீங்கள்
கூறிய அறிவுரைகள் நித்தமும் எம் காதில் ஒலிக்கிறது அப்பா!
அன்பாய் வாழ்ந்த காலங்களை நீடிக்கவிடாமல் காலன்
உங்களை அழைத்தானோ - அப்பா
அன்புமுகம் மறைந்தாலும் அழியாது உங்கள் நினைவுகள் அப்பா!
ஆறு ஆண்டுகள் என்ன எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
அப்பா என்ற சொல்லை மறக்கமுடியாது - அப்பா!

உங்கள் நினைவுடன் வாழும்
**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

**[illegible]**
**கைதடி.**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

### அமரர் அன்னம்மா விசுவலிங்கம்



தோற்றம்
1928.12.28

மறைவு
2016.04.07

அமுதிலே அன்பைக் கலந்தூட்டி ஒழுக்கத்தை வாழ்வாக்கி எமையிங்கு
சுமுகமாய் வளர்ந்தோங்க வைத்தவரே! அம்மா! எங்கள் ஆருயிரே
சும்மா நீ இருந்ததில்லை சுகமான கதைபேசி பேரரையும் வளர்த்தெடுத்தீர்
அம்மா! உமையிழந்தோம் உயிரிழந்தோம்
யார் வந்து தீர்ப்பார் இவ்வலியை...

கடந்த 07.04.2016 வியாழக்கிழமை இறைபதம் அடைந்த எமது அன்புத் தாயாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (07.05.2016) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**9/3, முதலாம் குறுக்குத்தெரு,**
**கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் முறை தனயோகம் உங்களுக்கு மா?
திகதி 06.05.2016 | வெற்றி வாரம் 1975 | வர்ண சிவப்பு
சிம்மம்
வெற்றி இலக்கங்கள்
20 48 56 58
ஞாயிற்றுக்கிழமை வெற்றி வாய்ப்பு
ரூ.57,83,220/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு 1919

அடுத்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுப் பொதி
ரூ.7,95,59,640/-
008
2016-05-06
ஆங்கில எழுத்து மற்றும் வெற்றி இலக்கங்கள்
E 32 39 61 69
கோடிபதி
தொ.பே: 011 4 062 002 / 011 4 062 062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு: 011 4 824 824

31ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில் 01 . 07 . 1918
விண்ணில் 07 . 04 . 2016

அமரர் சுவாம்பிள்ளை சவரிமுத்து

அன்புடனும் பாசத்துடனும் எங்களை
சிறப்பாக வாழவைத்த அன்புத் தந்தையே!
நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து சென்று
முப்பத்தொரு நாள்கள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்றும் எம்
நெஞ்சை விட்டு அகலாது
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் நினைவில்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சில்லாலை,
பண்டத்தரிப்பு.

## வாக்கெடுப்புச் சர்ச்சை

காலை மீண்டும் ஏற்பட்ட பெரும் சர்ச்சையால் சபை அமளி துமளிப்பட்டது.

ஜே.வி.பி.யும் மகிந்த ஆதரவு அணியும் இந்த விடயத்தில் விடாப் பிடியுடன் வாக்குவாதங்களில் ஈடு பட்டதால், சபை நடவடிக்கை களை மு.ப.11.10 மணி யளவில் சில நிமிடங்களுக்கு ஒத்திவைத்தார் சபாநாயகர்.

நாடாளுமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை மு.ப.10.30 மணிக்கு சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்பு, மனு சமர்ப்பித்தல் ஆகியவை இடம்பெற்றதன் பின்னர், வாய்மூல விடைக்கான கேள்விச் சுற்றுக் குச் செல்லு முன் ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பினார், எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான ஜே.விபி.யின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பின ருமான அநுரகுமார திஸாநாயக்க.

பிரேரணைகள் மீதான வாக்கெடுப்பை நடத்தி எதை நிறைவேற்றுவது என்பது நாடாளுமன்றத்துக்கு உரிய முக்கிய பொறுப்பாகும். இந்த நிலையில் நேற்று (நேற்று முன்தினம்) நிறைவேற்றப்பட்ட பிரேரணை நிறைவேற்றப்பட்டதா? இல்லையா? என்பதைப் பார்க்க வேண்டும்.

பிரேரணைக்கு ஆதரவாக 33 வாக்குகளும் எதிராக 31 வாக்குகளும் அளிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட் டது. ஆனால் நாடாளுமன்றச் செயலாளர் காரியா லயத்தில் நாம் வாக்கெடுப்பு குறித்த வீடியோ ஆதா ரங்களை ஆராய்ந்து பார்த்தபோது, பிரேரணைக்கு ஆதரவாக 31 வாக்குகளும் எதிராக 31 வாக்குகளும் அளிக்கப்பட்டிருந்ததை அறிய முடிந்தது. அப்படி யானால் இந்தப் பிரேரணை நிறைவேற்றப்படவில்லை. மேலும் நேற்று (நேற்று முன்தினம்) சபை ஒத்தி வைக்கப்பட்டபோது, இன்று (நேற்று) காலை 9.30 மணிக்கே சபை கூடும் என சபை முதல்வர் அறி வித்தார். ஆனால் இன்று (நேற்று) காலை9.30 மணிக்கு சபை கூடவில்லை. 10.30 மணிக்கே கூடி யது. எனவே இவைகள் குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்று சபாநாயகரிடம் கோரிக்கை விடுக்கிறேன் - என்றார்.

### நிலையியற் கட்டளையில் அதிகாரமில்லை

நிலையியற் கட்டளைகளின் பிரகாரம் பிரேரணை மீது வாக்கெடுப்பு நடத்தி முடிவு அறிவிக்கப்பட்டால், அந்த விடயம் இத்துடன் முடிந்துவிடும். மீள் கணக் கெடுப்பு செய்ய நிலையியற் கட்டளையில் அதி காரம் இல்லை என்றார் சபை முதல்வர் லக்ஸ்மன் கிரியெல்ல.

மேலும் நேற்று சபை ஒத்திவைக் கப்பட்ட பின்னர் நாடாளுமன்ற செயலாளர் காரியாலயத்துக்குச் சென்ற எதிர்க்கட்சி உறுப்பினர் கள் செயலாளரைச் சுற்றி வளைத்து அச்சுறுத்தல் விடுப்பது தானா நாடாளுமன்ற சம்பிரதா யம்? என்று கேள்வி எழுப்பினார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த பொது எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ்குணவர்த்தன, அத்துடன், வாக்கெடுப்புச் சரி யான முறையில் இடம்பெற வில்லையாயின் மீண்டும் வாக்கெடுப் பைக் கோர நிலையியற் கட்டளை யில் அதிகாரம் உள்ளது. சபை முதல்வருக்கு இது தெரியாமல் இருக் கலாம். உறுப்பினர்கள் வாக் கெடுப்பை மீண்டும் கோரினால் அதற்கு செவிசாய்க்க வேண்டும். பிரேரணை நிறைவேற்றப்பட்டால் தான் அதற்கான சட்ட அதிகாரம் கிடைக்கும். நிறைவேற்றப்படா விட்டால் சம்பந்தப்பட்ட அமைச் சர் பதவி விலக வேண்டும். இல்லாவிட்டால் இந்தப் பிரேரணையை மீண்டும் அமைச்சரவைக்குச் சம ர்ப்பித்து அங்கீகாரம் பெற்று, நாடாளுமன்றத்தின் அனுமதி பெற நாடாளுமன்ற செயலாளருக்கு அனுப்ப வேண்டும் - என்றார்.

### செயலாளரைச் சுற்றிவளைத்த எதிர்க்கட்சியினர்

**இதன்போது கருத்து வெளியிட்ட ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாறசிங்க, நாடாளுமன்ற செயலாளர் காரியாலயத்தில் நேற்றிரவு (நேற்றுமுன்தினம்) 7 மணியளவில் வாக்கெடுப்புக் குறித்த வீடியோ ஆதாரம் ஆராயப் படுவதை அறிந்து, அரசின் பிரதிநிதி என்ற வகையில் நான் அங்கு சென்றேன்.**

அப்போது எதிர்க்கட்சியைச் சேர்ந்த சுமார் 45 பேர் செயலாளரைச் சுற்றிவளைத்து, அவரை அசௌக ரியத்துக்கு உள்ளாக்கி வாக்கெடுப்பை ஆராய்ந்த தைப் பார்த்தேன்.

தேர்தல்கள் ஆணையாளரை அசௌகரியத்துக்கு உள்ளாக்கி மகிந்த ராஜபக்ச தேர்தல் முடிவுகளைப் பெற்றதுபோல், இந்தச் சம்பவமும் எனக்குத் தெரிந் தது - என்றார். (த-வ-4)

## சோனியா

ஜனநாயகத்தைக் காப்போம் என்ற முழக்கத்துடன் காங்கிரஸ் கட்சியின் பேரணி நடத்தினர்.

பேரணியின் முடிவில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் பேசிய சோனியா காந்தி, கடந்த இரண்டு ஆண்டுகளாக மோடி அரசு எடுக்கும் நடவடிக்கைகள் நாட்டைச் சீர்குலைக் கும் வகையில் அமைந்துள்ளன. மோடி அரசை வழி நடத்திக் கொண்டிருக்கும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பி னரே நன்றாகக் கேளுங்கள், உங்களது எண்ணங் களை நாங்கள் நிறைவேற்ற விடமாட்டோம்.

காங்கிரஸ் கட்சி பற்றி குறைவாக மதிப்பிட வேண்டாம். ஜனநாயக விரோத சக்திகளுக்கு எதிராகக் காங்கிரஸ் கட்சி எப்போதுமே போராடும் எனப் பேசியுள்ளார்.

தொடர்ந்து நாடாளுமன்றம் நோக்கிப் பேரணியாகச் செல்ல முயன்றபோது, சோனியா காந்தி, ராகுல் காந்தி, மன்மோகன் சிங் உட்பட பலரும் கைது செய்யப்பட்டனர். எனினும் சுமார் 20 நிமிடங்களின் பின்னர் கைதானவர்கள் அனைவரும் விடுவிக்கப் பட்டனர். (த-வ)

## 12 அகதிகளை

கொக் கோஸ் தீவுக்குக் கடந்த திங்கட்கிழமை மரத்தி லான படகு சென்றடைந்தது. இந்தப் படகு கொக் கோஸ் தீவுக்கு 500 மீற்றர் தூரத்தில் நங்கூர மிட்டிருந்தது. இந்த நிலையில் அவர்கள் சுங்கப் பிரிவின் படகுக்குத் திடீரென நேற்றுமுன்தினம் மாற்றப்பட்டுள்ளனர். பின்பு, கொக்கோஸ் தீவின் மேற்குப் பகுதிக்குக் கொண்டு செல்லப்பட்டு, ஜன்னல் கண்ணாடிகள் ம றைக்கப்பட்ட பஸ் ஒன்றில் அவர்கள் ஏற்றிச் செல் லப்பட்டுள்ளனர். இதன் பின்னர் இரவோடு இரவாக விமானம் மூலம் கொழும்புக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளனர்.

இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்ட அகதிகள், நேற்று அதிகாலை 12.30 மணிக்கு கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர். இந்த நிலையில் அவர்கள் விசாரணைக்காக கைது செய்யப்பட்டுள் ளனர். (த-வ-5)

## புலனாய்வாளர்களென

அத்துடன், தாங்கள் அரச புலனாய்வாளர்கள் என் றும், வீட்டில் கைத்துப்பாக்கி உள்ளதாகத் தகவல் கிடைத்ததனாலேயே வந்துள்ளோம் என்றும் தெரி வித்துவிட்டு வீடு முழுவதும் தேடுதல் நடத்தியுள்ளனர்.

இவ்வாறு தேடி பெறுமதிமிக்க பொருள்கள் எதுவும் கிடைக்காத நிலையிலே, மகள் அணிந்திருந்த சங்கிலி உட்பட பணத்தை கொள்ளையடித்துச் சென் றுள்ளதாகப் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர். அத்தோடு கொள்ளையர்கள் கறுப்பு மேலங்கி அணிந்திருந்ததாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

இதன்போது ஒருபவுண் தங்கச் சங்கிலி, 48 ஆயிரம் ரூபா பணம், மற்றும் அலைபேசி ஆகியன கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகத் தமக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது எனக் கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் மேற்கொண்டபோது, கொள்ளையடித்த அலைபேசியை குறித்த வீட்டுக்கு வெளியே எறிந்துவிட்டுச் சென்றுள்ளார்கள் என்றும், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் கிளிநொச்சிப் பொலிஸார் கூறினர். (த-வ-21)

45ஆம் நாள் நினைவு
நன்றி ஆராதனை அழைப்பு

"நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்.
என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்"
(யோவான் 11:25)



அன்புடையீர்!
கடந்த 25.03.2016 வெள்ளிக்கிழமை
அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்த
எமது அன்புச் செல்வன்

நகுலேஸ்வரன் ரஜீந்திரன்
(பர்ணபா)

அவர்களின் நன்றி ஆராதனை நிகழ்வு இன்று (07.05.2016) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து எமது அன்புச் செல்வத்தின் நன்றி ஆராதனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வங்களாவடி,
மட்டுவில் கிழக்கு,
மட்டுவில்.
076 8857 688
குடும்பத்தினர்.

கணினி திருத்தம்
உங்கள் கணினி பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகிறோம்.
LK Network Computer Repair
158/1, Navalar Road jaffna
077 0222232,071 702 4116

நியத்த ஜய
வெற்றி வாரம் : 459
திகதி : 06.05.2016
வர்ணம் : நீலம்
வாசி தவாச
விசேட வெற்றி இலக்கம்
2409
எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஜக்பொட் பரிசுத்தொகை
ரூ1,00,00,000/=
வெற்றி இலக்கங்கள்
08 13 18 37
ஆங்கில எழுத்து
N
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும்.
Tel: 011 4 824 824
10.05.2016 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடாநாட்டு

பட வேண்டும். அதற்குச் சமூக அக்கறை கொண்ட புத்திஜீவிகள் மற்றும் சமூகப் பெரியோர்கள் முன்வருதல் வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கு மாகாணத்தில் குறிப்பாக யாழ்.குடாநாட்டில் அண்மைக் காலமாகக் குற்றச் செயல்கள் மிக மோசமாக –அதிகளவில் அதிகரித்துக் கொண்டு செல்வதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

கொலை, களவு, வாள்வெட்டு, குழுச் சண்டைகள், போதைப்பொருள் பாவனை, கலாசாரச் சீரழிவு போன்ற பல்வேறு விடயங்களால் யாழ். குடாநாட்டு மக்களின் வாழ்வியல் திட்டமிட்டு அழிக்கப்பட்டு வருகின்றதா என்கின்ற ஐயத்தை தோற்றுவித்துள்ளது.

இது தொடர்பில் விரைந்து செயற்பட வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். எனவே, இந்த விடயத்தில் புத்திஜீவிகள், விரிவுரையாளர்கள், ஊடகவியலாளர்கள், சட்டத்தரணிகள், கல்வியாளர்கள், தொழில்சார் வல்லுநர்கள் அனைவரும் ஒன்றிணைந்து உரிய தரப்பினர்களுக்கு அழுத்தங்களைக் கொடுக்க முன்வருதல் அவசியமாகும்.

மேலும், குற்றச்செயல்களைத் தடுப்பது என்பது ஒட்டுமொத்த சமூகத்தின் விழிப் புணர்விலேயே தங்கியுள்ளது. அக்கம் பக்கத்தில் இடம்பெறும்போது வெறுமனே பார்த்துக் கொண்டிராது, இது தொடர்பில் தமது எதிர்ப்பை வெளிக்காட்ட வேண்டிய பொறுப்பு சமூகத்துக்கு உள்ளது.

சட்டம், ஒழுங்கைப் பாதுகாப்பவர்கள், அரசியல்வாதிகள் போன்றோர் இது விடயத்தில் அக்கறையுடன் செயற்படுவதற்குத் தேவையான அழுத்தங்களைப் பிரயோகிக்க முன்வரவேண்டும்.

ஒரு காலத்தில் கல்வியே எமது சொத்து எனவும், கல்வியால் மிகச் சிறந்த பிரதேசமாகவும் திகழ்ந்த யாழ்ப்பாணம் இன்று கல்வியில் கீழ் நிலைக்குச் சென்றமைக்கு இந்தச் சமூகச் சீர்கேடுகளும் போதைப்பொருள் பாவனையுமே காரணமாக அமைந்திருக்கும் என்பதை எவரும் மறுப்பதற்கில்லை.

போர் இடம்பெற்ற காலத்தில் காணப்பட்ட அச்ச நிலையைவிட சமூகச் சீர்கேடுகள் நிகழ்கின்ற இன்றைய காலத்தில் அச்சமும் பீதியும் மக்களிடையே மிக உயர்வாகக் காணப்படுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இச்சமுதாய அவலநிலை உடனடியாக நிறுத்தப்படவேண்டும். அதற்குச் சமூக அக்கறை கொண்ட புத்திஜீவிகள் மற்றும் சமூகப் பெரியோர்கள் முன்வருதல் வேண்டும்–என்றுள்ளது. (த–வ)

## திடீர்க்

மட்டக்களப்பு மாவட்ட செயலகம் சென்று, அங்கு போராட்டக்காரர்கள் சார்பில் மனு கையளிக்கப்பட்டது. பின்னர் மட்டக்களப்பு பிரதிப் பொலிஸ்மா அதிபர் காரியாலயம் சென்று, அங்கும் போராட்டக்காரர்களால் மனு கையளிக்கப்பட்டது.

மீண்டும் ஒரு வெள்ளைவான் கடத்தல் காலத்தை ஏற்படுத்தி எங்களை அச்ச நிலைக்குத் தள்ளவேண்டாம் என்று போராட் டக்காரர்கள் அரசிடம் வலியுறுத்தினர். கடந்த காலத்தில் உறவுகளைப் பறி கொடுத்து வேதனைகளில் நாங்கள் வாடிக் கொண்டிருக்கும் நிலையில், எங்களுக்கு நேர்ந்த கதி இன்னொருவருக்கு ஏற்படக் கூடாது.

குற்றம் செய்தவர்களை விசாரணை செய்வதற்கும், தண்டனை வழங்குவதற்கும் சட்டம் இருக்கும்போது, சட்ட ரீதியற்ற முறையில் நடைபெறும் இவ்வாறான கடத்தல்களை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்தப் போராட்டத்தில் வடக்கு–கிழக்கில் இருந்து காணாமற்போனவர்களின் உறவுகள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இந்த நல்லாட்சி அரசின் காலத்தில் வெள்ளைவான் கலாசாரம் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (த–வ–4)

## வடக்கில்

மொத்தக் காணிகளின் விவரங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது. இதில் படையின ரின் முகாம் மற்றும் பிறபாவனையில் உள்ள நில விவரங்கள் , பயன்பாடுகள் இன்றி பாதுகாப்பின் நிமித்தம் கையகப்படுத் தியுள்ள காணிகளின் விவரம் என தனித் தனியாக தொகுக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் இடம் பெற்றது.

இவ்வாறு தொகுக்கப்படும் விவரங்களில் வெற்றுக் காணிகளாக உள்ளவற்றில் உடனடியாக விடுவிக்கப்படக் கூடியவை தொடர்பில் ஜனாதிபதிக்குச் பரிந்துரை செய்யப்படவுள்ளது.

நேற்றய சந்திப்பில் வடக்கின் ஓர் அரச அதிபர் தவிர்ந்த, ஏனைய அரச அதிபர்கள் , காணி மற்றும் மீள் குடியேற்றம் , பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்கள் , படை உயர் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (த–வ–101)

## ஜோசப்

தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், அது ஒரு சித்திரவதை முகாமாக இயங்குவதாகவும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு வருகின்றன.

இராணுவத்தினரால் சித்திரவதை செய்யப் பட்ட பலர், ஜோசப் இராணுவ முகாமில்தடுத்து வைக்கப்பட்டிருந்தனர் என, ஐ.நா. நிபுணர் குழுவில் இடம்பெற்றிருந்த யஸ்மின் சூகாவும் குற்றம்சாட்டியிருந்தார்.

இந்த நிலையிலேயே, இலங்கை வந்துள்ள சித்திரவதைகள் மற்றும் ஏனைய கொடூரமான மனிதநேயமற்ற முறையில் நடத்தப் படுதல் மற்றும் தண்டிக்கப்படுதல் தொடர்பான சிறப்பு அறிக்கையாளர், ஜுவான் மெண்டஸ், கடந்த புதன்கிழமை ஜோசப் இரா ணுவ முகாமில் சோதனைகளை மேற்கொண்டுள்ளார்.

ஐ.நா.வின் சிறப்பு அறிக்கையாளரான ஜுவான் மெண்டஸ் கடந்த 29 ஆம் திகதி இலங்கை வந்தமை குறிப்பிடத்தக்கது. (த–வ–5)

## பூநகரியில்

சுவீகரிக்கப்படவுள்ளதாக, குறித்த காணி உரிமையாளர்களுக்கு நில அளவைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

கிளிநொச்சி, பூநகரிப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பரமன் கிராய் வெட்டுக் காட்டுப் பகுதியில் உள்ள பொது மக்கள் சிலருக்குச் சொந்தமான காணிகளை அபகரிக்கும் முயற்சிகள் ஏற்கனவே இரண்டு முறை இடம்பெற்ற போது, அரசியல் தலைவர்கள்மற்றும் காணி உரிமையாளர்களின் எதிர்ப்பால், அந்த முயற்சிகைவிடப் பட்டது.

எனினும் மீண்டும் குறித்த காணிகளை அபகரிப்பதற்காகக் கடிதம் மூலம் அறிவிக் கப்பட்டுள்ளமை தமக்கு விசனத்தை ஏற்படுத்தியுள்ளதாகக் காணி உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அண்மைக் காலங்களில் வடக்கின் பல பகுதிகளில் பொதுமக்களின் சொந்தக் காணிகள் இராணுவத்தின் தேவைக்காகச் சுவீகரிக் கப்படும் நிலையில், பூநகரியில் வெட்டுக் காட்டுப் பகுதியில் உள்ள கைலாயர் தோட்டத் தனியார் காணியானது 15ஆம் விஜயபாகு காலாட்படையினருக்கு வழங்கப்படவுள்ளதாக அரச நில அளவையாளர் அறிவித்துள்ளார்.

எனினும் இந்த முயற்சிக்குத் தாம் ஒரு போதுமே சம்மதிக்கப் போவதில்லை என்று மக்கள் கூறுகின்றனர்.

இந்தக் காணி அபகரிப்பு தொடர்பாகப் பூநகரிப் பிரதேச செயலாளருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, குறித்த விடயத்தை உறுதிப்படுத்தினார். அத்துடன் காணிச் சுவீகரிப்பு 2010 தொடக்கம் இடம்பெற்று வருகின்றது. அந்த அடிப்படையிலேயே இது இடம்பெறுகின்றது. கிராம அபிவிருத்தி உத்தியோகத்தருக்கும் காணி உரிமையாளருக்கும் அறிவித்து அவர்களை வரவழைத்தே, நில அளவை திணைக்களத்தினர் காணியை அளவிடுவார்கள்–என்றார். (த–வ–ஐ–21–ரி3)

## வாக்கெடுப்பு மோசடி

நியமித்தார்.

இந்தக் குழுவின் அறிக்கை நாடாளுமன்றத்தின் அடுத்த அமர்வுக்கு முன்னதாக கையளிக்கப்படும் என்றும் சபாநாயகர் அறிவித்தார்.

11அமைச்சுகளுக்கான 55 மில்லியன் ரூபா குறைநிரப்புப் பிரேரணை நேற்றுமுன் தினம் 2 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டதாக, அப்போது சபைக்குத் தலைமை தாங்கிய நாடாளுமன்ற உறுப்பினர் லக்சி ஜயவர்த்தன அறிவித்தார். இதன் போது பெரும் சர்ச்சைக்கு மத்தியில் சபை ஒத்திவைக்கப்பட்டது.

இந்த நிலையில், நேற்று வெள்ளிக்கிழமை மு.ப.10.30 மணிக்குக் கூடிய சபை அமர்வில், ஜே.வி.பி. மற்றும் மகிந்த அணியினர் கேள்வி எழுப்பியதால் சர்ச்சை எழுந்தது.


பிரேரணை மீது நடத்தப்பட்ட வாக்கெடுப்பும், அறிவிக்கப் பட்ட முடிவும் தவறானது எனக் கூறி வாதங்களில் ஈடுபட்டனர். இதனால் சபையில் ஏற்பட்ட குழப்ப நிலையை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில், அறிவிப் பொன்றை விடுத்த சபாநாயகர் கரு ஜயசூரிய,

இந்தச் சம்பவம் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ச, நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ச, அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நால்வர் கொண்ட குழுவை நியமிக்கின்றேன். இந்தக் குழுவின் அறிக்கை கிடைத்த பின்னர் தீர்மானம் எடுக்கப்படும் என்று கூறி, மு.ப 11.10 மணியளவில் சில நிமிடங்களுக்கு சபை அமர்வை ஒத்திவைத்தார்.

இதையடுத்து, பிற்பகல் 12.10 மணியளவில் சபை மீண்டும் கூடியது. இதன்போது மீண்டும் அறிவிப்பொன்றை விடுத்த சபாநாயகர், விசாரணைகளுக்காக நியமிக்கப்பட்ட நால்வர் அடங்கிய குழுவின் அறிக்கை நாடாளுமன்றத்தின் அடுத்த அமர்வுக்கு முன்னதாக கையளிக்கப்படும். அதன் பின்னர் இது குறித்து கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் - என்றார். (த–வ–4)

## மரண அறிவித்தல்கள்

### தம்பிப்பிள்ளை சரவணஉற்பவம்



மலர்வு 23 . 11 . 1942

உதிர்வு 05 . 05 . 2016

சுழிபுரம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் Holland ஐ வசிப்பிட மாகவும் தற்போது சுழிபுரத்தில் வசித்துவந்தவருமாகிய தம்பிப்பிள்ளை சரவண உற்பவம் கடந்த (05.05.2016) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை நாசகம் தம்பதியரின் அன்பு மகனும், நாயன்மார்கட்டைச் சேர்ந்த நடராசா தெய்வானைப் பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், பாலசுந்தரனின் பாசமிகு தந்தையும், சோபனாவின் அருமை மாமனும், புனிதவதியார் (பிரான்ஸ்), காலஞ்சென்ற நரசிங்கமுனை, உருத்திராட்சி, சுபத்திராதேவி, ஆழ்வானாட்சிப்பிள்ளை (கனடா), காலஞ்சென்ற சந்ததியார், ராசிந்தா ஆகியோரின் அன்பு சகோதரனும், தம்பியப்பா, மகேஸ்வரி, கதிர்காமநாதன், முத் துக்குமாரு, நடராசா, கனகராசா, சண்முகலிங்கம் (பிரான்ஸ்), விக்னேஸ்வரி (பிரான்ஸ்), சந்திரேஸ்வரி (பிரான்ஸ்), மகேசலிங்கம் (பிரான்ஸ்), கணேசலிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும், சத்தியானந்தராணி, ராஜசேகரம், புகனேந்திரன் (ராதா), கலைச்செல்வி (செல்வி), பாமினி ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.05.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 09.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுழிபுரம் திருவடி நிலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **ச. பாலசுந்தரன் (மகன்).**
**077 703 5029**

## மரண அறிவித்தல்கள்

### J.A.X. பிரான்சிஸ்

(இளைப்பாறிய அதிபர்–சுதுமலை அ.த.க பாடசாலை)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் சில்லாலையை வசிப்பிடமாகவும் கொண்ட J.A.X. பிரான்சிஸ் கடந்த 05.05.2016 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வில்பிறெட் பிரான்சிஸ் - மேரி இராசமணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அல்பிறட்போல் -மேரிசிசிலின் தம்பதியரின் அன்பு மருமகனும் அலோசியா இராஜேஸ்வரியின்அன்புக் கணவருமாவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று (07.05.2016) சனிக்கிழமை அவரது இல்லத்தில் இருந்து பிற்பகல் 3.00 மணிக்க கதிரை மாதா ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி நிறைவேற்றி பின்னர் கதிரை மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்.**
**071 415 0395, 077 150 3637**

### செல்வன் சேதுகாவலர் பானுகோபன்

(பழைய மாணவன் சென். ஜோன்ஸ் கல்லூரி)




யாழ்ப்பாணம் சாவகச்சேரி, ஸ்ரேசன் வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சேதுகாவலர் பானுகோபன் கடந்த (05.05.2016) வியாழக்கிழமை அகாலமரணமடை ந்தார்.

அன்னார் சேதுகாவலர் (மாவட்ட முகாமையாளர், இலங்கை வங்கி,யாழ்ப்பாணம்), ஞானமலர் தம்பதியரின் அருமைப் புதல்வனும், சோபிகா (லண்டன்), சுரேக்கா (லண்டன்), மதுரிக்கா (யாழ்ப்பாணப்பல் கலைக்கழகம்), கோபிநந்தா (விவசாயபீடம், யாழ்ப்பாணப் பல் கலைக் கழகம்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சிவசுதன், முகுந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிவதன்யா, கேசிகன் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.05. 2016) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 02.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியை களுக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத் துக்கு எடுத்துச்செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**கோ. சேதுகாவலர் (தந்தை)**
(மாவட்ட முகாமையாளர், இலங்கை வங்கி)

### தாமோதிரம்பிள்ளை நாகலிங்கம்



உடுப்பிட்டியைப் பிறப்பிட மாகவும் ஏழாலை மேற்கை வசிப்பிட மாகவும் கொண்ட தாமோதிரம் பிள்ளை நாகலிங்கம் நேற்று (06. 05.2016) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதிரம்பிள்ளை இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், கந்தையா, வேலானந்தம், காலஞ்சென்ற நேசமணி மற்றும் தங்கமணி, சொர்ணமலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சத்தியபாமாவின் அன்புக் கணவரும், சத்தியா, சதத்தியராஜ் (கட்டார்) ஆகியோரின் அன்புத் தந் தையும், இதயச்சந்திரன், பிரதீபன் (கனடா), மேனகா, பிரசாத், பிரகாஷ் (லண்டன்), நடேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு மாமனும், அபிவர்மன், சஜிவர்மன், சஞ்சனா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.05. 2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## பிரதேச செயலகங்களுக்கிடையிலான மேசைப்பந்தாட்டமும் பூப்பந்தாட்டமும்

கரணவாய், மே 7

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுமதியுடன் யாழ். மாவட்டச் செயலக விளையாட்டுப் பிரிவினர் நடத்தும் பிரதேச செயலகங்களின் ஆண்கள் பிரிவினருக்கான மேசைப்பந்தாட்டமும் பெண்களுக் கான பூப் பந்தாட்டமும் இன்று சனிக்கிழமை காலை 8 மணிமுதல் இடம்பெறவுள்ளன.

திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ள ஆண்களுக்கான பூப்பந்தாட்டத் தொடரில் சாவகச்சேரி பிரதேச செயலக அணியை எதிர்த்து கரவெட்டி பிரதேச செயலக அணியும் வேலணை பிரதேச செயலக அணியை எதிர்த்து மருதங்கேணி பிரதேச செயலக அணியும் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியை எதிர்த்து பருத்தித்துறை பிரதேச செயலக அணியும் சங்கானை பிரதேச செயலக அணியை எதிர்த்து யாழ். பிரதேச செயலக அணியும் மோதவுள்ளன.

அரியாலை விளையாட்டுக்க கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள பெண்களுக்கான பூப்பந்தாட்டத் தொடரில் சங்கானை பிரதேச செயலக அணியை எதிர்த்து வேலணை பிரதேச செயலக அணியும் கரவெட்டி பிரதேச செயலக அணியை எதிர்த்து சாவகச்சேரி பிரதேச செயலக அணியும் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியும் யாழ். பிரதேச செயலக அணியை எதிர்த்து நல்லூர் பிரதேச செயலக அணியும் மோதவுள்ளன. (ம-23-108)

## அண்ணா வி.கழகத்தின் இறுதியாட்டங்கள் நாளை

யாழ்ப்பாணம், மே 7

நாரந்தனை அண்ணா விளையாட்டுக் கழகம் நடத்திய கால்பந்துத் தொடரினதும், துடுப்பாட்டத் தொடரினதும் இறுதியாட்டங்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை நாரந்தனை அண்ணா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளன.

பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும் துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் வேலணை செட்டிபுலம் ஐயனார் அணியை எதிர்த்து புளியங்கூடல் மகாமாரி அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4 மணிக்கு இடம்பெறும் கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் புங் குடுதீவு நசரேத் அணியை எதிர்த்து மெலிஞ்சி முனை இருதயராஜா அணி மோதவுள்ளது. (ம-23)



## பந்துவீச்சாளர்களின் மிரட்டலால் குஜராத்தை வென்றது ஹைதராபாத்

ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஹைதராபாத், குஜராத் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் 5 இலக்குகளால் வெற்றிபெற்றது ஹைதராபாத்.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஹைதராபாத் முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. குஜராத்தின் ஆரம்ப வீரர்களாக சிமித் மற்றும் மக்கலம். ஹைதராபாத் வேகப் பந்து வீச்சாளர்கள் நேற்று மிரட்டியெடுத்தனர். ஆடுகளத்தில் ஈரப்பதம் இருந்தமையும் ஈசல்கள், மழைப்பூச்சிகள் அளவுக்கு அதிகமாகப் பறந்து திரிந்தமையும் பந்துவீச்சாளர்களின் கைகள் ஓங்க சில காரணங்களாகச் சொல்லாம். முதல் பந்துப்பரிமாற்றத்தில் ஓர் ஓட்டத்தைத்தானும் கொடுக்கவில்லை புவனேஸ் குமார். நெக்ரா வீசிய இரண்டாவது பந்துப்பரிமாற்றமும் அதே நிலமை தான். இரு பந்துப்பரிமாற்றங்கள் நிறைவடைந்த பிற்பாடும் குஜராத் அணியின் ஓட்டங்கள் ஆரம்பமாகவில்லை. சிமித்தை வெளியேற்றினார் புவனேஸ்குமார். ஆட்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்த அதிரடியைக் கையிலெடுத்தார் ரெய்னா. சிக்சர்கள், பவுண்டரிகளை அடுத்தடுத்து பதிவுசெய்தார். அவர் 10 பந்துகளை எதிர்கொண்டு 20 ஓட்டங்களை எடுத்திருந்த வேளையில் புவனேஸ் குமாரிடம் வீழ்ந்தார். ஓர் முனையில் இலக்குச் சரிவு மறுமுனையில் பின்ஞ்சின் நிதான ஆட்டம் என நகர்ந்து கொண்டிருந்தது குஜராத்தின் இன்னிங்ஸ். 17.1 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 100 ஓட்டங்கள் எட்டப்பட்டது. 42 பந்தில் அரைச்சதம் கடந்தார் பின்ஞ். முடிவில் குஜராத் 126-6. 51 ஓட்டங்களுடன் பின்ஞ் இறுதிவரை களத்திலிருந்தார்.

பந்துவீச்சில் ஹைதராபாத்தின் சார்பாக ரகுமான், புவனேஸ்குமார் இருவரும் தலா 2 இலக்குகளையும், சரண், ஹென்றிக்ஸ் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு களமிறங்கிய ஹைதராபாத்துக்கு இலக்கை எட்டக்கூடிய வகையிலான ஆரம்பம் அமைந்தது. அணியின் ஓட்டம் 26 ஆக இருந்தபோது 24 ஓட்டங்களுடன் வீழ்ந்தார் வோர்ணர். வில்லியம்சனை வெளியேற்றினார் பிரவீன்குமார். ஆடுகளம் முழுவதும் பந்துவீச்சுக்கு சாதகமாக அமைந்தமையால் மெல்லமெல்ல நகர்ந்தது ஹைதராபாத்தின் இன்னிங்ஸ். குறிப்பாக பிரவீன் குமார், குல்கர்னி இருவரதும் பந்துப்பரிமாற்றங்கள் சிறப்பாக அமைந்தன. பெரும் போராட்டத்தின் மத்தியிலேயே அவ்வப்போது பவுண்டரிகள் பதிவாகின. ஹென்றிக்ஸ் ஆட்டமிழக்க மீண்டும் களத்தில் யுவராஜ். பத்துப் பந்துப் பரிமாற்றங்களின் நிறைவில் ஹைதராபாத் 57-3. ஐந்தே ஓட்டங்களுடன் யுவராஜை இருக்கைக்குத் திருப்பினார் குல்கர்னி. பந்துகள் வீணடிக்கப்படுவதும் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் பவுண்டரி பதிவாகுவதுமாக நகர்ந்தது ஹைதராபாத்தின் இன்னிங்ஸ். தவான் களத்தில் நின்றமையால் ஹைதராபாத்துக்கான வாய்ப்பு அதிகமிருந்தது. முடிவில் 6 பந்துகள் மீதமிருக்க குஜராத்தை வென்றது ஹைதராபாத். தவான் 47 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் குஜராத்தின் சார்பாக குல்கர்னி, பிராவோ இருவரும் தலா இரு இலக்கு களையும், பிரவீன் குமார் ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (ம)

## விண்மீன் - யங்ஹென்றிஸ் இறுதியில் நாளை மோதல்

யாழ்ப்பாணம், மே 7

புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நாளை இடம் பெறும் இறுதியாட்டத்தில் யங் ஹென்றிஸ் அணியை எதிர்த்து விண்மீன் அணி மோதவுள்ளது.

கலைமதி விளையாட்டுக்கழக மைதானத்தில் மாலை 4 மணிக்கு இடம்பெறும் இறுதியாட்ட நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வலிகாமம் கிழக்கு பிரதேச சபை செயலளர் யு.ஜெலீபன் கலந்து கொள்ளவுள்ளார். (ம-23)

## கபடி, வலைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், மே 7

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான இருபாலாருக்குமான கபடிமற்றும் இருபாலாருக்குமான வலைப்பந்தாட்டம் ஆகியன இன்று சனிக்கிழமை அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் காலை 9 மணி தொடக்கம் இடம் பெறவுள்ளன. (ம-23)

## சம்பியனானது சென்.அன்ரனிஸ்

யாழ். பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கால் பந்தாட்டத் தொடரில் பாசையூர் சென்.அன்ரனிஸ் அணி சம்பியனானது.

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் பாசையூர் சென்.அன்ரனிஸ் அணி, ஜெட் லைனர்ஸ் அணியை 4:3 என்ற கோல் கணக்கில் சமநிலைத் தவிர்ப்பில் வைத்து வீழ்த்தியது. (ம-23)

## மரண அறிவித்தல்

### திருமதி பாறுவதிப்பிள்ளை தம்பிப்பிள்ளை



தங்கோடை காரைநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாறுவதிப்பிள்ளை தம்பிப்பிள்ளை நேற்று (06.05.2016) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - சின்னக்குட்டி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற முருகேசு சீதேவிப்பிள்ளை தம்பதி யரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நூவான்வெல வர்த்தகர் தம்பிப்பிள்ளையின் அன்பு மனைவியும், சண்முகராஜா, புஸ்பலீலாவதி, மாணிக்கவாசகர் (பிரான்ஸ்), தவராணி, வசந்தகுமாரி ஆகியோரின் அன்புத் தாயாரும், விக்னேஸ்வரன், இரத்தினசிங்கம், தையல்நாயகி, உருத்திரசிங்கம் . ஜெயந்தி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், தயாளினி, தயாபரன், அருளினி, அருட்செல்வி, பிரியதர்ஷன், பிரியதர்ஷினி, ரவிப்பிரியா, ரவி சங்கர், விக்னா, வித்தியா, கணேஸ்வரி, காலஞ்சென்ற பிரதீபன், கோபி நாத், அனுஷா, அரவிந்தன், பிருந்தா (பிரான்ஸ்), ஆதவன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான கந்தையா, சோமசுந்தரம், வள்ளிப்பிள்ளை, பொன்னம்பலம் மற்றும் மார்க்கண்டு, சதாசிவம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான செல்லையா, தங்கம்மா, பொன்னம்மா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.05.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்..

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தங்கோடை, காரைநகர். குடும்பத்தினர்.

## வடக்கில் இன்று மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை பல இடங்களிலும் மின் சாரம் தடைப்பட்டிருக்கும் என்று வடக்கு மாகாண மின் வழங்கல் கட்டுப் பாட்டு நிலைய மின் பொறியியலா ளர் தெரிவித் துள்ளார். அதன்படி, யாழ். பிர தேசத்தில் பருத்தித்துறை சி.ரி.பி. டிப்போ, மணற்காடு, வலி கண்டி, வலி கண்டி நீர்ப்பாசனம், குடத்தனை, நடுக்குடத்தனை, அம்பன், அம்பன் வைத்தியசாலை, மயிலங்காடு, குப்பிளான், அம்பலவாணர் வீதி உடுவில், ஆர்க்லேன், ஸ்ரீலங்கா பாடசாலை வீதி, இராமலிங்க வீதி, சோம ணான் தோட்டம், தாவடி பிரதேசம், கலிகை பிரதே சம், தாமரைக் குளத்தடி பிரதேசம் ஆகிய இடங்களிலும், வவுனியா பிரதேசத்தில், சாம்பல் தோட்டம் கிராமம், வெளிக்குளம் பிரதேசம், வவுனியா நகரம், பஸார் வீதி, 1 ஆம், 2 ஆம் குறுக்குத் தெருக்கள், கந்த சாமி கோவில் வீதி, சூசைப் பிள்ளை யார் குளம், பூங்கா வீதி, ஓமந்தையிலிருந்து புளியங்குளம் வரை, மடுக்கந்தவிலிருந்து குடாகச்சக் கொடிய வரை, ரி.எம். எம். கல்லுடைக்கும் ஆலை, கொம்பு வைத்த குளம் இராணுவமுகாம், இலங்கை வங்கி, வவுனியா வைத்தியசாலை, தேசிய சேமிப்பு வங்கி, மக்கள் வங்கி, இலங்கை தொலைத் தொடர்பு நிலையம், கச்சேரியடி நீர்ப்பாசன சபை ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும். அவ்வாறே நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ். பிரதேசத்தில் அம் பலவாணர் வீதி, ஆர்க்லேன், சிறிலங்கா பாடசாலை வீதி, இராமலிங்கம் வீதி, சோமணான் தோட் டம், சாரையடி, கிராமக் கோடு, பருத் தித்துறை நகரம், வி.எம்.வீதி, கல்லூரி வீதி, தம்பசிட்டி, சாளம்பை, மாலுசந்தி ஒரு பகுதி, குமுளடி ஒரு பகுதி, பாரதிதாசன் பிரதேசம், யாழ். நுண்கலைப்பீடம், மருதனார் மடம், ரொட்டியாலடி, பெரிய மதவடி, இலங்கை வங்கி முன் ஒழுங்கை, சங்குவேலி, உடுவில், பிப்பிலி, கட்டுடை, மானிப்பாய், இணுவில், உப்புமடம், சுதுமலை, தாவடி, பத்தானை, மாப்பியன், மானிப்பாய் பூட் சிற்றி, மானிப்பாய் வைத்தியசாலை, கொக்குவில் சந்தி, சம்பியன் லேன், ஆடியபாதம் வீதி, மருத்துவபீடப் பிரதேசம், குளப்பிட்டி, ஆனைக் கோட்டை வீதி, ஆனைக்கோட்டைச் சந்தி, யாழ். வீதி (மானிப்பாய்), ஆறுகால் மடம், கூழாவடி, ஆனைக் கோட்டை வி.சி., நவாலி, மூத்த விநாயகர் கோவிலடி, சென். பீற்றர்ஸ் தேவாலயப் பிரதேசம், அர சடி, அட்டகிரி, வேலக்கை, கோம் பயன், பூநாறிமடம், சிவப்பிரகா சம்வீதி, தலையாழி, கே. கே. எஸ். வீதி, கொக்குவில் சந்தியிலிருந்து நாச்சிமார் கோவிலடி வரை, இரா மநாதன் வீதியில் ஒரு பகுதி, காரைக்காடு, சொர்ணவடலி, மணி யர்பதி, மானிப்பாய் வீதியில் கோம் பயனிலிருந்து ஓட்டுமடம் சந்திவரை, சீரணி, சண்டிலிப்பாய், ஆலங்குளாய், கந்தரோடை, அளவெட்டி, மாசியப்பிட்டி, உடுவில் மருதனார் மடம் - யாழ். நுண்கலைப்பீடம் ஆகிய இடங்களிலும்,

வவுனியா பிரதேசத்தில் குருமன் காடு பிள்ளையார் கோயில் பிர தேசம், சாம்பல்தோட்டம் கிராமம், வவுனியா நகரம், பஸார் வீதி, 1 ஆம் 2 ஆம் குறுக்குத்தெருக்கள், கந்தசாமி கோயில் வீதி, சூசைப் பிள்ளையார் குளம், பூங்கா வீதி, மடுக்கந்தவிலிருந்து குடாகச்சக் கொடிய வரை, மதவுவைத்த குளம், மூன்றுமுறிப்பு, தவசிக்குளம், குட்செட்றோட், தோணிக்கல், பண்டாரிக்குளம், ஈரப்பெரிய குளம், வேரகம, கற்குண்டமடு, அலுத்கம, அழகல்ல, பகல அழுத்வத்த, புபுதுகம, குருந்துப்பிட்டிய, பூ - ஓயா படை முகாம், ஈரப்பெரிய குளம் படை முகாம், ஈரப்பெரிய குளம் எஸ்.எல். பி.சி., கார்கிள்ஸ் பூட்சிற்றி, மண்டெரின் ஆடைத் தொழிற்சாலை, கௌலூம் ஆடைத்தொழிற் சாலை, குளோப் அரிசி ஆலை, 2வி.ஐ.ஆர்., படை முகாம், ரி.எம். எம்கல்லுடைக்கும் ஆலை, இலங்கை வங்கி, வவுனியா வைத்தியசாலை, தேசிய சேமிப்பு வங்கி, மக்கள் வங்கி, இலங்கை தொலைத் தொடர்பு நிலையம், கச்சேரியடி நீர்ப்பாசன சபை ஆகிய இடங்களிலும்,

மன்னார் பிரதேசத்தில் அரிப்பு, சவேரியார் குளம், வெள்ளிமலை, சி.இ.சி.பி. ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டி ருக்கும். என வடமாகாண மின் வழங்கல் கட்டுப் பாட்டு நிலைய மின் பொறியியலாளர் தெரிவித்துள்ளார். (கு-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மோதல்கள்

கரணவாய், மே 7

**கழுகுகள் வி.க. தொடர்**

நெற்கொழுகழுகுகள் விளையாட்டு கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடர், குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. அதில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் கொற்றாவத்தை சிவானந்தா அணியை எதிர்த்து தீவகம் மெலிஞ்சிமுனை இருதயராஜா அணியும் மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கிளிநொச்சி சென்.மேரிஸ் அணியை எதிர்த்து வவுனியா மருத நிலா அணியும் மோதவுள்ளன.

**இமையாணன் மத்தியின் தொடர்**

இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தி வரும் கால்பந்தாட்டத் தொடரில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் திக்கம் இளைஞர் அணியை எதிர்த்து புத்தூர் சரஸ்வதி அணியும் பிற்பகல் 4.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் அல்வாய் மனோகரா அணியை எதிர்த்து யாழ். சென்.நீக்கிலஸ் அணியும் மோதவுள்ளன.

**இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் தொடர்**

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்படும் பிரிவு ஒன்றிற்கான தொடரின் ஆட்டம் ஒன்று இன்று சனிக்கிழமை அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி மைதானத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. இதில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணியை எதிர்த்து கொழும்பு மொரகாஸ் முல்ல அணி மோதவுள்ளது.

**நாமகள் வி.கழகத் தொடர்**

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் நாமகள் கிண்ணத்துக்கான துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தெல்லிப்பழை கட்டுவன்புலம் மகா வித்தியாலய மைதானத்தில் இடம் பெறவுள்ளது. இறுதியாட்டத்தில் அளவெட்டி ஞானவைரவர் அணியை எதிர்த்து அளவெட்டி விநாயகர் அணி மோதவுள்ளது.

(ம-23-108)



# "நியூசிலாந்து அணிக்கு நஞ்சூட்டப்பட்டது" சர்ச்சைகள் நிரம்பிய றக்பி உலகக்கிண்ணம்

1995ஆம் ஆண்டு இடம்பெற்ற றக்பி உலகக் கிண்ண இறுதியாட்டத்துக்கு முன்னதாக, நியூசிலாந்து அணி வீரர்களுக்கு நஞ்சூட்டப்பட்டதாக, குறித்த உலகக்கிண்ணத் தொடருக்கான நியூசிலாந்து அணிக்கு பாதுகாப்பு அதிகாரியாக செயற்பட்டவரும், நெல்சன் மண்டேலாவின் முன்னாள் மெய்ப்பாதுகாவலருமான ரோறி ஸ்ரெயின் தெரிவித்துள்ளார்.

குறித்த ஆட்டம் தொடர்பான சர்ச்சைகள் தொடர்ந்து வரும் நிலையில் குறித்த அதிகாரியின் கருத்தால் சர்ச்சைகள் இன்னும் வலுப்பெற ஆரம்பித்துள்ளன. ஜோனா லொமு தலைமையிலான நியூசிலாந்து அணி, அதிக வெற்றிவாய்ப்புகளைக் கொண்ட அணியாகக் களமிறங்கியிருந்தது. ஆனால், தென்னாபிரிக்காவிடம் 12:15 என்ற புள்ளி களின் அடிப்படையில் தோல்வியடைந்திருந் தது. இந்த ஆட்டத்துக்கு 48 மணிநேரங்கள் முன்னதாக நியூசிலாந்து அணி வீரர்களில் பலர் உணவு நஞ்சானதன் காரணமாகப் பாதிக்கப்பட்டதால் முழுமையான திறமையை வெளிப்படுத்த முடியாமல் போயிருந்ததாக மருத்துவ அறிக்கையில் தெரிய வந்தது. இதனால் உணவு நஞ்சானமைக்கான காரணங்கள் குறித்து தொடர்ச்சியாக விவாதங்கள் இடம் பெற்று வருகின்றன.

இந்த நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள ரோறி ஸ்ரெய்ன் - நான் பார்த்ததை நான் அறிவேன். மிக மிக நோய்வாய்ப்பட்டு வீரர்கள் குழாமொன்று நிலத்தில் காணப்பட்டனர். அது உணவால் ஏற்பட்ட நஞ்சூட்டல் அன்று. மாறாக, அது கோப்பி அல்லது தேநீர் மூலமாகவே ஏற்படுத்தப்பட்டது. சிலவேளைகளில் குடிதண்ணீரால் கூட இருக்கலாம். குறித்த ஆட்டத்தில் நியூசிலாந்து அணி வெற்றிபெறுமென எதிர்பார்க்கப்பட்டதால் பணத்தை வெல்வதற்காக, சூதாடிகளால் இது மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் - என்றார். (ம)

## விதுசனின் வேகத்தில் சுருண்டது வித்தியானந்தா

முல்லைத்தீவு, மே 7

நண்பர்களின் சமர் என வர்ணிக்கப்படும் முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரி அணிக்கும் யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய (ஸ்ரான்லிக் கல்லூரி) அணிக்கும் இடையிலான துடுப்பாட்டத் தொடரின் முதல் நாளான நேற்றையதினம் முதலில் துடுப்பெடுத்தாடிய வித்தியானந்தக் கல்லூரி 94 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் பறிகொடுத்தது.

வித்தியானந்தக் கல்லூரி மைதானத்தில் ஆட்டம் நடைபெறுகிறது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஸ்ரான்லிக் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய வித்தியானந்தக் கல்லூரி அணி 94 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் பறிகொடுத்தது. அதிகபட்சமாக பவின்சன் 26 ஓட்டங்களையும், அஞ்சயன் 14 ஓட்டங்களையும் பெற்றனர். இவர்கள் இருவரையும் தவிர வேறெந்த வீரர்களும் ஒற்றையிலக்கத்தைத் தாண்டவில்லை. பந்துவீச்சில் ஸ்ரான்லிக் கல்லூரியின் சார்பில் விதுசன் 7 இலக்குகளையும், சுஜீவன், டிலக்சன், லோறன்ஸ் மூவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

ஆட்டத்தின் இரண்டாம் நாளும் இறுதி நாளும் இன்றாகும்.

(ம-102-21)

## ஆதிசக்தி, அண்ணா சிலையடி அணிகள் முன்னேறின கழுகுகளின் கால்பந்தாட்டத்தில்

கரணவாய், மே 7

கழுகுகள் வி.கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஆட்டங்களில் வல்வை ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் மற் றும் அண்ணா சிலையடி இளைஞர் விளையாட்டு கழகம் என்பன வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்களுக்கு முன்னேற்றம் கண்டுள்ளன.

**ஆதிசக்தி - கண்ணகி**

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக் கழகமும் வல்வை ஆதிசக்தி விளையாட்டு கழகமும் மோதின. ஆட்டத்தின் 17 ஆவது நிமிடத்தில் ஆதிசக்தியின் நிமலதாஸ் முதலாவது கோலைப் பதிவுசெய்தார். 22 ஆவது நிமிடத்தில் ஆதிசக்தியின் மருன் இரண்டாவது கோலைப் பதிவுசெய்ய அந்த அணியின் வெற்றி கிட்டத்தட்ட உறுதி செய்யப்பட்டது. இரண்டாம் பாதியின் 4 ஆவது மற்றும் 17 ஆவது நிமிடங்களில் கௌரி இரண்டு கோல்களைப் பதிவுசெய்ய முடிவில் 4:0 என்ற கோல் கணக்கில் வல்வை ஆதிசக்தி விளையாட்டு கழகம் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

**அண்ணா சிலைய்டி - யுத்**

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் உடுப்பிட்டி யுத் விளையாட்டுக் கழகமும் அண்ணா சிலையடி இளைஞர் விளையாட்டுக் கழகமும் மோதின. இரு பாதிகளிலும் கோல்களைப் பதிவுசெய்யமுடியாது போக ஆட்டம் சமநிலை கண்டது. இதனால் வெற்றியாளரைத் தெரிவு செய்வதற்காக வழங்கப்பட்ட சமனிலை தவிர்ப்பு உதையில் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குச் சென்றது அண்ணா சிலையடி இளைஞர் விளையாட்டுக் கழகம்.

(ம-108)







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**பணிப்பெண் தேவை**
இரண்டு பேர் கொண்ட குடும்பத்தில் தங்கி நின்று சகல வீட்டுப் பணிகளையும் செய்வதற்கு 36 வயதிற்குட்பட்ட ஒரு பணிப்பெண் உடன் பணிக்கு தேவை.
021 226 0277

**நாய்க்குட்டிகள் விற்பனைக்கு**
65 நாள்கள் நிரம்பிய அல்சேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. (ஊசி போட்டது. புத்தகத்துடன் உண்டு)
ம.அருளப்பு
ஏழாலை வடக்கு, ஏழாலை.
021 492 1162

**தென் இந்திய திருத்தல யாத்திரை**
நாள்கள்: 16 யாத்திரிகர்கள்: 10
ஆரம்பம்: 25.05.2016
தமிழ் நாடு .ஆந்திரா.கேரளா.கர்நாடகா. பாண்டிச்சேரி ஆகிய 5 மாநிலங்களுக்கு ஊடான யாத்திரை.60 இற்கு மேற்பட்ட ஆலயங்களை தரிசிக்கலாம்.உணவு. தங்குமிடம் போக்குவரத்து. விமான ரிக்கற் அனைத்தும் விஷேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
ஒரு சில ஆசனங்கள் மட்டுமே இருப்பதால் பதிவுகளுக்கு முந்துங்கள்.
தொடர்புகளுக்கு:
கலாநிதி T. ஸ்ரீரங்கநாதன் 077 768 0102
ராஜன் (மகன்) 077 736 2154
FB:Sridevisriranganathan.thuraiappa

## சமநிலையை நோக்கி நகர்கிறது வடக்கு - வடமேல் மத்தி. ஆட்டம்

யாழ்ப்பாணம், மே 6

19 வயதுக்கு உட்பட்ட அணிகளுக்கு இடையில் நடத்தப்படும் மாகாண மட்டத் துடுப்பாட்டத் தொடரில் தற்போது நடை பெற்றுவரும் வடக்கு, வடமேல் மாகாண மத்திய அணிகளுக்கு இடையிலான ஆட்டம் சமநிலையை நோக்கி நகர் வதற்கான வாய்ப் புக்கள் அதிகமாகி யுள்ளன.

நாணயச் சுழற்சி யில் வெற்றிபெற்ற வடக்கு அணி முத லில் களத்தடுப் பைத் தீர்மானித் தது. இதன்படி முத லில் துடுப்பெடுத்தா டிய வடமேல் மாகாண மத்திய அணி 171 ஓட்டங்க ளுக்கு சகல இலக் குகளையும் இழந் தது. அதிகபட்சமாக டி சில்வா ஆட்ட மிழக்காமல் 97 ஓட்டங்களையும் ரண்டிக 37 ஓட்டங் களையும் பெற்ற னர். பந்துவீச்சில் வடக்கு மாகாணத் தின் சார்பாக கபில் ராஜ் 4 இலக்கு களையும், மதுசன் 3 இலக்குகளை யும், சிறிவர்த்தன 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக்களமிறங் கிய வடக்குக்கும் சீரான இடைவெளி யில் இலக்குகள் சரியத்தான் செய் தன. நாள் முடிவில் வடக்கு 6 இலக்கு களை இழந்து 74 ஓட்டங்களைப் பெற் றது. அதிகபட்சமாக தேவபிரசாத் ஆட்ட மிழக்காமல் 15 ஓட் டங்களையும், யது சன் 15 ஓட்டங்க ளையும் பெற்றனர். பந்துவீச்சில் வட மேல் மாகாண மத்திய அணியின் சார்பாக சயித் 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.

(ம-23)

**அச்சகத்துறையில்**
எந்தவொரு பிறிண்டிங் நிறுவனமும் வழங்காத, வழங்கமுடியாத
நியாய விலை. சகல பிறிண்டிங் வேலைகளுக்கும்
கொழும்பு பிறிண்டேர்ஸ் கே.கே.எஸ் வீதி. 077 1974 875

**விற்பனையாளர் தேவை**
யாழ்.மாநகர சபைக்கு அண்மை யாகவும் ஆங்கில, கணினி அறிவு கொண்ட ஆண், பெண் விற்பனையாளர் தேவை.
வேலை நேரம்
8.00am- 5.00pm
077 044 4496

**British College of Higher Studies**
வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்
Settlement Visa மூலமாக UK செல்பவர்களுக்கான
IELTS *Life Skills*
வடக்கு மாகாணத்திலேயே அதிகப்படியான மாணவர்களை பயிற்றுவித்து பரீட்சையிலே அனைவரையும் வெற்றிபெறச் செய்யும் ஒரேயொரு நிறுவனம்.
100% பயிற்சி → 100% வெற்றி
Student, Migration Visa மூலமாக UK செல்பவர்களுக்கான
IELTS (Academic / General)
ஆரம்பத்தில் பயில சிரமப்படுபவர்களுக்கு பிரத்தியேக வகுப்புகள் மூலமாக கூடுதல் பயிற்சிகள் வழங்கப்படும்
புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
No.15 , Sirambiyady Lane (Off Stanley Road), Jaffna.
(Above Sathosa SM & Near Ariyakulam Junction)
Tel : 021-2224550
Hotlines: 0777585913,0777222422, 0714299935

**காணி வீடு விற்பனைக்கு**
ஈவினை மத்தி, புன்னாலைக்கட்டு வனில் 17 பரப்பு 10 குளி அளவுடைய கிணற்றுடன் கூடிய காணி, வீடு விற்பனைக்கு உண்டு. பிரித்தும் கொடுக்கப்படும்.
தொடர்புக்கு :
077 401 4328



**JOB VACANCY**
**Lecturers**
The following vacancies exist at IIS CITY CAMPUS for immediate engagement.
**Lecturers (Visiting)**
Computing / IT
**Network Security / Web Technologies**
- Should be a Degree holder in relevant Field
- Should have an indepth knowledge & Industrial experience
- Fluent in English

interested applicants are invited to send in an updated CV to reach the undersigned by Post or E-mail on before 10th May 2016
Director HR
IIS CITY CAMPUS
200 Sivan Pannai Road,Jaffna
Tel :021 222 8060
E- mail:iis@iis.edu.lk

**மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி**



தோற்றம் 23.04.1934 மறைவு 07.05.2013
அமரர் **தாவீதுப்பிள்ளை அல்போன்ஸ்**
(முன்னாள் ஊழியர் பரந்தன் இரசாயனபொருள்கள் கூட்டுத்தாபனம் )

கனிவான உங்கள் பேச்சு
காருணியமான உங்கள் மனசு
பரிவான உங்கள் பார்வை
பாசத்தால் ஊற்றெடுக்கும் இதயம்
இருக்கும்போது நீங்கள் கொண்ட அன்பு
எப்போதும் எம்மனதில் நீங்காது.
ஆண்டுகள் மூன்று ஓடிப் போனாலும்
அன்புடனே உங்களை நாம் நினைக்கின்றோம்
என்றும் உங்கள் நினைவுகளுடன்
பேரப்பிள்ளைகள்.

**உலக கரிசனை / World concern** **கேள்விப்பத்திரம் கோரல்**
புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட தேராவில் பகுதியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பதற்கான கேள்விப்பத் திரங்கள் கோரப்படுகின்றன. கேள்விப்பத்திரங்களை துரை வீதி, முள்ளியவளை, முல்லைத்தீவில் அமைந்துள்ள உலக கரிசன (தொலை பேசி - 021-2061009) அலுவலகத்திலோ அல்லது கீழ் குறிப்பிடப்பட்ட முகவரியில் அமைந்துள்ள கொழும்பு தேசிய அலுவலகத்திலோ வார நாட்களில் 09.05.2016 முதல் காலை 9.00 மணியிலிருந்து மாலை 4.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.
பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கீழ் குறிப்பிடப்பட்ட எமது கொழும்பு முகவரிக்கு 16.05.2016 அன்று பி.ப 4.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பபடல் வேண்டும்.கேள்விப்பத்திரங்கள் தொடர்பான முடிவுகள் பின்னர் எழுத்துமூலமாக அறிவிக்கப்படும். மேற்படி கட்டட வேலைகள் 01.06.2016 க்கு முன்பதாக ஆரம்பிக்கப்படல்வேண்டும்.
குறிப்பு:- கேள்விப்பத்திரங்களை மீளளிக்கப்படாத தொகையாக 2000/- ரூபாயை செலுத்தி பெற்றுக் கொள்ள முடியும்.
Country Director
World Concern Development Organization
No: 35/3C, Samudrasanna Road
Mt. Laviniya
Tel:- 011 - 2723650

அட்ஷய திருதியை அழைப்பு - 09.05.2016
சிறி அமலாவின் **சிறிராம் ஜுவல்லர்ஸ்**
ஆயிரக்கணக்கான நகைகளின் கண்கவர் அணிவகுப்பு
அக்ஷய திருதியை தினத்துக்காக
அதி நவீன டிசைன்களை அறிமுகம் செய்வதோடு நம்ப முடியாத விசேட விலைக் கழிவுகள் வழங்கப்படும்.
அன்றைய தினத்தில் உங்கள் சிரமத்தை தவிர்க்க முன்கூட்டியே ஆபரணங்களை பதிவு செய்து கொள்ளுங்கள்.
அன்றைய தினம் நகைகள் கொள்வனவு செய்யும் அனைவருக்கும் விஷேட பரிசுகள் காத்திருக்கின்றன.
158, 193, கஸ்தூரியார வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021 222 8334/077 773 0567



உ
அக்ஷய திருதியை திருநாளிலே தங்க நகைகளை வாங்கி ஐஸ்வரியத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்
**ஸ்ரீ சிவாஞ்சனா ஜுவல்லறி**
SRI SIVANCHCHUNA Jewellery
தங்கப்பவுண் நகை வியாபாரம்
Manufacturers Gold Jewels
149A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 9227, 077 711 0220



**வினோ நகைப் பூங்கா**
என்றும் குறையாத ஐஸ்வர்யத்தை அள்ளித் தரும் அக்ஷய திருதியை திருநாளாம் 09.05.2016 அன்று எமது வினோ நகைப் பூங்காவில் தங்க நகைகளை கொள்வனவு செய்து ஐஸ்வர்யத்தை அள்ளிச் செல்ல அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்
அக்ஷய திதி அன்று காலை 7 மணிமுதல் மாலை 9 மணிவரை வாடிக்கையாளரின் நன்மை கருதி கடை திறந்திருக்கும்.
குறிப்பாக 08.05.2016 அன்று வாடிக்கையாளர்களின் நன்மை கருதி எமது ஸ்தாபனம் திறந்திருக்கும் என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.
எமக்கு வேறு கிளைகள் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.
185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021 222 5394
021 222 9494
Fax: 021 222 2824



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.05.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.